# கம்பர் விருந்து

வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., பி. எல்.
தமிழ்ப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

முதற்பதிப்பு: ஆகஸ்ட், 1968.

© மணிவாசகர் நூலகம்

விலை ரூ. 3 – 00

அச்சிட்டோர்:

ராயல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-14.

★

# கம்பர்
# விருந்து

# பதிப்பகத்தார் உரை

என்று தோன்றியது என்று சூழ்கலைவாணரும் உணர முடியாத தொன்மை உடையது தமிழ் மொழி. இத் தமிழ் மொழியில் ஒப்பற்ற பெருமை உடையவர் கம்பர். இவரை யொத்த பெருங் கவிஞர்கள் தமிழ் மொழியைத் தம் காவியப் படைப்பால் வளமாக்கினர். இலக்கிய உலகின் இமயம், கம்பரது இராம காவியம். கவிகட்கெல்லாம் அவர் சக்கர வர்த்தி; கம்பர் பிறந்ததால் தமிழ் நாடு கல்வியில் சிறந்தது. கம்பர் தமக்கு முன்தோன்றிய இலக்கியங்கள் யாவற்றையும் கற்று உணர்ந்ததால், தம் பெரும் இலக்கியப் படைப்பின் வாயிலாக என்றுமுள தென்தமிழின் பரப்பையும் பண்பை யும் அளந்து காட்டுகின்றார்; மானிடப் பண்புகளைத் தம் குறி களால் காட்டி உலகை உய்விக்கின்றார்.

உலகப் பெருங் காவியங்களுள் ஒன்றாக மதிக்கத்தக்க கம்பராமாயணத்தினைப் பரப்பும் பணியில் பலர் ஈடுபட்டனர்; ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுள், இராமகாதை என்னும் அப் பார காவியத்தினைச் சுருக்கி அளித்த வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார்; ஆங்கில முறையில் திறனாய்வு செய்து ஆங்கில மொழி மூலமாகக் கம்பன் புகழ் பரப்பிய அறிவு ஞாயிறு வ. வே. சு. ஐயர்; கம்பன் காவியம் முழுமைக்கும் உரையெழுதிய வை. மு. கோ; திருந்திய பதிப்பினை அரும் பாடுபட்டுக் கொணர்ந்த அறிஞர் வையாபுரிப் பிள்ளை; கல்லூரி களிலும் மேடைகளிலும் நாப்பறை கொண்டு முழங்கிய சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை கற்றாரும் மற்றாரும் மனங் கொள்ளுமாறு கம்பர் கவிநயத்தினைச் சொல்லிச் சுவைக்கச் செய்த ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்; பட்டிமன்றம் வாயிலாகக் கம்பனைப் பரப்பிய பாஸ் கரத் தொண்டைமான்; எளிய அழகிய முறையில் கம்ப

சித்திரம் வரைந்த பி. ஸ்ரீ. ஆச்சாரியார் ஆகியோர்கள் கம்பன் புகழ் பரப்பும் திருப்பணியில் ஈடுபட்டோர். இத்திருக்கூட்டத்துள் ஒருவராக விளங்குபவர் திரு. கோ. சு. பிள்ளை. இதுவரை வெளிவந்த கம்பராமாயணப் பதிப்புக்கள் யாவற்றிலும் தலை சிறந்த திருந்திய பதிப்பினை வெளியிடும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்பதிப்பின் வேந்தாக விளங்கித் தோன்றும் திருவாளர் பேராசிரியர் கோ. சு. பிள்ளை அவர்கள், கம்பர் விருந்தினை இப்போது நமக்குப் படைக்கின்றார்கள். இதற்குமுன் வள்ளுவர் விருந்தைத் தெள்ளுதமிழில் வழங்கியும், அப்பர் விருந்தை அழகு தமிழில் அளித்தும், மாணிக்க விருந்தை ஒன்பான் சுவையுடன் படைத்தும் பல வாசகர்களின் அறிவுப் பசியாற்றிய பிள்ளையவர்கள், கம்பர் விருந்தைக் கவினோடு படைக்கின்றார்கள். பிள்ளையவர்களின் விருந்தினைப் பல்கால் சுவைத்து உண்டவர்களும் கம்பரன்பர்களும் நீண்ட நாள் விரும்பிக் கேட்டதன் பயனாக அளிக்கப் பெறுவதே இவ்விருந்தாகும்.

இவ்விருந்தில் கம்பரின் புலமை வீறு, காவிய ஆக்கம், காவிய மாண்பு, சொல்லாட்சிச் சிறப்பு, பாத்திரப் படைப்பு, கம்பனைக் கற்கும் முறை, பதிப்பு நெறி முதலியன விளக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சிறந்த நூலினை வெளியிடும் வாய்ப்பினை அளித்த பேராசிரியர் அவர்களுக்கு நன்றி. இந்நூல் சிறப்பாக வெளிவரத் துணைசெய்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு ச. மெய்யப்பன் M.A. அவர்களுக்கும் நன்றி.

சிதம்பரம்

ச. முத்துப்பழநியப்பன்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முப்பெரும் கவிஞர்கள் | 5 |
| 2. | கம்பராமாயணத்தின் பெருமை | 25 |
| 3. | கம்பன் கண்ட இளங்கோ | 30 |
| 4. | கம்பன் சொல் நயம் | 37 |
| 5. | கம்பனின் நகைச் சுவை | 49 |
| 6. | வீரச் சுவை | 61 |
| 7. | சித்திரத் தாமரை | 66 |
| 8. | தன் நேர் இல்லாத் தம்பி | 76 |
| 9. | அங்கதனின் அங்கதம் | 84 |
| 10. | துன்பத்தும் துணையாம் தூயவன் | 92 |
| 11. | திருவடியின் பெரு வடிவம் | 98 |
| 12. | காந்தமாமணி | 103 |
| 13. | சூர்ப்பநகையின் சூழ்ச்சி | 111 |
| 14. | கம்பராமாயணப் பதிப்பு | 119 |
| 15. | கம்பராமாயணத்தில் பாட வேறுபாடுகள் | 131 |

# முப்பெரும் தமிழ்க் கவிஞர்கள்

திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் சிறந்த புலவர்களேயாயினும், திருவள்ளுவரால் குறளைத்தான் பாட முடியும். கண்ணகி காவியம் போன்றதோர் காவியத்தைக் கனவிலும் கருதியிருக்க மாட்டார். அது போலவே, இளங்கோவடிகளாலும் சிலப்பதிகாரத்தைப் பாடாமல் இருந்திருக்க முடியாது. ஆனால், குறள் வெண்பாவாற் பாடும் குறிப்பே அவரிடம் தோன்றியிருக்காது. இராமாவதாரத்தைப் பாடுவதற்கென்றே கம்பன் பிறந்திருக்கிறான். 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற சொல் வழக்கு கம்பராமாயணம் தோன்றிய காலத்திலேயே தோன்றிவிட்டது. அது என்றும் நிலவி நிற்கும். ஒரு பெரிய அறிஞர் நாட்டிலே தோன்றினால், அந்த நாடும் அறிவிற் சிறந்து பெருமையடையும். கம்பன் கவிதை தோன்றிய நாள் முதல் அதனைப் பலரும் பல இடங்களிலும் படிக்கத் தொடங்கித் தமது கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ளலாயினர். கம்பன் கல்வியிற் பெரியனாதலால், தமிழ் நாடும் கல்வியிற் சிறந்து விளங்குவதாயிற்று. அதைத்தான் பாரதியார்,

“ கல்வி சிறந்த தமிழ்நாடு — உயர்
கம்பன் பிறந்த தமிழ் நாடு”

என்று காரிய காரண முறையில் வைத்து விளக்கிப் பாடினார்

க—1

திருவள்ளுவரைப் போல் கம்பனும் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு அளவிட முடியாதது. தமிழுக்குக் "கதி"யாவார் கம்பனும் திருவள்ளுவரும் என்று கூறுவது வெறும் வார்த்தையன்று. அவர்களோடு சேரன் தம்பியையும் சேர்த்துக் கொள்ளலாம். திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் கம்பன் நன்கு படித்துத் தனது மாபெருங் காப்பியத்திலே பெரும்பயன் விளைத்துக் காட்டியிருக்கிறன். மனித வாழ்க்கைக்கு வேண்டிய உயரிய இலட்சியங்களைத் திருவள்ளுவர் தமது திருக்குறளில், ஓர் அரசன் தன் குடிமக்களுக்கு ஆணையிடுவதுபோல் அறிவித்திருக்கிறார். இதைப் 'பிரபு சம்மிதம்' என்று வடமொழியிற் சொல்வர். இளங்கோ அடிகள் ஒரு நண்பனைப்போல நல்வழியைக் காட்டுகிறார். இதனைச் 'சுகிருத் சம்மிதம்' என்பர். கம்பன் ஒரு காதலி காதலனைக் கடைக்கண் பார்வையால், இனிய மொழி இங்கிதங்களால் செலுத்துதல்போல் அறிவிக்கிறார். இதனைக் 'காந்தா சம்மிதம்' என்பர்.

கம்ப ராமாயணம் ஒரு கல்விக் களஞ்சியம்; கேள்விச் செல்வம்; அறிவின் சிகரம்; ஒழுக்கத்தின் உறை வளம்; கவிதையின் கொலுபீடம்; செவிநுகர் கனிக் கொத்து; சிந்தனைச் சுடர்.

தமிழ் மொழியின் நான்கு வகைப் பாக்களுள், முதலாவதாகிய வெண்பாவால் வள்ளுவர் பாடினர். இரண்டாவதாகிய அகவற் பாவால் இளங்கோவடிகள் பாடினர். அதனுள் அவர் சில வரிப் பாடல்களையும் அழகுறப் பாடி வைத்துப் பின்வரும் புலவருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினர். அவற்றைப் பின்பற்றிக் கம்பன் கலிப்பா, வஞ்சிப்பா எனும் இவற்றின் இனங்களாய் எழுந்த விருத்தயாப்பினல் இராமாவதாரத்தைப் பாடினன். இம் முப்பெரும் புலவரும் தோன்ருது போனல் தமிழ் மொழி தன் முழு வளர்ச்சியையும் பெற்றிருக்க முடியாது.

கம்பனின் தனிச் சிறப்பு

கம்பன் உலகப் பெருங் கவிஞர்களுக்குள்ளே மிகவும் தலை சிறந்தவன். கம்ப ராமாயணம் வான்மீகத்தின் மொழி பெயர்ப்புத்தானே என்று எளிதாய் நினைத்துவிடக் கூடாது. பெரிய காப்பியம் எழுதிய எந்தப் புலவனும் தன் சொந்தமாக எதையும் எழுதிவிடவில்லை. ஹோமர், வர்ஜில், ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவர்களும் பிற நூல்களில், பிற மொழிகளில், உலக வழக்கில் பயின்று வந்த கதைகளைக் கொண்டே தமது காவியங்களை அழகுறப் பாடினார்கள். சிலம்புச் செல்வம் ஒன்றுதான் ஒரு மொழி பெயர்ப்பு நூலாகாது, தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் உரியதோர் ஒப்பற்ற நூலாய் மிளிர்கிறது. கம்பனுடைய வீறு கொண்ட புலமைத் திறனுக்கும், பரந்த கற்பனைக்கும், கவியின் ஆற்றலுக்கும் ஏற்றதாகக் கிடைத்தது வான்மீகி இராமாயணம். அதனைக் கண்டவுடன் கம்பனின் உள்ளம் துள்ளிப் பாய்ந்தது; அதிலே ஈடுபட்டது. அத்தகைய அழகிய கதை தனக்கும் புரியாத வடமொழியில் இருக்கிறதே, தமிழில் இல்லையே என்று எண்ணினான். தமிழில் அதை விடவும் சிறப்பாக அழகாகத் தானே பாடலாம் என்ற துணிவு பிறந்தது. ஆசை வளர்ந்தது. தமிழ் நாட்டவர்மேல் அன்பு ஊறியது. தனது திறமையைக் காட்ட ஓர் அரிய வாய்ப்பு கிடைத்ததே எனும் எக்களிப்பு ஏற்பட்டது. கவி வெறி கொண்டான். வடமொழியிலிருந்து தமிழ்ப் படுத்திக் கேட்டான். அதைத் தமிழாகத் தனதாகப் பாடினான். ஓர் இரசவாதியின் கைப்பட்டதும் இரும்பு பொன்னாவதுபோல், கம்பன் கவியொளி பட்டதும் வான்மீகத்தின மொழி பெயர்ப்பு கம்பராமாயணம் ஆகிவிட்டது. அதில் வரும் கதாபாத்திரங்கள் எல்லாரும் தமிழ் நாட்டவராகித் தமிழரின் மேன்மைக் குணங்களையும் வழக்க பழக்கங்களையும் கொண்டு காட்சியளிக்கின்றனர். கோசல நாடே தமிழ் நாடாக, ஏன் சோழ நாடாக மாறி விடுகிறது

## கம்பன் காட்டும் கோசலம்

ஓர் அரசன் செங்கோல் செலுத்துவதற்கு இன்றி யமையாச் சிறப்பினையுடையது நாடு. அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பலரும் பலவாறு கனவு கண்டனர். கம்ப நாடரும் ஒரு கனவு உலகத்தைக் கண்டமைத்தார் தமது மாபெருங் காப்பியத்தில். நாடென்ப நாடா வளத்தன என்பது பொய்யா மொழி. தன்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால் வலியச் சென்று பொழியும் செல்வம் உடையது எதுவோ அதுவே வள நாடு. அதற்கு முதலில் மருத நிலம் வேண்டும். கோசல நாட்டிலே கம்பர் கண்ட மருத நிலம் எப்படியிருந்தது?

" தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண் விழித்து
நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ"

என்று ஆடலும் பாடலும் அமைந்த இயற்கை அரங்கிலே மருதம் அரச கோலத்தில் கொலுவீற்றிருப்பதாகக் காண் கிறார் கவிஞர். எங்கும் இனிய பொழில்கள், நெடிய வயல் கள். அவ் எண்ணரும் பெருநாட்டிலே கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றிக் குவிந்து கிடந்தன. அந் நாட்டார் சுரங்கம் தொட்டனர், மணிகள் எடுத்தனர், தரங்கக் கடலைத் தாண்டிச் சென்றனர். வாணிகம் பெருகிச் செல்வம் மலிந்தது. அயோத்தி நகரின் கடை வீதியோ கண் கொள்ளாக் காட்சி. அங்கு இல்லையென்னும் பொருள் இல்லவே இல்லை. அத்திரு வீற்றிருக்கும் தீதுதீர் நியமத் தைக் கண்டபின் குபேரன் பட்டணமும் குன்றிப் போய் விட்டதாம். அந்நகரின் "ஆவணங் கண்டபின் அளகை தோற்றதே" என்று கை கொட்டுகிறான் கம்பன்.

ஆனால், இயற்கை நலம் பெற்றால் மட்டும் ஒரு நாடு சிறப்படைந்து விடுமா? நாடோ, காடோ, மேடோ பள்ளமோ, மக்கள் நல்லவர்களாக இருந்தால் அவர்கள் வாழும் நிலமும் நல்ல நிலமாக இருக்கும். ஒரு நாட்டிற்கு விளை நிலங்களுடன், தக்காரும் தாழ்விலாச் செல்வரும்; வேண்டும் என்கிறார் திருவள்ளுவரும். தங்கள் குலத்தின் இழுக்காத நற்குண நற்செய்கைகளையுடையவராய் மக்கள் ஒழுக்கம் சிறந்து விளங்கினால்தான் அவர் வாழும் நாடும் நல்ல நாடாகும். கோசல நாட்டில்

"கலம்சு ரக்கும் நிதியம் கணக்கிலா
நிலம்சு ரக்கும் நிறைவளம் நன்மணி
பிலம்சு ரக்கும் பெறுதற் கரியதம்
குலம்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்"

என்று கம்பன் அழகுற அமைத்துப் பாடுகிறான்.

இவ்வாறு ஒழுக்கத்தில் ஓங்கிய கோசல நாட்டு ஆடவரும் பெண்டிரும் கல்வி கேள்விகளிலும் சிறந்திருந்தனர். பன்னருங்கலை தெரிபட்டி மண்டபங்களில் செவிநுகர் கனிகளை இனிது மாந்தினர். மயிலூர் கந்தனையனையார் நந்தன வனங்களில் வித்தைகள் பயின்றனர். சந்தன வனத்திலும் சண்பகக் காவிலும் சுந்தர வனிதையர் பந்துகள் ஆடினர். இவ்விதம் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒன்று கூடினால் நாடு எவ்வாறு இருக்கும் என்பதைக் கம்பன் அமைத்த கவிபுலகிலேதான் நாம் கண்டு தெரிய வேண்டும்.

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாரு மில்லை யவை வல்ல ரல்லாருமில்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ."

என்று எழுகிறது கவியின் கனவு. அந்த நாட்டிலே எங்கு நுழையினும் விருந்தும் விழாவுமே பொலிந்து விளங்கின. பெண்கள் பெற்ற கல்வியால் ஆடவர் பெற்ற செல்வம் விருந்து என்னும் பெரும் பயன் விளைக்கின்றதாம்.

" பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே."

இவ்வாறு செழிப்பும் செல்வமும் களிநடம் புரிந்த அக்கம்பன் நாட்டிலே வேண்டுவார் வேண்டுவன யாவும் எளிதிற் கைகூடியதால் வறுமை என்பதை மாந்தர் கேட்டும் அறியார். வறுமை எங்கு இல்லையோ அங்கே பொய் சூது களவுக்கும் இடம் இல்லை. விரும்பிக் கொடுப்பதை வாங்கவே அங்கு ஆள் இல்லை என்றால், வலிந்து பொருள் பறிக்கும் வழக்கம் ஏது? ஆதலால் காவலுக்கும் அவசியமில்லை. இதனையே கம்பன்,

" கள்வா ரிலாமைப் பொருட் காவலு மில்லை; யாதுங்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ"

என்று பாடினான். இவ்வாறு வறுமையும் அற்று, அதன் விளைவாகப் பொய்யும் களவும் பொய்த்து நீங்கவே, சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி அந்நாட்டு மக்களை கனவிலும் வருத்தி அறியாது. அவர்கள் மனம் செம்மையில் தோய்ந்து தூய்மை அடைந்தது. ஆடவர் ஐம்பொறிகளை வென்றடக்கினர். மங்கையர் தமது கண்ணம்புகளை நெறியிற் காத்தனர். மனநல முடையார் உடல் நலம் பெறுதல் ஒருதலை யாகலின் பிணிவாய்ப்பட்டு இளமையிலேயே இறந்து படுதல் அந்நாட்டில் இல்லை. நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். தலை மயிர் கொக்கக் கொக்க

நரைத்துத் தளர் நிலை யெய்தும் முதுமை வந்துற்ற பின்னரே, மரத்தினின்றும் நழுவும் பழம்போல் முதியோர் மறைதல் அந்நாட்டின் இயல்பு. ஆதலால் அங்குக் கூற்று வனுக்கே வேலையில்லை என்று கவியரசர் பாடுகிறார்.

“ கூற்ற மில்லையோர் குற்றமில் லாமையாற்
சீற்ற மில்லைதஞ் சிந்தையிற் செம்மையால்
ஆற்றல் நல்லறம் அல்லதி லாமையால்
ஏற்ற மன்றி இழித்தக வில்லையே.”

எனவே, செல்வம் கொழித்த அந்நாட்டு மக்களின் இன்ப வாழ்க்கை நல்லறத்தையே அடிப்படையாகக் கொண்டிருந் தது. பல்குழுவும் பாழ்செய்யும் உட்டகையும் அங்கில்லை.

(அறம் என்றும் அழியாதது. கோசல நாடு அறம் பயின்று சிறந்ததால் அதற்கு அழிவில்லை. ஆனால், அரக்கர் நாடாகிய இலங்கையிலே அறத்தைத் தவிர ஏனை வளங்க ளெல்லாம் இராவணன் ஆற்றிய அருந்தவத்தால் வலிந்து கைவரப் பெற்று, அரக்கர் மனத்தைக் களிப்பூட்டின) அஞ்சனை குமரன் இலங்கையிற் கண்ட காட்சி,

“ மரமடங்கலும் கற்பகம் மனையெலாம் கனகம்
அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரமடங்கிவந் துழையராய் உழல்பவர் ஒருவர்
தரமடங்குவ தன்றிது தவம் செய்த தவமால்.”

என்று சித்திரிக்கப் படுகிறது. ‘களிக்கின்றாரலாற் கவல்கின் றார் ஒருவரைக் காணேன்” என்று அநுமனும் விம்மிதம் கொண்டான். ஆயினும், மாருதச் சுழலும், கதிரின் வெம் மையும், பெரும்புயலும், கூற்றுவன் பாசமும் நுழையாத அவ்வீரத் திருநகருள் அழிவிலா அறமும் நுழைந்தறியாது என்று கூறி, ஆதலால் அவ் இலங்கை அழியும் என்பதைக் கம்பன் குறிப்பாக உணர்த்துகிறான்.

"கறங்கு கால்புகா கார்புகா கதிர்புகா மறலி
மறம்பு காதினி வானவர் புகாரென்கை வம்பே
திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
அறம்பு காதிந்த அணிமதிட் கிடக்கைநின் றகத்தின்"

ஆகவே, வளமுடைய நாட்டிலும் மக்கள் அறத்துடன் ஒழுகினால்தான் அந்நாடு சிறப்புறும் என்பது விளக்கமுறும்.

பழந்தமிழ் நாட்டை நினைத்துக்கொண்டே கம்பன் கோசல நாட்டை வருணித்திருக்கிறான். அதனால்தான் 'கள்வா ரிலாமைக் காவலு மில்லை' என்று அவனுக்குப் பாட முடிந்தது. பண்டைத் தமிழ் நாட்டின் நிலையை நாம் சிலப்பதிகாரத்திலே காண வேண்டும். பாண்டிய மன்னர் ஆட்சியில் விலங்குகளுங்கூட பகையுணர்ச்சி யொழிந்து அன்பு கொண்டு ஒழுகினவாம். பொல்லாத கரடிகளும் புற்றீசல்களை வருத்தியதில்லை. புலியினங்கள் மான் கூட்டத்தோடு பொருந்தி வாழ்ந்தன. முதலையும், பாம்பும், பேயும், இடியும் மக்களை வருத்தாதிருந்தன. இங்ஙனம் தென்னவர் செங்கோல் நலத்தினை இளங்கோவடிகள் நயமுறச் சித்திரித்துக் காட்டுகிறார்.

"கோள்வ லுளியமும் கொடும்புற் றகழா;
வாள்வரி வேங்கையு மான்கண மறலா;
அரவுஞ் சூரும் இரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா;
செங்கோற் றென்னவர் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே."

பாண்டியர் ஆட்சியில் கதவில்லா வீடுகள் பலவாக இருந்தன. வீடுகளுக்குக் கதவுகளே தேவையில்லாதிருந்தனவாம். ஏனெனில், கள்வர் பயம் அங்குக் கிடையாது. அரசன் ஆணை வேலியாக நின்று காத்ததேயன்றி வேறு வேலி வேண்டப்படவில்லை. ஏழை அந்தணனை கீரந்தை

என்பவன் வீட்டை இரவிற் சென்று தவருகத் தட்டி அவ் வீட்டின் உள்ளாரை அஞ்சும்படி செய்த குற்றத்திற்காகப் பாண்டியன் அவ்வாறு தட்டிய தன் கையையே வெட்டி வீழ்த்திப் பொற்கைப்பாண்டியன் என்னும் புகழ்ப் பெயர் சூடினுன் என்பது வரலாறு. இதனை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிருர் :

"உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்
அரைச வேலி யல்ல தியாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
இன்றவ் வேலி காவா தோவெனச்
செவிஞ்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்
திறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை
இன்னுங் கேட்டி நன்வா யாகுதல்."

இதனுலேயே மெகஸ்தனீஸ் என்னும் வரலாற்றுக் குறிப்பாசிரியர் தாம் எழுதிய 'இண்டிக்கா' என்னும் நூலில், பாண்டி நாட்டில் கள்வர் பயமில்லாதிருந்தமை யால், மக்கள் இரவில் வீட்டுக் கதவுகளை அடைக்காமலே படுத்து உறங்கினர் என்று எழுதியுள்ளார். சோழநாட்டுத் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்து வெள்ளிடை மன்றங் களில் பல்வகைப் பண்டங்களும் பொதி பொதியாகக் கட் டிப் பெயர் பொறிக்கப் பட்டு யாதொரு காவலும் இன்றிக் கிடக்கும். அவ்வூரில் வாழ்வோரெல்லாம் செல்வர்கள் ஆத லாற் களவு செய்ய வேண்டும் என்று நினைப்பார் இல்லை. மேலும், அப்படி ஒருவன் களவு என்று கனவில் நினைத்

தாலுங்கூட அவனை நடுங்கும் படியாகச் செய்துவிடும் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள வெள்ளிடை மன்றம். இதனைச் சிலப்பதிகாரத்தில்,

“ வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்துக்
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஒரீஇய வாகிக்
கட்போர் உளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயாது
உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்”

என்னும் அடிகளால் அறியலாம்.

இக்காலத்தில் அமெரிக்கா முதலிய மேலை நாடுகளுக்குச் சென்று கண்டுவருவோர், அங்கு வீதிகளிற் பண்டங்கள் விற்பனைக்கு ஆள் இன்றி அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும், வேண்டுவோர் அங்குள்ள கிண்ணங்களில் உரிய விலைப்பணத்தைப் போட்டுவிட்டுப் பண்டங்களை எடுத்துக் கொள்வார்கள் என்றும் சொல்லிச் சொல்லி வியப்பெய்துகின்றனர். அதே நிலைதான் நமது பண்டைத்தமிழ் நாட்டிலும் இருந்து வந்தது என்பதை நம் தமிழ் இலக்கியத்திலே நாம் கண்டுகளிக்கலாம்.

## கம்பரின் சொந்தப் படைப்பு

வான்மீகி இராமனுக்குக் காதல் என்பதே இன்னதென்று தெரியாது. அவன் சீதையைக் கண்டதும் இல்லை; காதல் கொண்டதும் இல்லை; உள்ளம் கலந்ததும் இல்லை; சீதையும் அப்படியே. வில்லை ஒடித்தபின் நடந்த திருமணத்தின் போதுதான் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இது தமிழ்நாட்டு மரபுக்கு முற்றிலும் மாறுபட்ட வழக்கம். கம்பருக்கு மனம் ஒப்பவில்லை. பின் என்ன செய்தார்? சிறி

தும் தயங்காமல் கதையையே மாற்றிவிட்டார். மிதிலைக் காட்சிப்படலம் கம்பருடைய தனிப்பட்ட அருமையான சொந்தப்படைப்பு. தெருவழியே முனியுடன் சென்று கொண்டிருந்த இராமன் சீதையைக் கண்டான். சீதையும் இராமனைக் கண்டாள். ஒருவர் இதயத்தில் ஒருவர் குடி புகுந்தனர். இவர்களிடையே இவ்வாறு காதல் நிகழ்ந்தபின்னரே இராமன் வில்லை ஒடித்துப் பெண்ணை மணக்கிறான். இது தமிழ்நூல் மரபு; தமிழ் நாட்டு வழக்கம். கம்பர் தமது கற்பனைத் திறனால் இராமனைத் தமிழனாகச் செய்து விட்டார். வான்மீகி இதனைக் கனவிலும் கருதியதில்லை. இன்னும் இராவணன் சீதையைத் தூக்கிச்செல்லுதல், தாரையின் மாண்பு போன்ற எத்தனையோ இடங்களில் கம்பர் முக்கியமான பெரும் மாறுதல்களைச் செய்து வான்மீகியை விடப் பன்மடங்கு சிறந்த கவிஞராகக் காட்சி யளிக்கிறார்.

**கம்பரின் தமிழ்ப்பற்று**

தமிழ் மொழியிடத்தும், தமிழ் நாட்டிடத்தும் பற்றுக் கொண்ட எவரும் கம்பரைப் போற்றாமல் இருக்க முடியாது. கம்பராமாயணத்தால் தமிழ் மொழி பன்மடங்கு உயர்வும், பெருமையும், மேன்மையும், செழுமையும் அடைந்திருக்கிறது. கம்பருக்குத் தமிழ்மொழியினிடத்தே மட்டற்ற மதிப்பும் அன்பும் பற்றுதலும் உண்டு. என்றும் உள தென் தமிழை இயம்பியிசை கொள்ளவே பிறந்தவர் கம்பர். வேதங்களையுடைய வடமொழியினும் உயர்ந்ததாகத் தமிழைச் சிவபெருமானே படைத்தார் என்ற நம்பிக்கையை உடையவர் கம்பர். அவருடைய சிவபக்தியின் சீலம் அவர் காவியத்தில் நூற்றுக்கணக்கான இடங்களில் வெளிப்படுகிறது. தமிழ் நாட்டிடத்தே பற்றுக் கொள்வதில் அவர் எந்தத் தமிழனுக்கும் பின்வாங்கியவரில்லை.

“அத்தி ருத்தகு நாட்டினை யண்டர் நா (டு)
ஒத்தி ருக்கும் என்றால் உரை ஒக்குமோ?

எத்தி றத்தினும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமி ழும்தந்து முற்றுமோ?''

என்ற பாடலை எத்தனைமுறை வேண்டுமானாலும் நாம் பாடிக்கொண்டே இருக்கலாம். இதையே தமிழன் முதன் முதல் பாடிய தமிழ்நாட்டு வாழ்த்துப் பாடல் என்று கொள்ளுதல் தவறாகாது. இதுபோல் வேறு எந்தத் தமிழன் பாடியிருக்கிறான்?

### கதை மாந்தரின் குண நலன்கள்

கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை (Characterisation) முன்னுக்குப்பின் முரண்படாமல், உலகியலுக்கும் இயற்கைக்கும் ஒவ்வும் முறையில் சித்தரித்துக் காட்டுவதில் கம்பராமாயணம் சாலச் சிறந்து விளங்குகிறது ஷேக்ஸ்பியருடைய கதாபாத்திரங்களின் குண குணங்களை விவரித்து நூல்கள் எழுதப்படுவது போல் இன்னும் கம்ப ராமாயணத்திற்கு எழுதப்பட வில்லை. அவ்விதம் எண்ணிறந்த நூல்கள் எழுதலாம். அவை ஒரு சிறந்த கலைக்களஞ்சியமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. கம்பர் காவியத்தில் ஒவ்வொரு பாட்டும் ஒரு சுவையுள்ள நாடகக் காட்சியாகத் திகழ்கிறது, இத்தகைய நாடகக் காட்சிகளை ஒன்பது சுவைகளும் ஊற்றெடுத்துப் பாயும்படி என்றும் அழியாத உயிரோவியங்களாய்ச் சித்தரித்திருக்கிறார் கம்பர். கம்ப ராமாயண விருத்தம், பதினாயிரத்தையும்செல்வச்செவி நுகர் கனிகள் என்றே சொல்லலாம். புகைப்படங்களின் நிழலை நாம் வெள்ளித் திரையில் கண்டு களிப்பதுபோல், சொல்லோவியங்களை இங்குக் கம்பரின் கற்பனைத் திரையிற் கண்டு களிக்கிறோம். இக்காவியத்திற் காணப்படும் உரையாடல்களும், செயல்களும், உணர்ச்சிகளும் நம்மைப் பரவசப்படுத்துவனவாகும். மனிதர்களைப் பற்றி மட்டுமல்லாமல், தேவர்கள் கடவுளர்களைப் பற்றியும் சமய உண்மை

களைப் பற்றியும் கம்பர் அருமை தோன்ற அழகுடன் பாடியிருக்கிறார். இரணியன் வதைப்படலம் கம்பருடைய ஒப்பற்ற மேதைத் திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டாக இலங்குகிறது.

## அணிகளின் தாய் உவமை

அணிகளுக்குள்ளே தலைமை வாய்ந்தது உவமையணி. அது மற்றை யணிகளுக்குத் தாயாகவும் உள்ளது. ஒரு புலவனின் சிறப்பு அவன் காட்டும் உவமை நயத்திலிருந்து புலனாகும். 'Homeric Simile, Miltonic Simile,' என்றெல்லாம் மேல்நாட்டினரும் பெருமை பேசுவர். கம்பருடைய உவமை நயங்கள் நம்மை ஒரு தனி இன்ப உலகிற்கே இழுத்துச் சென்று விடும் சில பழைய உவமைகளுக்குக் கூட புது மெருகு ஏற்றி அழகுடடுத்திக் காட்டுவார் கம்பர். கார்முகப்படலத்தில் நாணேற்றுவதற்காக வில்லைக் கொண்டு வந்து வைத்திருக்கிறது. இராமன் வில்லை எடுத்து ஒடிக்கிறான். இவ்விடத்தில் ஓர் அழகான உவமை. புதிதன்று பழையதே. அதாவது,

"புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
தீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயின் எதிர் கொண்டு
தான்மண நந் தனையமென விடுகந் தூதே"

-குறுந்தொகை -106

என்பது கபிலர் பாடல். நெய்யைப் பெய்தால் தீயானது அதனை விரும்பி எதிரேற்றது போலத் தலைவி தானும் தலைவனை எதிரேற்பதாகக் கூறுகிறாள். நெய்பெய் தீ எத்தகையதோர் அழகான காட்சி, பாருங்கள்! திருமணத்தின் போது ஓமத்தீயில் ஊற்றப்படும் நெய்யைத் தீ விரும்பி ஏற்றெழு

வதைப் பார்த்திருக்கிருள் தலைவி. ஆகவே, அவள் இங்ஙனம் கூற முடிந்தது. தீயைச் சுடர்விட்டுக்கிளர வளர்ப்பது நெய். நெய்யைக் கண்டவுன் அதனைப் பற்றுவதற்குத் தீ ஆவலுடன் மேலே குதித்தெழும். எதுபோல? கையிலே ஒரு வெல்லக்கட்டியை உயர்த்திப் பிடித்து நாய் முன் காட்டினுல், அது முன் கால்கள் இரண்டையும் தூக்கிக் கொண்டு குபீரென்று மேலே பாய்ந்து துள்ளி அவ்வெல்லத்தைக் கவர முயலும். அதுபோல நெருப்பும் நெய்யைக் கண்டு மேலே கிளம்பும்.

இது ஓர் அற்புதமான இயற்கைக் காட்சி. இதனைக் கபிலர் கூறினுர். அதனைக் கம்பர் படித்துச் சுவைத்திருக்கிருர். தகுந்த இடத்திற் பயன்படுத்துகிருர். சீதைமேல் கொண்டுள்ள காதலால், தன்னை விசுவாமித்திரர் எப்பொழுது உத்தரவு இடுவார், தான் வில்லை நாண் ஏற்றலாம் என்று இராமன் துடித்துக்கொண்டு இருந்தான். ஏறுபோல் வீறுகொண்ட இராமன் முகத்தை முனிவர் முடி துளக்கிப் பார்த்தார். பார்த்தவுடனே இராமன் குபீரென்று குதித்தெழுந்தான். நெய் பெய்த தீ மேலே உயர்ந்து எழுவது போல எழுந்தானும். தீயென்ருலும், அது மங்கிப் போய் அணையும் தறுவாயில் இருந்தால் நெய் பெய்ததும் மேல் எழும் ஆற்றல் இன்றி அணைந்து விடும். அதை நினைந்தே கம்பர் 'கொழுங்கனல்' என்கிருர். தீயிலே நெய்யைப் பெய்வது ஓம குண்டத்திலேயாதலால், இங்கு ஓம குண்டத்தின் நெருப்பையே கம்பர் சுட்டிக் காட்டுகிருர். நெய் என்று சொல்லாமல் 'ஆகுதி' என்கிருர். இராமனுக்கு இன்று திருமணம் நிச்சயமாகப் போகிறது அல்லவா? சீதையின் கலியாணத்தில் இராமனுக்கு உள்ள துடிப்பை விடப் புலவருக்கு அதைக் கூற அதிக ஆத்திரம்போல் காணப்படுகிறது. இராமன் வில்லை ஒடிக்கும் முன்னரே கம்பர் திருமணத்திற்கு வேண்டிய ஓமகுண்டத்தில் நல்ல

கொழுங் கனலை வைத்து நெய் ஊற்றி வளர்த்து விடுகிறார் ஓமத்தில் நெய்யை எடுத்து வார்க்கும் அகப்பைக்குச் சுருவம் என்று பெயர். அந்தச் சுருவத்தினால் நெய்யைக் கொழுங் கனலிலே ஊற்றும் பொழுது, நெய்யை உண்ணும் கர்வத்தால் தீயானது மேலே உயர்த்திய சுருவத்தின் அளவுக்கு, அது இருக்கும் இடம் நோக்கிப் பக்கென்று கிளம்பி வரும். தீ யெழுந்துவருகின்ற வேகத்தினாலும், வெப்பத்தினாலும் சுருவத்தையே சுட்டுப் பொசுக்கி விடுவது போலிருக்கும். அதுபோல இங்கும் விசுவாமித்திரர் வில்லாகிய சுருவத்தின் வழியாய், சீதையாகிய நெய்யைக் கொழுங் கனலாகிய இராமனை நோக்கிக் காட்டினாராம். நெய்யைக் காணும் செழுமைச் செந்தீ நெய்யை ஏந்திய சுருவத்திடம் கதுமெனப் பாய்வது போல், சீதை மேற்கொண்ட காதல் வெப்பத்துடன் துடிக்கும் வளவிய இளமை படைத்த வீரனாகிய இராமன் வில்லை நோக்கிப் பாய்ந்தெழுந்தானாம். பின்னர் வில் பிழைக்கவா செய்யும்? அதுவும் ஒடிந்துவிட்டது. இக்கருத்துக்களை எல்லாம் இவ்வழகிய உவமையினுள்ளே பொழிந்து வைத்துக் கம்பர் பாடுகிறார்.

“பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கனல் என்ன எழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவர் ஆர்த்தார்
மொழிந்தனர் ஆசிகள் முப்பகை வென்றார்.”

இராமன் எழுந்த மிடுக்கைக் கண்டவுடனே வில் தொலைந்தது என்று தேவர்கள் முடிவு கட்டிவிட்டார்களாம். சீதையின் திருமணத்தை விரைவிலே முடித்து வைப்பதில் இராமனை விடப் புலவருக்கு அதிக ஆத்திரம் என்பதைக் கண்டோம். அடுத்த பாட்டில் இராமன் ஒரு வில்லை முறிப்பதற்கு முன்னர், கம்பர் காமனின் உதவி கொண்டு ஆயிரம் வில்லை முறித்து விடுகிறார். இவ்வாறு மன்மதன் ஆயிரம் வில்லை முறித்ததும், இன்னும் இராமன்

ஒரு வில்லே எடுக்கவில்லையே என்று கம்பர் ஏங்குவது போலிருக்கிறது.

"தூய தவங்கள் தொடங்கிய தொல்லோன்
ஏயவன் வல்வில் இறுப்பதன் முன்னம்
சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிரம் வில்லே அனங்கன் இறுத்தான்.

### வேல் திரும்பியமைக்கு மூன்று உவமைகள்

இனி மற்றுமோர் உவமையைப் பார்ப்போம். சீதையைத் தூக்கிச் செல்லும் இராவணனுக்கும் சடாயுவுக்கும் போர் நடக்கிறது. அதில் இராவணன் தன் வேலை எடுத்துச் சடாயுவின் மார்பை நோக்கி எறிந்தான். எறிந்த வேல் சடாயுவின் மார்பில் நுழைய மாட்டாமல் திரும்பி நிலத்திலே வந்து விழுந்தது. வேல் திரும்பி வந்ததற்கு மூன்று உவமைகள் தருகிறார் கம்பர்:

" பொன்னேக் கியர்தம் புலனேக்கிய புன்கணேரும்
இன்னேக்கிய ரில்வழி யெய்திய நல்விருந்தும்
தன்னேக்கிய நெஞ்சுடை யோகியர் தன்மைசார்ந்த
மென்னேக்கியர் நோக்கமு மாமென மீண்டதவ்வேல்,"

இங்குச் சடாயுவின் மார்பில் தைக்க மாட்டாமல் மீண்டு வந்த வேலுக்கு ஏன் மூன்று உவமைகளைக் கம்பர் கூறினார் என்பது கருதற்குரியது. மூன்றும் வெவ்வேறான மூன்று நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துவதற்கு எழுந்தனவாகும். சடாயுவின் மார்பை நோக்கிச் சென்ற வேலுக்கு, ஒரு வறிஞனை காமுகன் ஒரு விலை மாதினிடம் தன் காமப் பார்வையை ஒரு முறை பளிச்செனச் செலுத்திப் பின் வாங்கும் செயலை உவமை கூறினார். இது எவ்வளவு பொருத்தம் என்பதைச் சிந்தித்து உணர வேண்டும்.

விலைமாதை நோக்கியவனே தரித்திரன். அதனால் அவன் புன்கணோன். அவன் தான் பெற்ற காணும் செல்வ மாகிய கண்ணினைக் கொண்டு வேறு நல்ல பல காட்சிகளைக் கண்டு களிக்கலாம். அவற்றை விடுத்துக் கேவலம் ஒரு தாசியிடத்தில் தன் கண்ணைச் செலுத்துகிறான். இவ்வாறு தான் கண் பெற்ற பயனையும் இழப்பதால் அவன் புன் கணோன். அவன் நாடுவது இன்பம். இருட்டறையில் ஏதில் பிணம் தழுவினாற் போன்ற உணர்ச்சியைத் தரும் தாசி யிடம் உண்மையின்பம் கிட்டாது என்று உணராத அறி வினன் அவன். ஆகையாலும், அவன் புன்கணோன் ஆகிறான். மேலும் தன் கையில் பொன் இல்லாததால் வேசியைத் துய்க்க முடியவில்லையே என்று அவன் துயருழப் பதாலும் புன்கணோன் ஆகிறான். தம்மை நாடி வரும் மனிதரைக் கருதாது அவா கைப்பொருளையே விரும்பும் விலைமாதரைப் பொன்னோக்கியர் என்றார். வேலானது சடாயுவின் மார்பிற் புணருதற்கு வலியில்லாக் குறையால் ஊடுருவிப் பாயாமல், ஏழைக் காமுகனின் பார்வை பின் வாங்குவதுபோல் மீண்டது.

இனி, இரண்டாவது உவமையைக் காண்போம். பாய்ந்து வந்த வேலைச் சடாயுவின் மார்பு ஏற்றுக் கொள்ளாததற்கு, முகம் திரியாது இனிய நோக்குடன் வர வேற்கும் மடவாரை இல்லாத மனையின்கட் சென்ற விருந்தினரை உவமை கூறினார். வீட்டின் தலைவி அகம் கனிந்து முகம் மலர்ந்து இன்னுரை பகர்ந்து உபசரியாமற் போனால், விருந்தாளி முகம் வாடித் திரும்பி விடுவான். அது போல், சடாயு அவ்வேலுக்கு நேராகத் தன் முகத்தைக் காட்டாது ஒரு புறமாகக் கோணிக் கொண்டு தலையைத் திருப்பியபடியால் மார்பிற் பட்டும் உள் நுழைய முடியாமல், சுவரில் அறைந்த பந்துபோல் திரும்பிவந்ததாம். சடாயுவின் மார்பு அவ்வளவு உறுதியுடையதாய் இருந்தது. இன்னோக்

கியர் என்பது இனிய பார்வையுடைய மகளிர். இனி இன்னோக்கியர் என்பதற்கு, இல்=மனைவி; நோக்கியர்= அவர் கருத்தின் வழி ஒழுகும் கணவர் எனப் பொருள் கொண்டு, பெண் வழிச் சேறலையுடையார் என்றும் பொருள் கொள்ளலாம். மனையாளை யஞ்சி அவள் வழி யொழுகும் ஒருவனுடைய இல்லத்திற்கு வரும் விருந்தினர் நல்ல உபசரிப்பைப் பெறாது திரும்புவர் என்பது ஒருதலை. மனையாளை யஞ்சும் மறுமையிலாளனின் வீட்டிடத்தை இல் வழி என்றார்.

மூன்றாவது உவமைக்கு யோகியர் நிலையை அடைந்த கற்புடைப் பெண்டிரின் பார்வை நிலனோக்கிக் கவிழ்வது போல், அவ்வேலானது சடாயுவின் மார்பிற் படாது கீழே நிலத்தில் வந்து விழுந்தது என்று பொருள் கொள்ள வேண்டும். யோகியரிடத்தே காமத்தால் பெண்கள் செலுத்திய பார்வை பயனுறாது திரும்புவது போல் என்றும் சிலர் பொருள் கூறுவர். அது பொருந்தாது. ஆகவே வேலாயுதம் சடாயுவின் மார்பிற் சென்ற வேகத்திற்கும், உள் நுழைய மாட்டாது திரும்பினமைக்கும், திரும்பி நிலத்தில் வந்து விழுந்தமைக்கும் பொருந்துமாறு கம்பர் மூன்று உவமைகளைக் கூறியிருப்பது நினைத்து நினைத்து மகிழ்தற்குரித்தாகும்.

**கம்பனின் கற்பனைச் சித்திரம்**

அடுத்து கம்பர் காட்டிய காட்சி ஒன்றைக் காண்போம். ஒரு பெரிய கோபுரத்தைச் சிற்பி அமைத்தான். அது வானளாவ ஓங்கி உயர்ந்திருந்தது. அதில் பல பதுமைகள், பறவைகள், விலங்குகள் எல்லாம் சுதை மண்ணிலே செய்யப்பட்டு ஓவியங்களாக நிறுவப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு உயிருள்ளவைபோல் காணப்பட்டன. இயற்கைக்கு ஒத்த உண்மையாய், கலைத்திறம் சிறக்கச் செய்யப்பட்டிருந்தன. இவ் வுண்மைகளைத் தெரிவுறுத்தும் கவி

யொன்றைப் புலவர் பாடினார். எவ்வாறு பாடினார்? ஒரு காதல் சித்திரமாகக் கவியைத் தீட்டினார். கோபுரங்களிற் புறுக்கள் கூட்டம் கூட்டமாகக் குடியிருக்கும் என்பது எல்லார்க்கும் தெரியும். அந்தக் கோபுரத்தில் சுதை மண்ணினால் செய்த பல புறுக்களையும் சிற்பி அழகாக அமைத்திருந்தான். அங்கே குடியிருந்த ஓர் ஆண்புறு அங்கிருந்த ஓவியப் புறு ஒன்றை உண்மையிலேயே தன் பேடை என நினைத்து வந்து அன்புடன் அதன் அருகிலே அமர்ந்தது. பேடை, ஓவியம் ஆதலால், பேசாமல் ஆடாமல் அசையாமல் இருந்தது. தான் சிறிது பிரிந்து சென்றதற்குக் கோபித்துக் கொண்டுதான் அவ்வாறு ஊடியிருக்கிறது போலும் என்று நினைத்த ஆண்புறு பேடைமனம் இளகும்நேரம் எப்பொழுது வரும் என்று அதே சிந்தனையில் ஏங்கிப் போயிருந்தது அப்பொழுது தன் உயிருக்குயிரான உண்மைப் பெண்புறு கூவிக்கொண்டே ஆண்புறுவைத் தேடி வந்தது. அதன் அருகிலிருப்பது பொய்ப்புறு என்பதை உணராதமெய்ப்புறு கூவுகின்ற பேடை தன் பேடை என்பதை அறியாது வேறு எதுவோ என்று அதைக் கவனியாது இருந்தது அதனைக் கண்ட பெண்புறுவும் தன் சேவலின் அருகில் இருக்கும் மண்புறுவை வேறு ஓர் உண்மைப் பெண்புறு என்றே நம்பிவிட்டது. தன் சேவல் வேறு ஒரு பெண்ணோடு தனக்குத் தெரியாது காதல் நாடகம் நடத்துவதாகக் கருதிக் கொண்டு பெரிதும் மனம் வருந்தியது. இவ்வாறு மனம் கசந்த பெண்புறு உலக வாழ்வையே வெறுத்து, அருகிலுள்ள தேவலோகத்துக் கற்பகவனத்தில் தவம் செய்கின்ற முனிவர்கள் பக்கத்தில் துறவு கொள்ளச் சென்றதாம். வானிலே புறு பறந்து செல்வதைப் போலவே சந்தம் அமைத்துக் கவி பாடுகின்றார் புலவர். இப்பாடலைப் படிக்கும் பொழுது நமக்கு வானவூர்தியில் பறந்து செல்லும் உணர்ச்சி தோன்றாமல் இராது.

"தாவில் பொற் றலத்தினிற் றவத்தி னோர்கள் தங்குநாட்
பூவு யிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவியொத்த அன்புசேவல் கூவவந் தணைந்திடா
ஓவியப் புறவின்மா டிருக்க ஊடு பேடையே"

ஒரு சிற்பி செய்துவைத்த மண்புறா உயிர் பெற்றது போலவே உண்மையாய் இருந்தது என்று நாம் எத்தனை சொன்னாலும் பயனில்லை. அந்த இனத்துக்குரிய உண்மைப் புறாக்களும் அவ்வாறு அந்த மண்புறாக்களைக் கண்டு உண்மையென நம்பி மயங்கின என்று சொல்லும் பொழுதுதான் ஓவியத்தின் தத்ரூபக் காட்சி இனிது புலனாகும். சிற்பி அந்தக் கோபுரத்தை விண்ணைத் தொடும்படி அவ்வளவு உயரமாகக் கட்டியிருந்தான் என்று வெறுமனே கூறுவதை விட, தேவலோகத்துக் கற்பகச் சோலை கோபுரத்தின் கொடுமுடி தொடும்படியாக அருகிலே நின்றது என்று கூறியது சிறப்புடையது. கோபுரத்தில் வதிந்த புறா எளிதாகக் கற்பகச்சோலையினுள் செல்லக் கூடியதாக இருந்தது என்று கூறியது அதிலும் அதிகமான சிறப்புக் கொண்டது. வேறு ஒரு பெண்ணைக் காதலித்ததாக ஆண் புறாவைத் தவறாக நினைத்து மனம் வருந்திய பெண்புறா வாழ்க்கையையே வெறுத்துத் துறவு பூண்பதற்காகச் செல்வதற்குத் தேவலோகம் மிக அருகாமையில் காணப்பட்டதாம். மண்புறாவைத் தன் பெண்புறா என்று நினைத்துத் தன் உண்மைப் பெண்புறா வந்து கூவவும் அதனைக் கவனியாது அருகிலிருந்த புறாவையே அன்புடன் கருதி அமர்ந்திருந்த ஆண்புறா உண்மையில் தன் பெண்புறாவிடம் எவ்வளவு உண்மையான காதல் உடையதாய் இருந்திருக்கிறது என்பதை உற்றறிதல் வேண்டும். சிற்பத்திறனைப் போற்ற வந்த கவிஞன் சுவை சொட்டச் சொட்ட, ஆவியொத்த அன்புடன் புள்ளினங்கள் வாழும் வாழ்க்கையைக் காட்டி நமக்குச் சிறந்த நீதியையும் எடுத்துப் புகட்டுவது மெச்சத்தக்கது. ஆகவே இக்கவிதை நமது உள்ளத்தில் ஆழப் பதிந்து அழியா நிலையெய்தி நம்மை மகிழச் செய்கிறது.

# கம்பராமாயணத்தின் பெருமை

இலக்கியம் கற்றுடையவர்களும் சமயப்பற்றுடையவர்களும் விரும்பிக் கற்பது கம்பராமாயணம். அது இராமாவதாரம் என்னும் பெயருடையது. அதனை ஆக்கித்தந்தவர் கல்வியிற் பெரியர் என்று போற்றப்படும் கம்பர். அவர் கவிச்சக்கரவர்த்தி என்று கொண்டாடப் படுவார். அவர் கவிதையின் இன்பம் அளவிடற்கரியதொன்று.

"இம்பர் நாட்டிற் செல்வமெலா மெய்தியரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்கு நீழலிருந் தாலும்
செம்பொன் மேருவனையபுயத்திறல் சேரிராமன் றிருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற் போற்கற்றோர்க்கிதயங் களியாதே"

என்று கம்பனில் திளைத்தவர்கள் பாடிக்களித்தனர்.

வடமொழியில் வால்மீகி செய்த இராமாயணக்காவியத்தைக்கண்டு, தமிழையும் அதுபோல் வளம்பெறச் செய்ய வேண்டும் என்ற ஆசைபற்றியே கம்பர் இராமாவதாரத்தைச் செய்திருக்கிறார். அவ்வாறு தாம் வெற்றிபெறத் தமிழில் செய்துமுடிக்க முடியுமா என்ற ஐயப்பாடும் அவருக்கு இருந்திருக்கிறது. அதனைக் கீழ்க் கண்ட தற்சிறப்புப்பாயிரப் பாடலால் வெளிப்படுத்தியுள்ளார் :-

" வைய மென்னை யிகழவு மாசெனக்கு
எய்த வும்மி தியம்புவ தியாதெனில்

**பொய்யில் கேள்விப் புலமையி னேன்புகல்**
**தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.''**

இவ்வாறு அவர் கூறியது உயர்வின்கண் அவரது டணிதலாகிய பண்பையே புலப்படுத்துவதாகும். வான்மீகி யைவிடவும் மேலாகவே அவருடைய தமிழ் இராமாவதாரம் சிறக்கின்றது என்பது கற்றறிந்தோர் துணிவாகும். ஆயி னும் கம்பர் வாக்கு தெய்வவாக்கு என்பதற்கேற்ப 'வைய மென்னையிகழவும்' என்ற அவர் வாக்கின்படி இன்றையத் தமிழுலகில் ஒருசாரார் கம்பரையும் அவர் நூலையும் இகழ்ந்துகூறி அவருக்கு மாசு கற்பிக்கின்றனர். இராமாய ணம் இனவேற்றுமையை உண்டுபண்ணுகின்றதென்று குறை கூறுகின்றனர். யாரோ எவரோ எங்கோ இராமாய ணம் ஆரிய திராவிடப் பூசலின் அடிப்படையில் எழுந்தது என்று கூறினதையும் எழுதினதையும் ஆதாரம் காட்டுகின் றனர். இராவணனையும் மற்றும் அரக்கர்களையும் தமிழினத் தவர் என்று தவருக நம்பிக்கொண்டு அதனுல் தமிழ்மக்க ளுக்கு இழுக்கு ஏற்படுத்துவது இராமாயணம் என்று கடும்பிரச்சாரம் செய்துவருகின்றனர். இதனுல் கம்பராமாய ணத்தின் மேல் ஒருவகையான வெறுப்பு உண்டாகி வரு கிறது.

இந்த நிலை மிகவும் வருந்தத் தக்கதொன்று. ஏனெனில் இது உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டதொன்று. இதற்கு எந்த விதமான அகச்சான்ருே புறச்சான்ருே கிடையாது. இராமாயண நிகழ்ச்சிகளுக்கும் தமிழ்நாட்டுக்கும் யாதொரு விதமான தொடர்பும் கிடையாது. சீதையை இலங்கையிலி ருந்து மீட்டுக்கொண்டு வரும்போது இராமன் இராமேச்சுரத் தில் சிவனுக்குக் கோயில் இயற்றி வழிபட்ட செயல் ஒன்று தான் தமிழ்நாட்டோடு தொடர்பு கொண்டதாய்த் தோன்று கின்றது. மனிதப் பிறவியினின்றும் முற்றிலும் மாறுபட்ட

அரக்கர்கள் எவ்வாற்றானும் தமிழ் மக்கள் ஆகார். அவர்கள் மனித இனத்தையே உணவாகக் கொள்ளும் மாபாதகர்கள். மாயங்கள் எல்லாம் வல்லவர்கள். தேவர்களை ஒருபுடை ஒத்து தெய்வ ஆற்றல்களை வரங்களாற் பெற்றவர்கள். வானிலே சஞ்சரிப்பவர்கள். இரவில் திரிபவர்கள். அதனால் நிசிசரர் என்னப்பெற்றார். பிரம்மாவின் மகனான புலஸ்தியன் மகன் விச்சிரவசுவினுடைய மகன் இராவணன். அதனால் அவன் பிரம்மாவிற்குப் பூட்டன் முறையிலுள்ளவன். அதனால் அவன் பிராமணன். பூணூல் தரித்திருந்தான். சமஸ்கிருத மொழியைப் பயின்றவன். சாமகானம்பாடிச் சிவன் மனத்தைக் குளிர்வித்தவன். அவனைத் தமிழ் முனிவராகிய அகத்தியர் இசையால் வென்று தமிழ் நாட்டினுள் அடியெடுத்து வையாதபடித் தடுத்து நிறுத்தியிருந்தார். இச்செய்தியை மதுரைக் காஞ்சியில்,

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந"

என்ற அடிகளாலும் அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையாலும் நன்கு உணரலாம். ஆதலால் இராவணனைத் தமிழன் என்று தழுவுவதும், உறவுகொண்டாடுவதும், அவனுக்கு ஓர் ஏற்றம் கற்பிக்க முயல்வதும் பெருந்தவறாகும்.

இராமன் ஒரு சத்திரியன். வடநாட்டவன். அவன் சீதையைப் பிரிந்தது தமிழ்நாட்டு எல்லைக்கு வடக்கேயுள்ள கோதாவரி நதிக்கரையிலுள்ள பஞ்சவடியென்னும் இடத்தில். அக்கதை நடந்தகாலம் துவாபரயுகம். அப்பொழுது கபாடபுரம் பாண்டி நாட்டுத் தலைநகராயிருந்தது. அது குமரிக்கண்டம் கடல் கொள்ளப்படுவதற்கு முந்தியகாலம்.

சூர்ப்பநகை இராவணனின் தங்கை. அவள் ஒரு பிராமணப் பெண் ஆகையால் சத்திரிய குலத்தவனாகிய தான் மணப்பது முறையல்லவென்று இராமன் அவளுக்குச் சொல்லியதாகக் கம்பர் குறித்துள்ளார்.

இராமாயணம் ஒழுக்க சீலத்தின் உயர்வை எடுத்து விளம்பும் ஒரு விழுமிய நூல். உலகில் மனிதனுக்கு வேண்டிய அறங்களையும் அவன் செய்ய வேண்டிய கடமைகளையும் பல்வேறு நீதிகளையும் விரிவாக விளக்கி நிற்கும் ஒரு சிறந்த இனிய நூல். அது கற்பவர் உள்ளத்தைச் செம்மைப் படுத்தவல்லது.

இராமாயணத்தில் வரும் இராமனைப் பற்றியும் இராவணனைப்பற்றியும், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தங்களில் குறிக்கப் பட்டுள்ளன.

" கடுந்தெறல் இராமனுடன் புணர்சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம் சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தா அங்கு."

(புறநானூறு-378)

" வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல் போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல."

(அகநானூறு-70)

" இமையவில் வாங்கிய வீர்ஞ் சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தனனாக
ஐயிரு தலையி னரக்கர் கோமான்

தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலே
எடுக்கல் செல்லா துழப்பவன் போல''

(கலித்தொகை-38)

"தாதை யேவலின் மாதுடன் போகி
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேதமுதல்வற் பயந்தோன் என்பது.''
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ.''

(சிலம்பு-ஊர்காண்காதை)

"மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடுங் கான் போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.''

(சிலம்பு-ஆய்ச்சியர்குரவை)

இவற்றல் தொன்றுதொட்டு நம் நாட்டினர் இராமாயணத்தை எவ்வாறு போற்றிவந்தனர் என்பது தெரியவரும். வடநாடு தென்னுடு என்ற பாகுபாடன்றி இந்திய நாடு முழுதையும் ஒன்ருக ஒற்றுமைப்படுத்திப் பிணைக்க வல்லது இராமாயணம். இராம நாமம் அயோத்தி முதல் இராமேச்சுரம் வரையில் அனைத்து நாட்டு மக்களையும் ஒன்றுபடுத்துகின்றது. மகாத்மா காந்தியின் உயிர் நாடியான மந்திரம் இராம நாமம். அரசன் வேடன், மனிதன், குரங்கு, பறவை, சாதி இவற்றின் வேறுபாடுகளைப் போக்கி உயிர்களை ஒரு நிலைப்படுத்திக் காணவல்லது இராமாயணம். அதனை முத்தமிழ் நாடகக் காப்பியமாக ஆக்கினர் கம்பர். கம்பராமாயணத்தை ஒவ்வொருவரும் தவருமல் படித்து இம்மைமறுமையின்பங்களை எய்துவாராக.

# கம்பன் கண்ட இளங்கோ

கல்வியிற் பெரியனான கம்பன் கற்ற நூற்கள் பல அவற்றுள் நாம் இப்பொழுது திட்டமாய்ச் சொல்லக்கூடிய தமிழ் நூல்கள் சிலவுள. அவை சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவக சிந்தாமணி, தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் போன்றனவாகும். தான் பயின்ற நூல்களிலுள்ள சில அரிய கருத்துக்களையும் சொற்றொடர்களையும் கம்பன் பொன்னேபோற் போற்றித் தனது மாபெரும் காப்பியமாகிய இராமாவதாரத்தில் பொதிந்துள்ளான். அங்ஙனம் அவன் சிலம்பிலிருந்தும் சில மணிகளைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறான். அவை கம்பன் காவியத்தைக்கவினுறச் செய்துள்ளன. அவற்றை முறையே இங்கு நோக்குவோம்.

கண்ணகி செல்வக் குடியில் பிறந்தவள். மாசிதிக் கிழவன் மாசாத்துவானின் மகனான கோவலனை மணந்தாள். வெயில் மழை தெரியாதவள். வெளியிற் சென்றறியாதவள். அவள் மடநடை மாது. அஞ்சிலம்பு கொஞ்சும் அவள் செஞ்சீறடிகள் மென்மையில் கஞ்சத்தையும் மிஞ்சின அந்நன்னுதலின் மென்னடை கண்டு அன்னமும் நாணிப் பின்னிட்டது.அவள் வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள். அத்தகையாள் மதுரைக்குக் கணவனுடன் புறப்பட்டாள். காவிரிப்பூம் பட்டினத்து எல்லையைக் கடக்கவில்லை. மதில்

வாயிலைக்கடந்து இன்னும் ஒரு காவதம் கூட நடக்கவில்லை. அதற்குள் அவளுக்கு மூச்சு வாங்கியது. நெடுமூச்சுக்களை எல்லாம் குறுகிய அளவிலே அடக்கினாள். அவள் காலடிகள் சிவந்து கன்றின. ஒடிந்துவிடுமோ என இருந்த அவளது மெல்லிய இடை வருந்தியது. இடுப்பில் கையை வைத்துக் குறுகவுயிர்த்துக் குந்தி நடந்து வருந்தலானாள்.

முட்போன்று கூரிய வெள்ளிய பற்கள் தோன்றும்படி மெதுவாகக் குதலை மொழியால் கணவனிடம் ''மதுரை எங்கே இருக்கிறது?'' என்று கேட்டாள். அதாவது மதுரை இன்னும் வரவில்லையா என்று கேட்டாளாம். முப்பது காவதத்திற்கு அப்பால் கிடக்கும் மதுரையை அடைவதற்கு ஒரு காவதம் கடப்பதற்குள் நடந்து வருந்தி இளைத்துப் போனாள் கண்ணகி அதனைத் தெரிந்து கொண்ட கோவலனின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? அவன் தன் வருத்தத்தை வெளிக்காட்டாது மறைத்துக்கொண்டு சிரித்த வண்ணம், ''இன்னும் ஆறைந்து காதம்தான்'' என்று கூறினான். இதை இளங்கோவடிகள் எவ்வாறு கூறுகிறார் பாருங்கள் :

'' இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதநம் மகனுட் டும்பர்
நாறைங் கூந்தல் நணித்தென நக்கு''

(நாடுகாண் காதை 38-43)

இது ஒரு துன்பம் நிறைந்த இடம். ஆனால் கோவலன் சிரிக்கிறான். அது துன்பத்தில் பிறந்த நகை. முப்பது காதம் என்று சொன்னால் கண்ணகி மூர்ச்சித்துவிடுவாள் என்று அஞ்சி அதை ஆறுஐங்காதம் என்கிறான். எனினும், அவன்

பொய்கூறியதாகவும் ஆகாது. ஆறு ஐந்து கொண்டது முப்பதுதானே. இங்குக் காப்பியத்தில் துன்பியல் நிலை முளை விட்டுத் தோன்றுவதைக் காணலாம்.

இக்கருத்து கம்பன் மனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இதை எந்தவிதமாவது தனது காவியத்தில் புகுத்தி விட நினைத்தான். வான்மீகத்தில் இது காணப்படவில்லை. ஆனால் கம்பனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. முடியைத் துறந்து இராமன் காட்டிற்குப் புறப்படுகிறான். சீதையும் உடன் புறப்படுகிறாள். அவளும் அதற்குமுன் வெளிக்கிளம்பியவள் அல்லள். நாட்டு நகரக் கோயிலிலேயே நாளைக் கழித்த சனகன் மகள் காட்டைப் பற்றி என்ன தெரிந்திருக்க முடியும்? ஒன்றும் தெரியாது. காடு செல்வதை, வீடு விட்டு வீடு செல்வதாகவே நினைத்தாள். காடு நோக்கி யெழுந்த இராமன், சீதையுடனும் தம்பியுடனும் சுமந்திரன் தேரில் ஏறி வருகிறான். அயோத்தி நகரின் கோட்டை வாயிலைக் கடந்து கொண்டிருந்தது தேர். அதற்குள் களைத்துப் போனாள் சீதை. புறப்பட்டு நெடுநேரம் ஆகிவிட்டதாக அவளுக்குப் பட்டது. ஆதலால் காடுவந்திருக்க வேண்டும் என்று அவள் கருதினாள் போலும்! வேறு ஒருவரும் அறியாமல் இராமன் காதருகே வாய்வைத்து "நாதா! காடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டாளாம். கம்பன் இவ்வாறு கற்பனை செய்தான். ஆனால் அயோத்தியா காண்டம் நகர் நீங்கு படலத்தில் இதைக்கூறவில்லை. அங்ஙனம் கூறியிருந்தால் அதில் சுவை இருக்காது, சப்பென்றிருக்கும். இது இளங்கோவடிகளிடமிருந்து இரவல் வாங்கியது என்று உடனே தெரிந்துவிடும். இராமன் காடு செல்ல நேர்ந்ததே என்று உலகமே துயரில் வாடி அழுது கொண்டிருக்கும் அந்நேரத்தில் இதைப்போய் சொல்லலாமா? ஆகவே கம்பன் அங்கே சொல்லவில்லை. சீதையைத் தேடிச்சென்ற அநுமனுக்கு இராமன் சில அடையாளங்களைக் கூறிவிடுக்

கிருன். அங்கும் கம்பன் இதைக் கூறவில்லை. பின் சுந்தர காண்டத்தில் அநுமன் சீதையைக் கண்டு இராமன் கூறிய அடையாளங்கள் இன்னவை என்று தெரிவிக்கும்பொழுது அச்சொல்லின் செல்வன் வாயிலாக இதனை நமக்குப் புலப்படுத்துகிருன். அநுமன் சீதையிடம் கூறுகிருன் :

" நீண்டமுடி வேந்தனரு ளேந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறு நாளின்
ஆண்டநகர் ஆரையோ வாயிலக லாமுன்
யாண்டையது கானென விசைத்ததும் இசைப்பாய்"

சுந்தர காண்டத்தில் இப்பாடலைப் படிக்கும்பொழுது நாம் நம்மை அறியாமலே அயோத்தியா கண்டத்திற்குச் சென்று விடுகிறோம். சுமந்திரன் தேரில் இராமன் அயோத்தி நகருக்கு வெளியே வருகிருன். அருகில் சீரை சுற்றிய சீதை இருக்கிருள். அவள் முகத்தில் களைப்புத் தோன்றுகிறது. பின்னுல் இருக்கும் இலக்குவனுக்குக் கேளாதபடி சாய்ந்த வண்ணம் "காடு எங்கே இருக்கிறது?" என்று கேட்கிருள். அவளுடைய வாட்டமிலாச் செல்வத்தன்மையும், மென்மையும், பேதமையும் நமக்கு நன்கு புலனுகின்றன. அது எவ்வாறு இராமன் மனத்தை வருத்தியிருக்கும் என்பதையும் நாம் அறிகிறோம். காடு என்பதே இன்னதென்று அறியாத அக்காரிகை பதினன்கு ஆண்டுகளை எவ்வாறு காட்டில் கழிக்கப் போகிருள் என்ற கவலை இராமன் நெஞ்சில் நெடுகிலும் இருந்தே வந்திருக்கிறது. ஆகவே அதை நினைவாக வைத்திருந்து அநுமனிடம் அடையாளமாகக் கூறிவிடுக்கிருன். அசோகவனத்தில் துயரமே உருவாகத் தோன்றிக் கொண்டிருக்கும் சீதையிடம் அநுமன் இதை எடுத்துக் கூறும்பொழுது நாம் கம்பனுடைய கவிதைத்திறனை வியந்து மற்றவற்றை மறந்து விடுகிறோம்.

இங்கே கற்ருேர் அறியும் மற்ருேர் இடமும் உற்ருேர்ந்துணரற்பாலது. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளு

டனே மரப்புணையொன்றால் வைகைநதியைக் கடந்துஅதன் தென்கரையேறி மதுரையை வலம்கொண்டு சென்றனர். காவற்காடு சூழ்ந்த அகழி அருகிலே கிடந்தது. அதற்கு அப்பால் மதுரையின் புறமதில் வானளாவ ஓங்கி நின்றது. மதிலிற் கட்டப்பட்ட போர்க்கொடிகள் காற்றில் படபட வென்று அசைந்து கொண்டிருந்தன. இவர்களை இவ்வாறு நடக்கவிட்டுப் புலவர் அகழியை நோக்குகிறார். அகழி நிறைய மலர்கள் பூத்துக்கிடந்தன. அவை தேன்ததும்பும் குவளைமலரும், ஆல்பல்மலரும், தாமரைமலருமாயிருந்தன. தென்றற்காற்றிலே அவை அசைந்தாடிக்கொண்டிருந்தன. வாழ்வு வேண்டி ஊழ்வினை துரப்பக் கூடல் புகுகின்ற கோவலன் கண்ணகிக்குத் தாழ்வு வரப்போகிறதே என்று உள்ளம் கொதிக்கிறார் புலவர். அவர் மனம்வருந்துகின்றது. அப்பொழுது சுற்றுச் சூழலிலுள்ள இயற்கையெல்லாம் இளங்கோவுடன் சேர்ந்து வருந்துகின்றன. மலர்களை மீண்டும் பார்க்கிறார். அவை காலுற நடுங்குகின்றன. ஐயோ! அவைஏன் கால் நடுங்குகின்றன என்றுபார்க்கிறார். கண்ணகியும் கோவலனும் அடையப் போகும் கடுந்துயரைத் தாம் முன்னரே அறிந்து கொண்டனஎன்பதைஉணர்கிறார்.அந்த மலர்களைச் சுற்றி வண்டுகள் வீழ்ந்து இம்மென்று இசைக்கின்றன. மலர்களிலுள்ள கள்நீராகிய தேன் சிந்துகிறது. அம்மலர்கள் வண்டுகள் இரங்கும் கோதிறம் என்னும் பண்ணால் பரிந்தேங்கி யழுது கண்ணீரைக் கொண்டு காலுற நடுங்குவதாகக் கற்பனை செய்கிறார். மலரில் ஆடும் வண்டுகள் முரல்வது, மலர்கள் இனைந்தேங்கி அழுவது போல் தோன்றுகிறது. கள் நீராகிய தேன் மலரினின்று ஒழுகுவது கண்ணீர்விடுவது போன்றிருக்கிறது. மலரின் தண்டுகள் காலாகிய காற்றால் ஆடுவது காலால் நடுங்குவது போலத் தோன்றுகிறது. புறமதிலின் கண்ணே அசைகின்ற கொடிகள் அவர்களை இங்கரின் வாராதொழிமின் என்பன

வாய்த் தம்கையின் மறித்துக் காட்டுவதுபோல் தோன்று கின்றன. சிலேடை நயம்பொலியச் செந்தமிழ்ப்பாடல் அழகாய் அமைந்து வருகிறது காண்மின் :

"கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்
தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐய மின்றி யறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினை ந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கப்
போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல் மறித்துக்கை காட்ட"

இவ்வாறு இயற்கையில் காணப்படும் மலர்கள் மாந்தர்க்காக வருந்தி வாடுவதுபோல் கருத்தமைத்துக் கம்பனும் தன் காவியத்தில் எத்தனையோ இடங்களில் பாடியுள்ளான். ஒன்றை மட்டும் இவண் நோக்குவோம். இராமன்சுமந்திரனை அயோத்திக்கு அனுப்பிவிட்டுத் தம்பியுடனும் சீதையுடனும் தனியே இரவில் காட்டுவழி நடக்கிருன். அப்பொழுது செங்கழுநீர் மலர்களும் ஆம்பல் மலர்களும் இராமனுடைய வறுமையைக் கண்டு வருந்தினவாம் :

"காம்புயர் கானம் செல்லும் கரியவன் வறுமை நோக்கித்
தேம்பின குவிந்த போலும் செங்கழு நீரும் சேரைப்
பாம்பினை தலைய வாகிப் பரிந்தன குவிந்து சாய்ந்த
ஆம்பலும் என்ற போது நின்றபோ தலர்வ துண்டோ"

கோவலனையும் கண்ணகியையும் வரவேண்டாம் என்று மறித்துக் கைகாட்டுவது போற் கொடிகள் ஆடினவாம். விசுவாமித்திர முனியுடன் மிதிலைக்கு வந்த இராமனை அங்கு மதிலிற் கட்டப்பட்ட கொடிகள் "சீதை இங்கே இருக்கிருள் வருக! வருக!" என்று அழைப்பனபோற்

கைகாட்டி அழைத்தன என்று கம்பன் பாடியுள்ளமையும் ஈண்டு ஒப்புநோக்கத்தகும் :

"மையறு மலரி னீங்கி யான்செய் மாதவத்தின்வந்து
செய்யவள் இருந்தாளென்று செழுமணிக்
கொடிகள் என்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா."

# கம்பன் சொல்நயம்

கல்வியிற் பெரியவன் கம்பன். அவனுடைய கவிநயமும் பொருள்நயமும், பாநயமும், ஓசைநயமும், கருத்தின் கவினும், அணியும் அழகும், நடைநலமும் ஈடில்லாதன. ஆதலால் அவன் கவிச்சக்கரவர்த்தி எனப்படுவான். அவன் காவியத்தை ஒரு சொற்களஞ்சியம் என்றே சொல்லலாம். அவன் கையாண்டிருக்கும் சொற்களின் அளவு, மற்ற புலவர்களை மிஞ்சிய நிலையில், வியக்கத்தக்கதாயுள்ளது தமிழில் கம்பனுடைய சொல்லாட்சிக்கு, ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரை ஒப்பிட்டுக் கூறலாம். ஒவ்வொரு சொல்லின் ஆற்றலையும், அதன் பொருளியைபையும், அழகையும், நயத்தையும்கம்பன் நன்கு நுனித்தறிந்தவன் என்பது, அவன் கவியமைக்கும் முறையிலிருந்து நமக்கு நன்கு புலனாகும். சொற்களை அவன் தேடிக் கொண்டு போவதில்லை. சொற்களே அவனைத் தேடிக் கொண்டு வந்தன; அவனுக்காகக் காத்து நின்றன: நினைத்ததை விளைக்கும் கற்பகமரம்போல், கம்பன் சிந்தையில் கருத்துக்கள் எழுந்தன. அவற்றிற்கு நல்லுருக் கொடுத்து நயம்பெறச் செய்யவல்ல சொற்கள் பந்தி பந்தியாய் முந்திக் கொண்டு வந்து அங்கங்கே அணி பெற அமைந்தன. இம்முறையில் அவை தெய்வக்கவிகளாய்த் திகழ்கின்றன. அவன் குறிக்கும் பொருளுக்குச் சொற்கள் குலவிக் குழைந்து இழைந்து இயைந்து பயன்படுகின்றன. அவன் சொற்றிறமையையும்வாக்குவன்மையையும்

நோக்கும் பொழுது, அவன் அறிவின் அகலத்தை அளக்கும் பொழுது, உலகில் அவன் கல்லாத கலையும் இல்லாததே என்று சொல்லாதவரும் இரார். கம்பன் என்றுமுள தென் றமிழை இயம்பி இசை கொண்டவன்; தமிழ் எனும் அளப் பருஞ் சலதியை அளந்து கண்டவன்; தென்சொற்கடந்த வன்; வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்தவன். சொல்லின் செல்வன் என்று அநுமனை இராமன் பாராட்டுவதைப் பார்க்கும் நாம், கம்பனையே சொல்லின் செல்வன் என்று பாராட்டாமல் இருக்க முடியாது.

சொல்லும் சொல் செல்லும் சொல்லாகவும், வெல்லும் சொல்லாகவும், கொல்லும் சொல்லாகவும் அமையும். 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லு தல் வல்லார்ப் பெறின்'' என்பது திருக்குறள். ஆகவே, ''வில் லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க, சொல்லேருழவர் பகை'' என்றும் வள்ளுவர் எச்சரித்துள்ளார். கண்ணகி தன் சொற் செவியில் உண்டளவே தோற்றான் உயிர், என்று பாண்டியன் இறந்தவாற்றை இளங்கோவடிகளும் குறித்துள்ளார். வில்லம்பு, சொல்லம்பு - மேதினியில் இரண்டு உண்டு என்பதை நன்கு உணர்ந்தவன் கம்பன். கைகேயி கூறிய வரங்களைக் கேட்ட தசரதன் 'நாவம்பால் என் ஆருயிர் உண்டாய்' என்று நடுங்கி விழுந்து நலிவதா னான். ஒருமனிதன் எய்த அம்பால் தம்பி கும்பகருணன் களத்திற்பட்டான் என்று பிறந்த சொல்லே இராவணனைச் சுட்டுவிட்டதாம். ''மானுடவன், வில்லொன்று நின்னை விளிவித்துள தென்னும், சொல்லன்றோ என்னைச் சுடுகின் றது தோன்றல்'' என்று இராவணன் வாய்விட்டு அரற்றி னான். தாடகையின் மார்பைத் துளைத்த இராம பாணத்தை ''சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்'' என்று கம்பன் கூறுகிறான். தன் மார்பிற்பட்ட இராம பாணத்தை நோக்கிய வாலி, வில்லினால் தரப்பரிது இவ்வெஞ்சரம்

னவியந்து, "சொல்லினல் நெடுமுனிவரோ தூண்டினர்? என்று சோர்ந்தானும். "நல்லியற்புலவர் நாவிற் பொருள் குறித்தமர்ந்த நாமச்சொல்லோ இது?" என்று இராவணனும் இராமன் சரத்தை வியந்து கூறினன். "எல்லை நீத்த உலகங்கள் யாவும் என் சொல்லினுற் சுடுவேன்" என்று சீதை சொன்னது எவ்வளவு உண்மை பாருங்கள்! அதுபோல, சில சொற்கள் அமைந்த ஒருவரிப் பாடலிலே உலகங்களையெல்லாம் அழிக்கவல்ல ஆயிரம் மெகடன் அணுக்குண்டு மருந்தைப் பொதிந்து வைக்கும் திறமை புலவர்களுக்கு உண்டு. புலவர்கள் ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்கள். கம்பன் ஆக்கவேலையில் அமைந்தான். சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே என்று உலகம் தமிழைப் பாராட்டும்படி, செவ்விய தீவிய செந்தமிழ்ப் பாடல்களை இழுமென் சொற்களால் விழுமிய பொருள்மேல் பல்விசை வண்ணங்களில் வடித்துக் கொடுத்து வான்புகழ் கொண்டான்.

சான்றோன் கம்பனின் கவிதை கோதாவரிபோற் பரந்து செல்கின்றது. அவன் நாட்டும் சொற்பொருள் பம்பைப் பொய்கைபோல் தோன்றல் சான்றது. அவன் கோத்துக் கொடுக்கும் சொற்களும், தொடைகளும் எல்லையில் இன்பம் தீரா இசையும், பழுதிலாத பல்லலங்காரப் பண்களும் காகுத்தன் பகழிபோலவே நமக்குக் காட்சியளிக்கின்றன. அவன் செய்யுளின் நடைகளும் வண்ணங்களும் வனப்பு மிக்கன. அவன் நாவரு கிளவிச் செவ்வி நடை செய்யவள் நடையையே ஒக்கும். அவன் செஞ்சொற் கவி இன்பத்திற்கு இணையாக உலகில் வேறு எதுவுமே இல்லை. அவனே இன்சொற் செல்வன். இத்தகைய பெருமை பெற்றிருந்தும், பெருக்கத்து வேண்டும் பணிவு என்பதற்கு ஏற்ப, வால்மீகி முனிவன் சொல்கின்ற தேயத்தே நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற்றேன்" என்று தன்னைத் தாழ்த்திக் கூறிக் கொள்கிறன். ஆயினும் அதற்கு

"விரைந்து நுட்டமாகிய சொற்களாலாகிய இராமாவதார நூலை இயற்றுகிறேன்' என்றும் பொருள் கிடைப்பதை அறிந்து, அங்ஙனமே நாம் கொள்ளுதல் பொருந்தும். அவனது பொய்யில் கேள்விப் புலமையைச் சிறிது காண்போம்.

கோசல நாட்டு வளப்பத்தைக் கூறும் ஒரு பாடல் வருமாறு:—

" கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன உயிருறும் அமுதம்
காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்."

ஒரு நாடு அல்லது ஊர் எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் கூறுவதாக நாம் இப்பாடலைக் கொள்ளலாம். இதில் நான்கு வரிகளிலும் 'சொரிவன' என்ற சொல் பயின்று வந்து 'மிகுதியாக அளிக்கின்றன' என்ற பொருளைத் தருகின்றது. பூமாலைகள் குளிர்ந்த இளந் தேனைச் சொரிகின்றன என்றும், செல்லும் வழிகள் பெரிய இரத்தினங்களையும் பொன்னையும் சொரிகின்றன என்றும், காற்றுக்கள் உயிரைத் தளிர்க்கச் செய்யும் அமுதத்தைச் சொரிவன என்றும் பாடல்கள் காது இனிது சுவைக்கத் தக்க கனிகளைச் சொரிவன என்றும் கவிஞன் கூறுகிறான். மலர்கள் மாலைகள் ஆனபின் அங்குத் தேன் விளைவதில்லை. வழிகளில் பெரிய இரத்தினங்களும் பொன்னும் எப்பொழுதும் கிடக்க முடியாது. வள்ளத்தில் இருக்கும் அமுதம் எப்பொழுதும் மிதந்து கொண்டிருக்க முடியாது. காது கனியை உண்ணாது. ஆயினும், கம்பன் ஏன் இப்படிப் பாடினான் என்பதை நாம் காணுதல் வேண்டும். 'செவிநுகர் கனிகள்' என்ற சொல்லமைப்பைத்தான் பாருங்கள்! என்ன அருமை

யான கவிச்சித்திரம்! பொன்னன வாக்கு! கம்பன் ஒருவன் கருத்தினின்றுதான் இது எழமுடியும். செவிநுகர் கனிகள் என்றதால் இன்சுவையோடு கூடிய நற்பொருள் வாய்ந்த சொற்களும் பாடல்களும் காதில் கேட்கப்படவேண்டும் என்பதைக் குறித்தான். ஊதைகள் என்றதால் குளிர்ந்த வாடைக் காற்றுக்கள் கூட உயிருக்கு நன்மை தரக்கூடிய அமுதத்தைக் கொடுத்து ஊற்றின்பத்தையும் விளைக்க வேண்டும் என்பதைக் குறித்தான். கனகம் என்பது பொன். பொன்னும் மணியும் கண்ணுக்கு இன்பம் தரக் கூடியன. ஆதலால் பாதைகளில் எப்பொழுதும் கண்ணுக்கு விருந்தளிக்கவல்ல இனிய காட்சிகள் இருக்கவேண்டும் என்று குறித்தான். கோதைகள் நறுமணம் கொண்டவை. ஆதலால் முக்கிய நல்லமணம் ஏறத்தக்கதாய் ஊர்கள் அமையவேண்டும் என்பது பெறப்படும் கோதைகள் நற வத்தைச் சொரிவன என்றதால், தேனைப் போன்று இனிது சுவைக்கக்கூடிய பொருள்கள் நாவிற்குக் கிடைக்கக்கூடிய தாய் ஊர்கள் அமையவேண்டும் என்பதைக் குறித்தான். இதனல் வாயால் நுகரப்படும் இன்பமும் கூறியவாருயிற்று. அது செவிக்கு உணவில்லாத போழ்து வேண்டுவதாலும், சிறிதே வயிற்றுக்கு ஈயப்பட வேண்டுமாதலாலும் அத் துணைச் சிறப்பின்மையின், மறைமுகமாகக் கூறுமற் கூறினன் என்க. இவ்வாறு ஐம்பொறிகளாலும் இன்பம் நுகரக் கூடியதாய் நாடும் ஊரும் நலம் பெறவேண்டும் என்பதைக் கம்பன் இங்குக் கூறியிருக்கும் முறை சிறந்த தாகும். கோதைகள் என்றதால் மூக்கும், நறவம் என்ற தால் நாக்கும், கனகம் என்றதால் கண்ணும், ஊதைகள் என்றதால் மெய்யும்; செவி என்றதால் காதும், ஆக ஐம் பொறிகளும் இங்கே குறிக்கப் பெற்றமை புலனுகும். இவ்வைம் பொறிகளுள்ளும் செவியால் நுகரப்படும் இன் பமே தலையாய சிறப்புடைத்து ஆதலின், செவியெண

வெளிப்படக் கூறி, ஏனையவற்றை உய்த்துணர வைத்தான் எனலாம்.

இக்காலத்தில் பெரிய நகர்ப்புறங்களையும், ஊர்ப்புறங்களையும் நெருங்கும் பொழுது புகைவண்டியில் செல்பவர்கள் அருவருக்கத்தக்க வாடைகளையும் நாற்றங்களையும் ஏற்று அல்லற்பட வேண்டியதாயிருக்கிறது. வெளிப்புறத்தேயே இப்படியிருந்தால், ஊரின் உட்புறங்கள் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லவேண்டாம். இன்னும், நல்ல காற்று வாங்குவதற்கு என்று மாலை நேரத்தில் ஊருக்கு வெளியே உலவப் போகிறார்கள். அந்த நல்ல காற்று ஊரின் உட்புறங்களிலும் எப்பொழுதும் கிடைக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறான் கம்பன். Oxygen நிறைந்திருப்பதை நல்ல காற்று என்று சொல்லுகிறோம். oxygen என்பது பிராணவாயு எனப்படும். அதை நல்ல தூய தமிழில் "உயிருறும் அமுதம்" என்று கம்பன் குறித்திருப்பது இங்கே நோக்கி இன்புறற்பாலதாகும். இவ்வாறு சில வடமொழிச் சொற்களுக்கு நேரான தூய தமிழ்ச் சொற்களை அமைத்துக் கவி இயற்றுவது கம்பனுடைய தமிழ்ப்பற்றை விளக்குவதாகும். எடுத்துக்காட்டாக, சுக்கிரீவன் வாழ்ந்து வந்த ருசியமூக பர்வதத்தை 'இரலைக் குன்றம்' என்றும், ருசியசிருங்க முனிவரைக் 'கலைக்கோட்டு முனி' என்றும் கம்பன் வழங்கியுள்ளான்.

நம் காதில் நல்ல சொற்களும், மங்கல இசையும் செல்லக் கூடியனவாகப் பாடல்கள் அமைய வேண்டும். வெளிக்கிளம்பும் போதெல்லாம் 'போகாதே! போகாதே!' என்பது போன்று அவலக் குரலும், அழுகை யொலியும், இழிசினர் பேச்சும் காதில் புகுந்தால், ஊர்களில் மக்கள் இனிது வாழ முடியுமா? முடியாது. அதைக் குறிக்கவே, "காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்" என்றான். இங்ஙனம்

சில சொற்களில் பல பொருள்களையும் பொதிந்து வைத்துப் பாடும் திறன் கம்பனுடைய தனித்திறமையாகும். அவன் கவிதைகள் அனைத்தும் செவிநுகர் கனிகளேயன்றோ!

பல பொருளைக் குறிக்கப் பல சொற்களைத் தேடிப் பயன்காணாது மற்றையோர் மயங்கும் பொழுது, கம்பன் ஒரு சொல்லைக் கொண்டே பல பொருளையும் கூறி, ஒரு விந்தையைக் காட்டி நம்மை வியப்பில் ஆழ்த்துவான். இங்கே ஒரு செய்யுளை நோக்குவோம்:

"பஞ்சு பூத்த விரற்பதுமப் பவளம் பூத்த வடியாள் என்
நெஞ்சுபூத்த தாமரையின் நிலயம் பூத்தாள் நிறம் பூத்த
மஞ்சு பூத்த மலர்பூத்த குழலாள் காண்போன் மணிக்குவளாய்
நஞ்சு பூத்த தாலென்ன நகுவாய் என்னை நலிவாயே."

இப்பாடலில் 'பூத்த' என்ற ஒரு சொல் வெவ்வேறு பொருளில் பலமுறை வந்து நம்மைப்பரவசமூட்டுகின்றது. இராமன் எப்பொழுதும் சீதையை நினைத்துக் கொண்டிருப்பதாலும், திருமகளுக்கு இருப்பிடம் தாமரையாதலாலும், 'என்னெஞ்சு பூத்த தாமரையின் நிலயம் பூத்தாள்' என்கிறான். நகுதல் என்பது, ஏளனமாகச் சிரித்தல், பூத்தல் என்ற இருபொருளை யும் தந்து சிலேடையாக அமைந்துள்ளது. 'நீ சீதையின் கண்ணை ஒத்திருந்தும், அவளைப்போல் அன்பு காட்டாது, என்னைப் பகைத்து நகைத்து நலிதல் கூடாது' என்கிறான் இராமன். இச்செய்யுளில் 'பூத்த' என்ற சொல் எட்டு இடங்களில் பூத்துநின்று, நம் நெஞ்சைத் தொட்டு உருக்கு கிறது! இச்செய்யுளின் சொல்லழகும், ஓசைநயமும், இசை இன்பமும் நமக்கு உவகையைத் தந்து, பன்முறையும் பாடிப் பாடி மகிழத் தூண்டுகின்றன. இவ்வாறு சொல்லேருழவனாகிய கம்பன், சொல்லாகிய விதையை விதைத்து, வேண்டும் பொருள்களை விளைத்துக் காட்டும் வித்தகம் வாய்ந்தவன்.

சூர்ப்பணகை ஒரு பேரழகு படைத்த பெண்ணாக இராமன்முன் வந்தாள் என்று கம்பன் பாடிய பாடலை நாம் பாடும் பொழுது, உண்மையாகவே ஒரு பெண் நம் முன் னிலையில் ஒரு பூங்கொடிபோல் ஒசிந்து ஓல்கி ஒயிலாக அடி பெயர்த்து வருவது போன்ற ஓர் உணர்ச்சி நமக்கு உண் டாகிவிடும். அது கம்பன் கையாளும் சொற்களுக்கு அமைந்த தோர் அற்புத ஆற்றலாகும். அப்பாடல் வருமாறு:—

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."

ஒரு மெல்லியலாள் மெல்ல வருதற்கு ஒல்லும் விதத்தால் மெல்லெழுத்தெதுகைகளைப் பல்லிடத்தும் புல்லவைத்து நல்லதொரு பாட்டைச் சொல்லியிருக்கிறான் கம்பன். இப் பாடலில் வரும் சொற்கள் இடத்திற்கு இயைந்த இசையும் அசையும் கொண்டு, பொருளுக்கேற்ற பொலிவு பெற்று, வந்ததற்கியைந்த சந்தம் பெற்று, அந்தம் மிகுந்த சுந்தரி ஒருத்தி வந்தது போலவே நடையும் காட்டுகிறது. இது போல் அளவற்ற பாடல்களைக் கம்பன் பாடியுள்ளான்.

இதுபோன்று கம்பன் தீட்டும் சொல்லோவியங்கள் உயிரோவியங்களாகத் திகழ்வதை நாம் காணலாம். பஞ்ச வடியில் தனியே இருந்த சீதையினிடத்துக்கு ஒரு முதிய முனிவன் கோலத்தில் இராவணன் வந்தான். எப்படி வந் தான் எனின், பூவிதழ் விரித்தாற் போன்ற அடியனாய், தீ மிதித்தது போன்ற நடையனாய், காலும்கையும் நடுங்கும் இடையனாய், தோலும் சுருங்கிய முதுமையுடையனாய் வந் தானாம். இதைக் கம்பன் எவ்வாறு பாடுகிறான் பாருங்கள்:

"பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலம்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறும் காலன் கையினன்
மூப்பெனும் பருவமும் முனிய முற்றினான்"

தாமரை மலரானது அலரும்போது இதழ்களை மெது வாக விரிக்கும் அல்லவா? அதுபோன்று மெதுவாகப் பூப் போல நடந்து வந்தானாம். ஆனால், தரை உறுத்துவதாலும் சுடுவதாலும், தீ மிதிப்பவனைப் போன்று, காலை ஊன்று முன் எடுத்து எடுத்துத் துள்ளுநடை போட்டு வந்தானாம். நடுக்குறும் காலன் என்றும் கையினன் என்றும் கூறியது, கால்களும் கைகளும் தடுத்து நிறுத்த முடியாதபடி நடுங் கினவாம். மூப்பு என்று சொல்லப்படும் பருவமே அவனைக் கண்டு வெறுக்கும்படி மிக முதிர்ந்தவனாய்த் தோன்றினா னாம். இது ஒரு சின்ன பாடலாயிருப்பினும் இது காட்டி நிற்கும் சித்திரத்தைப் பாருங்கள். சீதை முன் அன்று இராவணன் எவ்வாறு தோன்றினானோ அவ்வாறே இன்றும் அவனை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறான் கம்பன். இப்பாடலில் வரும் சொற்களின் அமைப்பை நாம் நோக் கலாம். நடுங்குகின்ற கால்களையும் கைகளையும் உடையவன் என்பதை நடுக்குறும் காலன், கையினன் என்றான். இன்னொரு குறிப்பும் இங்கே நமக்குக் கிடைக்கிறது. இராவணன் தான்கொண்ட கிழட்டு வேடத்திற்கு ஏற்பக் கையையும் காலையும் ஆட்டி நடுங்குவதுபோல் பொய்யாக நடிக்கத் தொடங்கினான். ஆனால் அது நடைமுறையில் மெய்யாகவே நடுங்கும்படி ஆகிவிட்டது. ஏனெனில் அவன் செய்வது திருட்டுத் தொழில். வஞ்சகமாக இராம இலக்கு வரை வெளியேற்றி விட்டுத் தூமனத்து அருந்ததியிருந்த சூழல்வாய் நுழைகின்றான். சென்ற ஆடவர்கள் திரும்பி விடுவார்களோ என்ற அச்சம். கற்புக்கரசி சபித்து விடு வாளோ என்ற அச்சம். தான் கொண்ட முயற்சி வெற்றி

யுருது வீணுகி விடுமோ என்ற அச்சம். காம வேட்கை ஒரு பக்கம், திருட்டுத்தனம் ஒருபக்கம், இவற்ருல் அவன் கால்களும் கைகளும், அவன் எவ்வளவோ தடுத்து நிறுத்தியும், தடுக்க முடியாமல் நடுங்க ஆரம்பித்து விட்டன. இங்ஙனம் 'காப்பரு நடுக்குறுங் காலன் கையினன்' என்று இராவணனுக்கு இயல்பாகவே தோன்றிவிட்ட நடுக்கத்தையும் கம்பன் குறித்தவனுயான். இதைக் காலினன் கையன் என்ருே, காலன் கையன் என்ருே மாற்றிஞற்கூட முன் பொருளேயே தரும்; ஆனுல் சுவைக்காது. காலன் கையினன் என்றவுடனே பளீரென்று நமக்கு வேருெரு பொருளும் கிடைக்கிறது. அவ்வஞ்சகனின் கிழவுருவைக் கண்டவர்கள், "ஐயோ! இவன் பிழைக்கமாட்டான் போலிருக்கிறதே! இப்பவோ, பின்னேயோ, இன்னும் சற்று நேரத்திலோ இவன் உயிர் பிரிந்துவிடும். இப்பொழுதே இவன் காலஞகிய யமன் கையில் சிக்கிக்கொண்டு நடுங்கிச் சாகிருனே!" என்று சொல்லும்படி இருந்ததாம். நடுக்குறும் இவன் காப்பருங் காலன் கையினன் என்றும் கொள்ளுதல் வேண்டும். வேண்டும் மருந்து கொடுத்தாலும் இனி இவன் சாவதைத் தடுக்க முடியாது என்னும் படியாகக் காலும் கையும் உதறிக் கொண்டிருந்தனவாம். 'காலினன் கையன்' என்றும் பாடியிருக்கலாம். அப்படிப் பாடினுல் இந்தப் பொருள் நமக்குக் கிடையாது போயிருக்கும் அல்லவா? பல்சுவை கருதியும் சிறந்த கவிநயம் கருதியும் கம்பன் சொற்களை அமைப்பான் என்பது இதனுல் தெளிவுறும். காலன் கையினன் என்பதில் இன்னெரு நுட்பமான பொருளும் அறியக் கிடக்கிறது. இராவணன் கொடிய அரக்கனுய் இருந்தாலும், இதுவரை இத்தகைய தீமையைப் புரிந்ததில்லை. இன்ருே உலகின் தாயும் கற்புக்கனலியுமான சீதையைக் களவாட முற்பட்டு வருகிருன். பிறனெருவனின் காதல் மனையாளை வஞ்சகமாய்த் திருடிச் செல்ல வருகிருன்.

அதுவும், ஒரு முனிவன் வேடத்தில் கூடாவொழுக்கம் பூண்டு வருகிறுன் இதுவரை இராவணனைக் கண்டு கூற்று வன் அஞ்சி ஓடிக் கொண்டிருந்தான். ஆனல் என்று இரா வணன் சீதையைத் தூக்கிச் செல்லப் புறப்பட்டான், அன்றே அவன் தொலைந்தவன் ஆனுன்; யமன் கையில் சிக்கிக் கொண்டான். இனி அவனுக்கு உய்வு கிடையாது. "விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில், தீமை புரிந் தொழுகுவார்" என்று குறளும் கூறுகின்றது. ஒரு தூய பெண்ணின் கற்பைக் கலைக்க எண்ணி இந்தத் திருட்டு வேடம் பூண்டவுடனேயே அவன் யமனுடைய கைப்பிடி யில் அகப்பட்டுக் கொண்டவனுனன். இனி அவன் தப்பிப் பிழைக்க இயலாது என்பதைக் 'காப்பரு நடுக்குறுங் காலன் கையினன்' என்ருன்.

மூவாத தவவலியும் முக்கோடி வாழ்நாளும் பெற்றுள்ள இராவணன் இன்றுதான் முதன்முதலாகக் காலன் கையி லகப்பட்டு இயம வேதனை அடைவதானுன். அவ்வாறு யமன் இப்பொழுது வந்து இராவணனைக் கைப்பற்றும் பொழுதும், இதுவரை அவன் இராவணனுக்கு அஞ்சி யொதுங்கியவனுகையாலும் இதுவே முதல் தடவையாகை யாலும், அந்த யமனும் நடுங்கிக் கொண்டேதான் இரா வணனைப் பிடித்தானும். இதனை 'நடுக்குறுங் காலன் கையினன்' என்ற சொல்லமைப்புக் காட்டுகிறது. இராவணன், தான்கொண்ட கிழவேடத்திற்கு இயைய்த் துள்ளித்துள்ளி நடந்தாலும், அது தீ மிதித்தவன் நடை போன்றிருந்தாலும், உண்மையிலேயே கட்டாந்தரையும் கனல்போல் கொதித்துக் கயவனின் கால்களை நடக்க விடாமல் சுட்டுப் பொசுக்கியது என்பதே கவிஞரின் கருத் தாகக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். அரக்கனுடைய வஞ்சகச் செயலைக் கண்டு பொறுக்காது பூமாதேவியும் உள்ளம் கொதித்தாள். அவனை மேல் நடக்கவிடாமல்

கால்களைத் தீயச் செய்தாள். ஆனால் அக்கொடியவன் விடாமல் பாதங்களைத் தூக்கித் தூக்கி ஊன்றிக்கொண்டே சீதையின் உறைவிடத்தை அடையலானான். 'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்களைந்தும் அகத்தே நகும்' என்றார் திருவள்ளுவரும். ஐந்து பூதங்களில் ஒன்றாகிய நிலம் வஞ்ச மனத்தானாகிய இராவணனை நக்கு அகத்தே கூசிய முறை இதுவாகக் கொள்ளுதல் இங்கே பொருந்தும்.

இவ்வாறு புறத்தே இயற்கை அவனைச் சுட்டு வருத்திய போது இராவணனுடைய வஞ்சநெஞ்சமும் அவனைச் சுட்டு வருத்தியது. இந்நிலையில் மூப்பெனும் பருவமும் அவனை முனிந்தது என்கிறார் புலவர். பதமை நிறைந்திருக்க வேண்டிய முதுமையில், அவன் பதைப்பும் காமவெறியும் பிடித்து, தன் வேடத்திற்கு ஒவ்வாத மனநிலையைக் கொண்டிருந்ததால், முதுமைப் பருவத்திற்கே ஓர் இழுக்கு ஏற்பட்டு மதிக்கப்படவேண்டிய மூப்பும் சிறுமைப் படுத்தப்பட்டதால், அந்த மூப்பும் அவனை முனிந்ததாம். எவ்வாறு அது முனிந்தது என்னில், அவனை உலுக்கி உதறிக் களைந்துவிட்டுத் தப்பி ஓட முயன்றதாம். அவ்வாறு மூப்பு முனிந்த நிலையில்தான் அவன் கால் கைகள் வெட வெடத்து ஆடினான் என்பதை உய்த்துணர வைத்துள்ளார் புலவர். மூப்பெனும் பருவம் கொண்ட முனிவால் அவனுடல் ஆட்டம் கண்டது என்க. இன்னும் இப்பாடலின் நயங்களைச் சிந்திக்கச் சிந்திக்க நனி சிறக்கும் என்பதோடமைகின்றேன்.

# கம்பனின் நகைச்சுவை

வீரமா நகரம் என்னும் இராவணன் பட்டணமாகிய இலங்காபுரி ஒருநாள் அல்லோல கல்லோலப்பட்டது. அரக்கர்களெல்லாரும் ஆர்ப்பரித்தெழுந்தனர். எங்கும் போர்க்கோலம். எங்கும் வீரமுழக்கம். இராவணன் மகன் அக்கன் தலைமையில் அரக்க வீரர்கள் விரைந்து சூழ்ந்தனர். இந்திரன் மாநகர் வெந்தே போகுமோ? வைகுந்தலோகம் வையத்து வழுகுமோ? கயிலையங்கிரியே உருண்டு பேருமோ—என்று யாவரும் மருண்டு பார்த்தனர். ஆனால் கொஞ்ச நேரத்திற்குள் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. கண்கள் சிவந்து தீப்பொறி பறக்க மீசையை முறுக்கி மிடுக்குடன் நடந்த கோர அரக்கர்கள் மின்னல்போன்று ஒளிவிடும் வாட்படைகளையும், வேற்படைகளையும், ஈட்டி, தோமரம், உலக்கை, குலிசம், பாசம் முதலிய வற்றையும் தூர எறிந்துவிட்டு, நாலாபக்கமும் சின்னுபின்னமாய்ச் சிதறி ஓடினர். குருதியாறு வெள்ளமாய்ப் பரந்து எங்கும் பெருகியது.

அதோ சில அரக்கர்களைப் பாருங்கள். அவர்கள் உயிர் தப்பினால் போதும் என்று இரத்த வெள்ளத்திலே மூழ்கி மறைந்து ஓட முயல்கின்றனர். எங்கும் பிணக்குவியல்கள் தோன்றுகின்றன. சிலர் தங்கள் உடலை அப்பிணங்களுக்குக்குள் புகுத்துக்கொண்டு மறைகிறார்கள். இறந்ததுபோல் பாசாங்கு பண்ணுகிறார்கள். அந்தோ! பயம் அவர்களைப்

பிடித்துக்கொண்டு என்ன பாடுபடுத்துகின்றது! அவர்களுக்கு என்னசெய்வது என்றே தெரியவில்லை. எங்கு ஓடுவது என்றே அவர்களுக்கு ஓடவில்லை. திசை தெரியாமல் திண்டாடுகின்றனர். சிலர் காலுங்கையும் வழங்காமல் மரமாய் நின்றனர். சிலர் அப்படியே செத்து விழுந்தனர். இடர் வருகின்ற இடம் நோக்கியே இடம் தெரியாமல் ஓடினர். கம்பன் கவிதை வருகிறது :

புண்தாழ் குருதியின் வெள்ளத் துயிர்கொடு
    புக்கார் சிலர்; சிலர் பொதிபேயின்
பண்டாரத்திடை யிட்டார் தம்முடல்
    பட்டார் சிலர்; பயமுந்தத்
திண்டாடித்திசை யறியா மறுகினர்;
    சென்ருர் சிலர்; சிலர் செலவற்ருர்;
கண்டார் கண்டதொர் திசையே விசைகொடு
    கால்விட்டார்; படை கைவிட்டார்.

வீரமுழக்கம் செய்து ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விடுவதுபோல் கிளம்பியவர்கள் இப்படிக் கோழைகளாகிக் குமைந்து அபலைகளைப் போல் அழிவதைக்கண்டால் யாருக்குத்தான் சிரிப்பு வராது? அதிலும் கம்பனுடைய கிண்டலான சொற்களைப்பாருங்கள். 'விசைகொடு கால்விட்டார்; படை கைவிட்டார்' என்னும் வாசகம் ஏளனமாக இல்லையா? வேகமாய் ஓடியதைக் 'கால்விட்டார்' என்றும், ஆயுதங்களைக் கீழே போட்டதைப் 'படை கைவிட்டார்' என்றும் கம்பன் ஒருவனுல்தான் அமைத்துச் சொல்ல முடியும். 'கம்பியை நீட்டினுன்' என்று நாம் இப்பொழுது சொல்வதைத்தான் கம்பன் 'கால்விட்டார்' என்று சொல்லியிருக்கிருன்.

மற்றும் இன்னெரு வேடிக்கையைப் பாருங்கள். அரக்கர்கள் இருந்த இடமே தெரியவில்லை. சில அரக்கர் மீன்க

ளாக மாறிக்கடலுக்குள் விழுகிறார்கள். மீனைத் தின்னும் அரக்கர் மீனாகவே மாறுகின்றார்கள். பசுவைத்தின்னும் அப்பாதகர் பசுக்களாகவும் மாறுகின்றார்கள். அந்தப் பசுக் கள் புல்லை மேய்ந்து திரியும் காட்சி எவ்வளவு உண்மையாக இருக்கிறது! நல்ல நடிப்புத்தான்! புலிபசித்தாலும் புல்லைத் தின்னாது என்பார்கள். புலால் உண்ணும் புலிபோன்ற அரக்கர்கள் இப்பொழுது புல்லையும் அருந்துகின்றார்கள், பசுவேடத்தில் சிலர் பறவைகளாகவும் மேலே கிளம்புகின் றார்கள், இது என்ன இது?

திடீரென்று ஓர் அந்தணர் திரள் கிளம்புகின்றதே! கையிலே தருப்பை! மார்பிலே பூணூல்! உச்சியிலே குடுமி! நாலுவேதங்களையும் விடாமல் ஓதுகின்றார்களே! கடற் கரைக்குத் தருப்பணம் பண்ணப்போகின்றார்களோ? ஏன் இப்படி நடுங்குகின்றார்கள்? இதுவும் அரக்கர்களுடைய வேடிக்கையான நடிப்புத்தான். தாங்கள் யாரை நாள்தவறா மல் நலிவுறுத்துவார்களோ அவர்கள் வேடத்தையே இப் பொழுது பூணவேண்டிய நிலை இவர்களுக்கு வந்து விட் டதே!

அதுமட்டுமா? ஐயோ! இதுவென்ன, ஒரு பேடிக் கூட் டம்! வெட்கக்கேடு! இவ்வரக்கர்களுடைய ஆண்மையெல் லாம் எங்கே ஓடி ஒளிந்து கொண்டதோ? பெண்களாகவே மாறிவிட்டார்கள்! இந்த மான்போன்ற மருண்ட பார்வை தான் இவர்களுக்கு எங்கிருந்து வந்தது? ஆகா! எவ்வளவு நீளமான கூந்தல்! ஆனால் பாவம்! முன்பின் சீவி முடித்துப் பழக்கம் இருந்தால்தானே! பின்னாலே போடவேண்டிய சடையை முன்னாலே இழுத்து முடித்துப் பின்னல் போடு கிறார்களே! வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

"என்னைக் காப்பாற்று, ஐயா! நான் இல்லை, இவன் தான்!" என்று இடையிடையே காட்டிக் கொடுத்துக்

கொண்டு ஓட்டம் பிடிக்கிறார்களே! கோழைகள் ஐந்தாம படை வேலையும் செய்வார்கள் என்பதைக் கம்பன் எவ்வாறு குத்திக்காட்டுகிறான் பாருங்கள்! புலவன் பாடலைப் படித்துத்தான் அவன் நகைச்சுவையை அறிய வேண்டும்:

மீனாய் வேலையை யுற்றார்சிலர்; சிலர்
  பசுவாய் வழிதொறும் மேய்வுற்றார்;
ஊனார் பறவையின் வடிவுற் றார்சிலர்;
  சிலர்நான் மறையவர் உருவானார்;
மானார் கண்ணிள மடவா ராயினர்
  முன்னே தம்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்; சிலர் ஐயா! நின்சரண்
  என்றார்; நின்றவர் 'அரி' என்றார்.

அசோகவனத்தை அழித்துநின்ற அனுமன்மேல் அடர்த்துச் சென்ற அரக்கர்படை அடிபட்டு அழிவுற்ற நிலைதான் இவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது. 'நின்றவர் அரியென்றார்' என்ற வாசகம் ஊன்றி நோக்கவேண்டியதொன்று. அரக்கர்களில் ஓடும் சிலரை அனுமன் பிடித்தவுடனே, அவர்கள் அயல்நின்றவர்களைக் காட்டி 'இவர்களே அரி (பகைவர்), நாங்கள் இல்லை' என்றார்களாம் 'நின்றவர்களை அரி' (கொல்லு) என்றார்கள் எனினுமாம். மற்றும், நின்றவர்கள் 'நாங்கள் அரக்கர்கள் அல்லோம், அரி (குரங்குகளாகிய உன் இனத்தவர்), ஆதலால் எங்களைக் கொல்ல வேண்டாம்' என்றார்கள் எனினுமாம். இன்னும் நின்றவர்கள் 'அரி' என்று திருமாலான இராமன் நாமத்தைச் சொன்னார்கள் என்றுமாம்.

இப்படி உருமாறிப் பலரும் ஓடும்பொழுது, உரு மாறாமல் சில அரக்கர்களும் ஓடினார்கள். அவர்களைத் தேடிவந்த மனைவியரும், மக்களும் மற்றும் உறவினர்களும் அடையாளம் தெரிந்து தழுவியபொழுது, அவ்வரக்கர்கள் "நாங்கள்

உங்களோடு எந்த உறவும் கொண்டவர்கள் அல்ல. நாங்கள் அமரர்கள், வானுலகத்திலிருந்து வந்திருக்கிறோம்' என்று கையுதறித் தள்ளிக் கொண்டு தப்பி ஓடமுயன்றார்கள். அரக்கர் என்று தெரிந்தால் அனுமன் அடித்துக் கொன்றுவிடுவான் என்ற அச்சம் இயல்பாகவுள்ள பாச உறவுகளைக் கூட மறுக்கும்படி செய்கின்ற இக்கோழைத் தனம் நம்மை நகைக்கச் செய்கிறது அல்லவா?

சில அரக்கர்கள் தங்கள் கடைவாயின் கோரப்பற்கள் அடையாளம் காட்டிக் கொடுத்துவிடுமே என்று அஞ்சித் தங்கள் வக்கிர தந்தங்களைத் தட்டி நொறுக்கித் தகர்த்தெறிந்தார்கள். சிலர் தங்கள் தலைமயிர் சிவந்திருப்பதைக் கண்டால் அனுமன் இனம் தெரிந்துகொள்வான் என்று செம்பட்டை மயிருக்குக் கறுப்புச்சாயம் பூசி இருட்டடிப்புச் செய்தார்கள். சிலருக்குக் கோட்டியே பிடித்து விட்டது. சிலர் சோலைகளில் வண்டுகளாய் மாறி மந்தாரப் பண்ணை முரல்வாராயினர்.

கொள்ளைச் சிரிப்பைக் கிண்டிவிடுகின்ற அத்தெள்ளு தமிழ்ப் பாடலைப் பார்ப்போம்:

தந்தா ரமும்உறு கிளையும் தமையெதிர்
　　தழுவுந் தொறும்நும தமரல்லேம்;
வந்தேம வானவர் என்றே கினர்சிலர்;
　　சிலர்மா னுயரென வாய்விட்டார்;
மந்தா ரங்கிளர் பொழில்வாய் வண்டுகள்
　　ஆனார் சிலர்; சிலர் மருள்கொண்டார்;
இந்தார் எயிறுகள் இறுவித் தார்சிலர்;
　　எரிபோல் குஞ்சியை இருள்வித்தார்.

சிலர் மானுயர் என வாய் விட்டார்களாம். அதாவது தங்களை மனிடர் என்று கூறினால் அனுமன் கொல்லமாட்டான் என்ற நினைப்பினால் அவ்வாறு கத்தினார்களாம். எரி

போல் குஞ்சியை இருள்வித்தார் என்ற கம்பனின் வாக்கு நயம் நோக்குதற்கு உரியது. நெருப்புப்போன்று சிவந்த மயிரைக் கறுப்பாக்கியது எரிகிற விளக்கை அணைத்து இருட்டாக்கியதுபோல் இருந்ததாம். மனைவி மக்களையும் கூட இனம் தெரியாதவர்கள்போல் மறுத்து அவர்களுடைய அரவணைப்பிலிருந்து உதறிக்கொண்டு அரக்கர்கள் தேவர்களைப்போல் நடிப்பதையும் அனுமனுக்கு அஞ்சுவதையும் கண்டால், யாருக்குத்தான் சிரிப்பு வராது?

இவ்வாறு கம்பன் யாதொரு வருத்தமுமின்றி மிக எளிதில் நகைச்சுவையைப் புலப்படுத்தி நம்மை மகிழ்விக்கும் திறமை மிக வியக்கற்பாலது. போர்க்களத்திலே கோழைகளாய்ப் புறமுதுகிட்டு ஓடுவோர் அப்போருக்கு உதவாத புல்லிய வலியற்ற கெடுதலில்லாத வேடங்களைப் பூண்டதாகக் கம்பன் காட்டுவதைக் கவனித்தல் வேண்டும் மீன், பறவை, பசு, அந்தணர், பெண் முதலிய வேடங்கள் அத்தகையன.

குயிலாலுவம் என்னும் போர்க்களத்தில் சேரன் செங்குட்டுவன் வடநாட்டு மன்னரை வெற்றி கண்டபோழ்து, கனகன் விசயன் போன்ற எதிரிகள் பிடிபடாமல் தப்புவதற்காக விறலிகளாகவும், பாடினி கூத்தர்களாகவும், துறவிகளாகவும் டலவாறு உருமாறி ஓடினார்களாம். இதனை இளங்கோவடிகள் தாம் இசைத்த சிலம்பில் இயம்பியுள்ளார் :

வாய்வா ளாண்மையின் வண்டமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்தன் சினவலைப் படுதலும்,
சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்

பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்த ராகி யெங்கணும்
ஏந்துவாள் ஒழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர.

இதனைப் பின்பற்றியே கம்பனும் சுந்தரகாண்டத்திற் பாடினன். அவ்வாறு பாடும்பொழுது நகைச்சுவை தோன்ற நன்னய முறுத்துப் பாடினன். இங்ஙனம் சிலம்பிலிருந்து கம்பன் கையாண்ட பகுதிகள் பலவுள.

மேலும், மக்களுடைய மனநிலைக்கும் உலகியலுக்கும் இது மிகவும் பொருத்தமாயுள்ளது. அண்மையில் ஜெர்மனி நாட்டில் நாசித் தலைவனை ஹிட்லர் வீழ்ந்தபொழுது ருசியப் படைகளும் ஆங்கில அமெரிக்கப் படைகளும் பெர்லின் நகருக்குள் புகுந்தன. அப்படைகளுக்கு அஞ்சிய ஜெர்மானிய மக்கள் தம்முயிரைப் பாதுகாப்பதற்காகப் பல விதத் தந்திரங்களைக் கையாண்டனர். சிலர் தாங்கள் நாசிக் கட்சியினர் அல்லவென்று பலகையில் எழுதி வீட்டின் முன் தொங்க விட்டனர். சிலர் தாங்கள் அமெரிக்க ஆதரவாளர் என்றும், சிலர் தாங்கள் ஆங்கில நேயர்கள் என்றும் வாயில்களிற் பொறித்தனர். சிலர் தாங்கள் பொதுவுடைமைக் கட்சியினர் என்று புகன்று கொண்டனர். சிலர் தாங்கள் எப்பொழுதுமே சனநாயகக் கட்சிதாம் என்று சாற்றினர். இவ்வளவும் தங்களைத் தப்பித்துக் கொள்ளக் கையாண்ட தந்திரங்களே. இலங்கை யரக்கரின் செயல்களும் இவை போன்றனவே.

இந்த மனோதத்துவ உண்மையை அறிவதற்கு நாம் ஜெர்மனிக்குக் கூடப் போகவேண்டியதில்லை. நம் நாட்டிலேயே பாக்கலாம். ஆங்கிலேயர் ஆட்சியில் இருக்கும் வரை சட்டையும் சட்டிக் குல்லாவும் போட்டுப் பட்டணத் துரைகளாய்ப் பாண்பேசித் திரிந்தார் பலர். கொக்கே

போயினும் வெந்தேமாயினும் வந்தே மாதரம் வாயாலும் சொல்லோம் என்று அரைகுறை ஆங்கிலத்தின் அடியாளாய் அலைந்தார்கள். வெள்ளையர்கள் மூட்டை கட்டிக் கப்பலேறியவுடன், காந்திக்குல்லா ஏந்திய தலையராய்க் கதரைக் கட்டினர்; இராட்டைச் சுற்றினர்; வந்தே மாதரம் என்று உவந்தே சொல்லினர். தாய் மொழித் தமிழே நம்மைத் தடுத்தாட்கொள்ளும் என்று தட்டிப் பேசினர். இத்தகைய காட்சிகளையெல்லாம் கண்டு களித்தவர்க்குக் கம்பன் பாடல்களின் மேற்குறித்த ஆசியம் கழிபேரின்பம் பயக்கும் என்பது திண்ணம்.

கோழைகளையும் பயங்கொள்ளிகளையும் நகையுறக் காட்டி ஏளனம் செய்வதில் கம்பன் கைதேர்ந்தவன். அதற்கேற்ற சொற்களும் களியாடிக் கைகோத்துக் கலந்து கடுகி வரும்.

அசோகவனத்தை எரியுண்ட துகில்போலச் சிதைத்துத் துவைத்து விட்டான் அனுமன். சோலையைக் காத்து நின்ற தேவர்கள் அஞ்சி நடுங்கி அலக்கணுற்றனர். கால்கள் தள்ளாட ஓடினர். ஆவென்றலறி அரக்கர் கோனை அடைந்தனர். இதைக் கம்பன் பாடுகிறான்:

" நீரிடு துகிலர், அச்சம் நெருப்பிடும் நெஞ்சர், நெக்குப்
பீரிடும் உருவர், தெற்றிப் பிணங்கிடு தாளர், பேழ்வாய்
ஊரிடு பூச லார வுளைத்தனர் ஓடி யுற்றார்—
பாரிடு பழுவச் சோலை பாரிக்கும் பருவத் தேவர்."

இராவணன் கிங்கரர்களை அனுப்பினான். கிங்கரப் படைகள் தங்கவறியாது தவிடு பொடியாயின. காவலாளர் இராவணனிடம் ஓடினர். வாய் குழறியது. பேச முடியவில்லை. எங்கே குரங்கும் கூட வந்து விடுமோ என்று நாலா திசையும் பார்த்தார்களாம். பேச நாவெழாமல்

கையாற் காட்டியே கருத்தை விளக்கினராம். நமக்குச் சிரிப்புவரும் விதத்தில் கம்பன் பாடுகிறான்:

" விரைவி னுற்றனர், விம்மினர் யாதொன்றும் விளம்பார்;
கரத லத்தினுல் பட்டதும் கட்டுரைக் கின்றார்;
தரையி னிற்கிலர், திசைதொறும் நோக்கினர், சலிப்பார்;
அரசன் மற்றவர் அலக்கணே உரைத்திட அறிந்தான்."

இராவணன் உண்மையைத் தெரிந்து கொள்கிறான் தன் படை தோற்றதை அவையிலிருக்கும் திக்குத் தேவர்கள் அறிந்தால் கேலியாகுமே என்று வெட்கப்படுகிறான். நாணம் ஒரு பக்கமும் கோபம் ஒரு பக்கமும் அரக்கனைப் பிடுங்கித் தின்கின்றன. 'நடந்தது இன்னது என்று தெரியாமல் சும்மா உளறுதே' என்று அதட்டியவாறே மழுப்புகின்றான். நமக்குச் சிரிப்பு வந்து விடுகிறது.

" ஏவலி னெய்தினர் இருந்த எண்டிசைத்
தேவரை நோக்கினன், நாணுஞ் சிந்தையான்
யாவதென் றறிந்திலிர் போலு மாலென்றான்,
மூவகை யுலகையும் விழுங்க மூள்கின்றான்."

இறுதியில் இந்திரசித்து நேரிற் சென்று பாசத்தாற் பிணித்து அனுமனை இராவணன்முன் கொண்டுவந்து நிறுத்துகிறான். இராவணன் 'நீயார்?' என்று கேட்கிறான். யாரிடம் எப்பொழுது எவ்வாறு பேச்சுக் கொடுக்க வேண்டும் என்பதை நன்குணர்ந்த சொல்லின் செல்வனுகிய அனுமன் 'நான் வாலியின் மகனுன அங்கதன் விடுத்த தூதன்' என்கிறான். இங்கு வேண்டுமென்றே வாலியின் பெயரை இழுத்து வைத்துப் பேசுகிறான் அனுமன். குரங்கு தானே என்று அலட்சியமாய்ச் சாய்ந்திருந்த இராவணன் திடுக்கிட்டு நிமிர்கிறான். வாலியின் பெயரைக் கேட்டவுடன்

அரக்கனுக்குத் தேள் கொட்டியது போலிருக்கிறது. தான் முன் அவன் வாலிற் பிணிப்புண்டு பட்ட பாடெல்லாம் நினைவுக்கு வருகிறது. வாலியின் நிறையடிக் கோல வாலின் நிலைமையை உன்னுந்தோறும் அரக்கனின் நெஞ்சம் பறையடிக்கிறது.

எனினும் பயத்தை வெளிக்காட்டாமல் ஓர் அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு 'வன்திறலாய வாலி வலியன்கொல்? அரசின் வாழ்க்கை நன்றுகொல்?' என்று வாலி தனக்கு நிரம்ப வேண்டியவன் போலக் கேட்கிறான். அச்சத்தை அரக்கன் அகத்தே அமுக்க முயல்வது அனுமனுக்குச் சிரிப்பை மூட்டுகிறது. நமக்குமே சிரிப்பு வருகிறது. இந்த இடத்தில் அனுமன் இராவணனை எள்ளி நகையாடிப் பேசுகின்ற பேச்சு குத்தலாகவும் நகைச்சுவை விளைப்பதாகவும் அமைகிறது. அஞ்சாததுபோல் நடித்த அரக்கனை அவன் உள்ளம் அஞ்சுவது கண்டு 'அஞ்சாதே அரக்கா!' என்று அனுமன் வாய் திறந்தவுடன் நாம் கொல்லென்று சிரித்து விடுகிறோம். பயந்து நடுங்கும் கோழை ஒருவனைத் தட்டிக் கொடுத்து, 'பயப்படாதே' என்று சொல்வதுபோல் அனுமன் இராவணனுக்குச் சொல்கிறான். மூவுலகையும் வென்ற பொல்லா அரக்கனைச் சொல்லால் மடக்கிச் சுடச் சுடப் பேசவல்லார் அனுமனையன்றி வேறு யாரே உள்ளார்? 'அஞ்சாதே அரக்கா! வாலி வானுலகம் புகுந்துவிட்டான்' என்கிறான் அனுமன். ஐயோ! வானுலகம் புகுந்துவிட்டால் என்ன? மீண்டும் தன் மீது கோபித்துத் திரும்பிவிட்டால் என்ன செய்வது என்று அரக்கனுக்குப் பயம் இருக்குமே. அதையும் தீர்த்துவைக்கிறான் அனுமன். 'வெஞ்சின வாலி மீளான்' என்கிறான். இராவணனுக்கு வாலியைப் பற்றி அவ்வளவு பயம் இல்லை. அவன் வாலைப் பற்றித்தான் கவலை. வாலி வானுலகம் போய் இருக்கலாம். ஆனால் அவன் வால் மண்ணுலகில் வைக்கப்பட்டிருந்தால்

என்ன செய்வது? அது வந்து நலிவுறுத்துமோ என்று அவன் தளரலாம் அல்லவா? அல்லது வாலி மீளாது போயினும் அவன் வால் மீண்டுவிட்டால் என்ன செய்வது என்று இராவணன் ஏங்கலாம் அல்லவா? அந்த ஏக்கத்தை யும் தீர்த்து வைக்கிறுன் அனுமன். 'வாலும் போய் விளிந்த தன்றே.' வால் செத்தே போய்விட்டது. இனி வராது என்று தைரிய மூட்டுவதுபோல் இகழ்ச்சி ததும்ப நகைக்கு இரையாக்குகிறுன் இராவணனை. இப்பொழுது முழுப் பாடலையும் பார்ப்போம்.

" அஞ்சலை அரக்க! பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி, மீளான், வாலும்போய் விளிந்த தன்றே!
அஞ்சன மேனி யான்தன் அடுகணை யொன்ருல் மாழ்கித்
துஞ்சினன்; எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல்
என்ருன்."

கம்பனுடைய இராமாயணத்தில் இப்பாடல் நகைச் சுவைக்கே ஒரு மகுடமாகத் திகழ்கிறது. வாலும் போய் விளிந்தது என்பது இப்பாடலின் உயிரான பகுதி. விளிந்த வாலினின்று நெளிந்தெழுகின்ற நகையின் இன்சுவை சொல்லும் தரத்ததன்று. அனுமன் இங்கு இராவணனைச் சொல்லாலேயே கொன்று விடுகிறுன். ஆயினும் அவ்வரக் கன் சாகாதிருந்தான், பின்னுல் இராமன் வில்லாலே கொல் வதற்கு இராவணன் அச்சத்தை அகற்றுவதுபோல் அனுமன் அவன் கொச்சைத் தனத்தையும் கோழைப் புத்தி யையும் நகையுற வைத்து நாணச் செய்கிறுன். இராவணன் திகைக்கிறுன். நாம் நகைக்கிறேம்.

இதுபோல் இராமாயண நூல் நெடுகிலும் நகைச்சுவை மின்வெட்டுப்போல் மிளிரும்படி அற்புதமாக அமைத்துக் கம்பன் நம்மைக் களிக்கச் செய்துள்ளான். சூர்ப்பணகைப் படலத்தில் தொட்ட தொட்ட இடமெல்லாம் ஆசியச் சுவை

யமுதம் அலைமோதப் பொங்கியெழுந்து நம்மைப் பூரித் தாட்டா நிற்கும். அவ்வாறு பாத்திரங்களின் குணசித்திரங் களுக்கு இயன்றவாறு, இயல்புக்கு மாறுபடாமலும், இழி சினர் கையாளும் இகழ்ச்சிக்குரிய கேலிக்கூத்தாகி விடாமலும், உயர்நிலை பிறழாமல் நகைச்சுவை யமைத்துப் பாடவல்லவர் மிகச் சிலரேயாவர். அவர்களுள் கம்பன் மிகச் சிறந்தவன் ஆவான். கற்போர் கற்கும் முறையிலே கற்ருல்தான் கம்பனின் நகைச்சுவை இனிது புலனாகிக் களிப்பூட்டும்.

# வீரச் சுவை

பாரத நாட்டு இரு கண்கள் எனப் போற்றத் தருவன இராமாயணமும் மகாபாரதமும். அவ்விரு இதிகாசங்களும் சிறந்த காவியங்கள். அவற்றில் ஒன்பான் சுவைகளும் ஊறித் ததும்புகின்றன. அவற்றுள்ளும் வீரச் சுவை வீறிட்டு மேலெழுகின்றது. ஏனெனில் அவ்விரு இலக்கிய நூல்களும் பயங்கரமான மிகப் பெரிய போர்களின் வரலாற்றைக் கூறுகின்றன. இராம இராவணப் போர் பதினெட்டு மாதங்களும் மகாபாரதப் போர் பதினெட்டு நாட்களும் நடந்துள்ளன. அவற்றில் நாம் பல வீரச் செயல்களைக் காண்கிறோம். ஆனால், வீரச் சுவையில் மிகச் சிறந்தது இராமாயணமா? பாரதமா? என்பதே இப்பொழுதுள்ள கேள்வி.

இராமாயணத்திலும், மற்றும் இராமனைப்பற்றிப் பேசும் பல நூல்களிலும் இராமனை வீரன் என்று பாராட்டிக் கூறப்படுவது இங்கே நோக்கத்தக்கதாகும். இராமனுக்குள்ள பல பெயர்களுள் "மகாவீரன்" என்பதும் ஒன்று. "மகா வீர சரிதம்" என்றே பெயர் கொடுத்து இராமனைப் பற்றி ஒரு நாடகத்தை வடமொழியில் பவபூதி என்பவர் எழுதியுள்ளார். இராமன் "வீர ராகவன்"என்றும் அழைக்கப்படுவான். தேசிகர் செய்த ரகுவீரகத்யம் "ஜய ஜய மகா வீர" என்றே தொடங்குகிறது. ஆழ்வார்களும் இராமனது

வீரச் செயல்களை விளம்பி விளம்பி வீரனே என்று விளிக்கின்றனர். "இலங்கை மன்னனைத் தொடைந்து பைந்தலை நிலத்துகக் கலங்க வன்று சென்று கொன்று வென்றி கொண்ட வீரனே" என்றும், "மாறுசெய்த வாளரக்கன் நாளுலப்ப அன்றிலங்கை நீறுசெய்து சென்று கொன்று வென்றி கொண்ட வீரனார்" என்றுமுள்ள திருச்சந்த விருத்தம் முதலிய பாசுரங்களில் காணலாம்.

இங்ஙனம் ஆசிரியர்களும் ஆழ்வார்களும் போற்றுவது ஒருபுறமிருக்க, இராமனது கடும் பகைவனாகிய அரக்கன் இராவணனே இராமனது வீரத்தைச் சொல்லிச் சொல்லி வெருவுகிறான். "தீயினுங் கொடிய இச்சேவகச் செய்கை கண்டால் நாயெனத் தகுதுமென்றே காமனும் நாமுமெல்லாம்" என்றும், "பல்லலங்காரப் பண்பே காகுத்தன் பகழிமாதோ" என்றும், "நாசம் வந்துற்ற காலை நல்லதோர் பகையும் பெற்றேன்" என்றும் பலவாறு இராவணன் பாராட்டுகின்றான். ஆயினும், "சினவுண்மை தெரிந்ததில்லை" என்றும் ஏத்துகின்றான். பகையுளும் பண்புடையவன் தர்ம வீரனான இராமன்.

இராமனை வேண்டித் தசரதனிடம் சென்ற விசுவாமித்திரன் "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம்" என்று கூறினான். இதில் ஸத்யபராக்ரமம் என்பதற்கு, "எதிரியின் சோர்வு பார்த்து அவனை வதைத்திடாமல் ஆந்தனையும் அவனை வாழவிடுத்து, அது கைகூடாவிடில் கடைசியாகக் கொன்றொழிப்பதே ஸத்ய பராக்ரமம்" என்று விளக்கம் கூறுவர்.

மகாபாரதத்தில் பெரும்படைத் தலைவர்களும் வீரர்களும் வந்து போவது உண்மையே. வீடுமன், துரோணன், கர்ணன், துரியோதனன், வீமன், அருச்சுனன் முதலியோர்

பெரும் போர்வீரர்களாய் விளங்கினுர்கள் என்பதில் ஐய மில்லை. ஆயினும் பாரதப்போர் குழப்பம் மிகுந்த ஒரு குடும்பச் சண்டையாகவே தோன்றுகின்றது, வீடுமன் கௌரவர் படைக்குத் தலைமை தாங்கிஞலும் பாண்டவர் பக்கமே பரிவு காட்டினுன். அவன் முதுமையால் தளர்ந்தவனும் ஆவான், துரோணன் குரு என்ற முறையில் வில்வித்தையில் சிறந்தவனுய் விளங்கினும், பிறப்பிலே அந்தணனுகையால், வீரத்திற்கு எங்கே போவான்? தன் மகன் மீது கொண்ட அன்பே அவனுக்கு அவல நிலையை அடைவித்தது. தருமன் வாய்மை தவருதவனுய் இருந்தும், துரோணனைத் தீர்த்துக்கட்டுவதற்காக "அஸ்வத்தாமா ஹதகா குஞ்சாகா" என்று ஓர் உண்மையைத் தீமை பயக்கச் சொல்லவும், துரோணன் வில்லைக் கீழே போட்டுவிட்டான். தருமனும் தருமத்தைச் சிதைத்துவிட்டான். கர்ணனுக்கு மட்டுக்கு மிஞ்சிய செருக்கும் குருசாபமும் சேர்ந்து அவன் வீரத்தைக் குலைத்துவிட்டன. கொடைமடமும் கூடி அவனைக் கொன்றது. அறங்கூருது அல்லவை செய்யும் துரியனின் வீரத்தை அவன் பாவமே பதங்குலையச் செய்தது. வீமனே உடல்வலியைப் பெருக்கிக் கொண்ட ஒரு முழு முரடன். உருப்படியாக ஒரு போரை நடத்தி வெற்றி காணும் மிடுக்கும் வீரமும் அவனிடம் விளையவில்லை. காண்டீபனே போரை வேண்டாதவன், போரின் வேதனையைக் கீதையின் போதனையால் ஒரு சாதனையாகக் கொண்டு சோதனை நடத்தினுன். உற்ருர் உறவினரிடையே அவன் வீரம் நன்கு செழித்து விளங்கவில்லை. கிருட்டினனே மிரட்டியும் மருட்டியும் போர்க்களத்தில் அவன் தேர்ச்சக்கரங்களை உருட்டினுன். கண்ணனுடைய கைப்பாவையாக அருச்சுனன் ஆடினுனே ஒழிய, இயல்பாக யாதொரு வீர உணர்ச்சியும் அவனிடம் எழக்காணேம். அபிமன்னனும் சிறந்த வீரன்தான். ஆயினும் அவனுக்கு

எதிரியின் வியூகங்களைப் பிளந்து உள்ளே செல்லத் தெரிந்ததேயல்லாமல், வெளியே வெற்றியுடன் மீளக் கற்றானில்லை. ஆதலால் அவன் வீரமும் சிறக்காது போயிற்று. இறுதியில் வீமன் கதையையும் விசயன் வில்லையும் கையில் எடுக்கவும் ஆற்றல் இன்றி மெலிவாராயினர் கண்ணனுடைய வஞ்சனைச் செயல்களும், அறத்திற்குப் புறம்பான அழிவுச் சூழ்ச்சிகளும் அனைவர் வீரத்தையும் புகலாக அடித்துப் போக்கிவிட்டன. பாரதப் போரில் அறத்திற்கு இடமே இல்லாது போய்விட்டது. ஆதலால் வீரமும் வீணாகிவிட்டது. வீரத்திற்குப் பதிலாகப் பொய்யும், சூதும், சூழ்ச்சியும், மோசடிகளுமே முதன்மை பெறுகின்றன.

கௌரவர் பக்கம் கர்ணனையும் பாண்டவர் பக்கம் அருச்சுனனையும் சிறந்த போர்வீரர்களாகக் கூறலாம் அவ்விருவரிடையே இறுதிப்போர் நிகழ்ந்தது. அப்பொழுது கர்ணன் தேர்ச்சக்கரம் மண்ணில் பதிந்து சிக்கிக் கொண்டது. தேர் ஓடவில்லை. கர்ணனுக்கும் கைகால் ஓடவில்லை கையில் யாதொரு படையும் இன்றி அவன் கீழே இறங்கிச் சக்கரத்தைத் தூக்க முயன்றான். அவ்வமயம் அறம் கருதித் தன்னை அடிக்கலாகாது என்று அருச்சுனனைப் பன்முறை வேண்டி உயிருக்கு இரங்கினான். அவன் பரிதாப நிலையைப் பார்த்துப் பார்த்தனும் தயங்கினான். அப்பொழுது கண்ணன் குறுக்கிட்டு, "கர்ணா! இப்பொழுது அறம் அறம் என்று அலறுகிறாயே, பாண்டவரைக் காட்டுக்குத் துரத்திய போதும், பாஞ்சாலியைத் துகில் உரிந்த போதும், பாலன் அபிமன்னனைப் பலர் கூடிப் படுத்த போதும் உன் அறவுணர்ச்சி எங்கே போயிற்று? அருச்சுனா! இவனை விடாது கொல்" என்று சீறினான். அருச்சுனனும் அம்பு மாரி பொழிந்து தரையில் தள்ளாடிய கர்ணன் தலையைத் துண்டித்துவிட்டான். அதைப் படிக்கும் நாம் இதுவும் ஒரு வீரமா? என்று வருந்துகிறோம். போரில் மயிர் குலைந்தோ

னையும், பெண்பெயரோனையும், ஒத்த படை எடாதோனையும், புறங்கொடுத்தோனையும், உயிர்ப் பிச்சை கேட்டு இரந்தோனையும் கொல்லாது விடுதல் வீரத்தின் அறமுறையாகும். பகைவன் மேற்கண்ணோடாது செய்யும் மறம் ஆண்மைமிக்க வீரம்தான். ஆனால் அப்பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்து சோர்ந்த இடத்து, அத்தாழ்வு நீங்க ஒரு வாய்ப்புக் கொடுப்பது வீரத்தின் கூர்மையாகும். "பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு." என்பது திருக்குறள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினவன் ராமன். முதல் நாட் போரில், தன் படைகளெல்லாம் அழிந்து, படைக் கலங்களெல்லாம் ஒழிந்து வெறுங்கையனாய், ஆலம் விழுதுபோல் இருபது கைகளையும் தொங்கவிட்டுப் பத்துத் தலைகளையும் இறங்கவிட்டு இராவணன் நின்றபோது, இராமன் ஒரே அம்பினால் தன் தேவியைப் பிரித்த பாவியின் ஆவியைப் போக்கியிருக்கலாம். ஆனால் இராமன் என்ன செய்தான்?'' இன்று போய் நாளை நின் தானையோடு வா'' என விடுத்தான். வீரத்தின் கூர்மையை நாம் இங்கே காண்கிறோம்.

இராமன் நடத்திய வீரப்போர்களில் சிறப்பாக கரன் வதையையும் மூலபல வதையையும் கூறலாம். இராமன் ஒருவனாகவே நின்று; கறங்குபோற் சாரிகை திரிந்து, கணக்கிலா இராமர்களாகத் தோன்றிக் களம் முழுதும் தானேயாய் வெள்ளமாய் வந்த அரக்கரின் உயிரைக் கொள்ளை கொண்டு வீராதி வீரனாய் விற்போர் நிகழ்த்தினான்.

இராமனைப் போல் இலக்குவனும் ஓர் ஒப்பற்ற வீரன். அடைக்கலப் பொருளாகிய வீடணன் உயிரைக் காப்பதற்காக, அவனைக் குறித்து வந்த இராவணனது தப்பாத வேற் படையைத் தானே தன் மார்பில் ஏற்று உயிர் கொடுத்த தீரன். "விழித்த கண் வேல்கொண்டெறிய அழித்திமைப்பின், ஓட்டன்றோ வன்கணவர்க்கு'' என்ற குறளின்படி நடந்த சூரன். இத்தகைய வீரரை மகாபாரதத்திற் காண முடியாது. ஆதலால் வீரச் சுவையில் மிகச் சிறந்தது இராமாயணமே யாகும்.

# சித்திரத் தாமரை

மனத்தை உருக்கும் நிகழ்ச்சிகள் நிறைந்த இராமா யணக் காவியத்தில், இராமன் முடிதுறந்து காடு நோக்கிப் புறப்படும் இடம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உச்சநிலைக் கட்டமாகும். அதற்குக் காரணமாய் இருந் தவள் கைகேயி. இராமன் அவளிடம் பெற்ற தாயினும் பேரன்பு கொண்டிருந்தான். தான் வளர்த்த கிளிக்கு யார் பெயர் இடுவது என்று சீதை கேட்டபொழுது, 'அன்னை கைகேயியின் பெயரையே அமைத்திடுக' என்று இராமன் கூறினான். கோசலை இராமனைப் பெற்றதைத் தவிர, அவனை வளர்க்கத் தவம் செய்தவள் கைகேயியே யாவாள். பரதனைவிட இராமனையே தன் அன்பிற் சிறந்த மகனாகக் கருதி யிருந்தவள் கைகேயி. 'இராமனைப் பெற்ற எனக்கு இடரும் உண்டோ?' என்று பூரித்து இன்பத்தில் திளைத்து வந்தாள். இராமனுக்கு நாளை முடிசூட்டு விழா என்று கூனி சொன்னதும் யாதொரு வேறுபாடும் அறியாத அவள் தூய மனம் மிக்க மகிழ்ச்சி அடைந்தது. உடனே விலை யுயர்ந்த ஒரு மணி மாலையை எடுத்துப் பரிசளித்தாள். அத் தகைய கைகேயியின் மனத்தைக் கூனி மாற்றினாள். தன் மாற்றாளான கோசலை பால் உண்டான அழுக்காறு இராமன்மீது கொண்டிருந்த அன்பையும் அழுங்கச் செய்தது. அவள் அறிவையும் மழுங்கச் செய்தது. அன்றிரவு

தசரதனிடம் இரண்டு வரங்களைக் கவர்ந்தாள். அவற்றைத் தெரிவிக்க மறுநாட் காலை இராமனைத் தன்னிடம் அழைத்தாள்.

தாய் என நினைத்து வந்த இராமன் முன்னே உயிருண்ணும் காலன்போல், உள்ளத்து இரக்கமே இன்றித் தமியளாய்க் கைகேயி வந்தாள். அன்னைமுன் எவ்வாறு பணிந்து இராமன் மரியாதை காட்டினான் என்பதைக் கம்பர் பாடுகிறார்:

"வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவழச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டஆன் கன்றின் அன்னான்."

தாயிடத்து மகன் எவ்வாறு பணிவும் பரிவும் காட்ட வேண்டும் என்பதை இந்தச் செய்யுள் ஓர் எழிலோவியமாக அமைத்துத் தருகிறது.

பசுவிடத்துக் கன்றுபோற் பரிவு காட்டிய இராமனிடம் தன் கருத்தைக் கைகேயியால் உடனே சொல்ல முடியவில்லை. 'உன் தந்தை ஒன்று சொல்லும்படி ஏவினார்,' என்று தயங்கியே பேசுகிறாள். தானே வேண்டிய வரங்கள் என்று சொல்லவும் கூசுகிறாள். அதைக் கேட்ட இராமன் பேருவகையனாகிப் புன்னகை பூத்து, 'தந்தையின் ஏவலைத் தாயாகிய நீரே திருவாய் மலர்ந்தருளுவதானால் என்னைவிடப் பாக்கியசாலி வேறு யார்? பிறவிப் பயனை இன்றே பெற்றவனானேன். தந்தையும் தாயும் நீரே. தாயே அருளுக. இப்பொழுதே செய்து முடிக்கிறேன்' என்று கூறுகிறான் அப்பொழுது நம் உடல் சிலிர்க்கிறது. என்ன குணசாலி!

என்ன அன்பு! அந்த அன்னை இந்த மகனுக்கு ஒரு தீங்கேனும் கருத முடியுமா? கருதலாமா? அவள் அவ்விதம் செய்யின் நாம் அதைப் பொறுக்க முடியுமா? அந்நிலையே கெட்டோம் என்று அலறித் துடித்து விழுவோம் அல்லவா? அந்த நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து விடுகிறது கம்பரின் தெய்வீகப் பாடல். தான் சொல்லியபடி கேட்க இராமன் தயாராக இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்ட கைகேயி பின்வருமாறு தெரிவிக்கிறாள்.

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்று ஏவினன் அரசன் என்றாள்."

இது எல்லோருக்கும் தெரிந்த பாடல்தான். ஆனால் இதன் நயங்களையெல்லாம் தெரிவதற்குக் கைகேயி எவ்வாறு கூறியிருப்பாளோ அவ்வாறே, கூட்டும் இடத்தில் கூட்டியும் நீட்டும் இடத்தில் நீட்டியும், இழுக்கும் இடத்தில் இழுத்தும் குறைக்கும் இடத்தில் குறைத்தும், அசைத்தும், இசைத்தும், அழுத்தியும் பாடிப் பார்க்க வேண்டும். சிலர் நீண்ட காலத்துக்கு இடையே நடக்கும் நிகழ்ச்சிகளை, வேகமாய்ச் சொற்களை உச்சரிப்பதன் மூலம் அண்மையில் நடப்பது போன்ற உணர்ச்சியை நமக்கு ஊட்டி விடுவார்கள். சுருங்கிய காலத்தில் நடக்கும் செயல்களை நீட்டி யிழுத்துச் சொல்லி மிகத் தொலைவுக்குக் கொண்டுபோய் விடுவார்கள். ஒரு மாற்றாந்தாய் இருந்தாள். அவள் தன் குழந்தையை வாரத்துக்கு இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவாள். தன் மூத்தாள் குழந்தைக்கு ஆண்டுக்கு ஒருமுறைகூட எண்ணெய் காட்டுவது கடினம். பக்கத்திலுள்ளவர்கள் குறைகூறத்

தொடங்கினர். அதற்குச் சலித்துக்கொண்ட அக்கொடியவள், பின்வருமாறு சமாதானம் கூறுவாள். "என் குழந்தையைச் சனியோஒட சனி, புதனோஒட புதன்தான் குளிப்பாட்டுகிறேன். என் சக்களத்தி பிள்ளையைத் திவளிக்குத் திவளி, திவளிக்குத் திவளி முழுக் காட்டுகிறேன். அப்படியிருந்தும் ஊரார் என்னைக் குறை கூறுகிறார்களே" என்று அங்கலாய்த்துக் கொள்வாள். இங்கே, சனியும் புதனும் ஆண்டுக்கு ஒருமுறை வருவனபோல் நீட்டி இழுத்துப் பேசுவாள். தீபாவளி என்று நெடில் எழுத்துக்களில் கூறினால் நீண்டு தோன்றுமோ என்று அஞ்சி அதைத் திவளி என்று குறுக்கி, அடுத்தடுத்துத் துரிதகதியில் திருப்பிச் சொல்லி, வாரத்துக்கு இருமுறை தீபாவளி வருவது போல் பேசுவாள். இது பேச்சுத் திறமையிலுள்ள ஒரு சாமர்த்தியம். அவ்வாறு கைகேயியும் இங்கு பேசக் காணலாம்.

இராச்சியம் முழுவதும் பரதனுக்கு உரித்தாகிவிட்டது என்று சொன்னால், அந்தப் பேறு தனக்குக் கிடைக்கவில்லையே என இராமன் வருந்தக் கூடாதல்லவா? அதற்காக, ஒருவருக்கும் வராத ஒரு பெரும் துன்பம் பரதனுக்கு வந்துவிட்டதுபோல் பேசுகிறாள் கைகேயி. தனியாகவே தாங்கி ஆளும்படியான துன்பம் பரதனுக்கு நேர்ந்துவிட்டது என்பது போல, 'பரதனே ஆஅள' என்று நீட்டுகிறாள். ஆள்வது துன்பம் என்பதை 'ஆஅழி சூஉழ் உலகம்' என இழுத்துக் காட்டுகிறாள். இவ்வாறு துன்பம் தொனிக்கப் பேசியவள் மேற்கொண்டு இன்பம் தொனிக்க இனிக்கப் பேசுவதைக் காணலாம். இராமனுக்கு நேரும் இன்னலை இன்பம்போல் காட்டுகிறாள். இராமன் அந்தத் துன்பத்தினின்றும் விடுபட்டான் என்பதை, 'நீபோய்' என்கிறாள். ஒருவருக்கும் கிடைக்காத தவம் இராமனுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை, 'தாழ் இரும்

சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு' என்கிறாள். பொன் மகுடம் தாங்குவதைவிடத் தாழ்ந்த பெரிய சடைகளைத் தாங்குவதும், அரியணை மேற்கொள்வதைவிடத் தவம் மேற்கொள்வதும் இன்பம் போலப் பசப்புகிறாள். இராமன் போகவேண்டிய இடம் மிக நல்லதாம். பட்டு மணல் பரப்பி விட்டதுபோல் மெத்தென்றிருக்கும் விரும்பத்தக்க காடு என்று இராமன் நினைக்க வேண்டுமாம். அதற்காக, 'பூழிவெம் கானம் நண்ணி' என்கிறாள். அங்கே அவனுக்குப் புண்ணியம் காத்துக் கொண்டிருக்கிறதாம். நீராடுவதற்குப் புனிதமான ஆறுகள், நீர் நிலைகள் எல்லாம் உண்டாம். மனம் போலக் குளித்து விளையாடி மகிழலாம். 'புண்ணியத் துறைகள் ஆடி' என்கிறாள். இவ்வாறு எத்தனை நாளைக்கு? பதினான்கு ஆண்டு என்றால் பையன் ஒருவேளை பயந்து விடுவானோ என்று, 'ஏழ் இரண்டு ஆண்டு' எனச் சுருங்கிய காலம்போல் காட்டுகிறாள். இவ்வளவும் தந்தை கூறினார் என்றால், அப்பா தானே என்று மகன் அசட்டை செய்யலாகாதே எனக் கருதி 'ஏவினன் அரசன்' என்றாள். அரசன் என்பதை அழுத்திச் சொன்னாள். அவன் கட்டளை மீறலாகாது என்பது தோன்ற. இவ்விதம் மேலே குறித்த பாடலைப் பாடிப் பார்த்தால் இத்தனை நயமும் இனிது சிறக்கக் காணலாம். அன்பே உருவான தூமொழி மடமானை கைகேயி ஓர் இராப்பொழுதுக்குள் இத்துணை நயவஞ்சகியாக மாறிவிட்டதைக் காண நம் உள்ளம் துணுக்கம் எய்துகிறது.

ஆனால், துணுக்கம் எய்திலன் இராமன். அவன் தங்கக் கம்பி போன்றவன். அவனது சிரித்த முகம் தாய் மொழிந்ததைக் கேட்டதும் மும்மடங்கு மேலும் மலர்ந்து விளங்கியது. அசோக வனத்துச் சிறையிருந்த செல்வி அந்த முகத்தை நினைத்ததாகக் கம்பர் சுந்தர காண்டத்தில் காட்டுகிறார்:

"தெம்ம டங்கிய சேணிலம் கேகயர்
தம்ம டந்தைஉன் தம்பிய தாம்என
மும்ம டங்குபொ லிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை உன்னி வெதும்புவாள்."

இப்பாடலில் மும்மடங்கு என்று புலவர் குறிப்பிடுகிறார். முகம் பொலிவெய்தியது என்று சொன்னாலேயே போதும். ஆனால் மூன்றாக எண்ணி 'மும்மடங்கு' என்று கூறியுள்ள குறிப்பை ஓர்தல் வேண்டும். 'தெம்மடங்கிய' என்றதனால், பகைவராகிய அரக்கரை அழிக்கும் வாய்ப்புக் கிட்டிவிட்டது என்று ஒரு மகிழ்ச்சி. கேகயர் தம் மடந்தை கூறினாள் என்பதால், அன்னையின் சொற்படி நடக்கும் பேறு தனக்குக் கிடைத்ததே என்று இருமடங்கு மகிழ்ச்சி. சேணிலம் 'உன்தம்பியது ஆம்' என்றதால், தன் உயிரினு மினிய தம்பி உத்தமப் பரதனுக்குப் பட்டம் கிடைத்ததே என்று மும்மடங்கு மகிழ்ச்சி. ஆக இம்மூன்று மகிழ்ச்சிகளாலும் இராமன் முகம் பொலிந்ததை மும்மடங்கு பொலிந்தது என்றார்.

கூற்றினும் கொடிய கைகேயியின் கடுமையான கட்டளை இராமனுக்குக் கிடைக்க விருந்த பொன்முடியையும் தட்டிப் பறித்து, உலக வாழ்க்கை யின்பத்தையும் கொட்டிக் கவிழ்த்துக் காட்டினிடத்தே அவனை நெட்டித் தள்ளியது. ஆனால் அவன் மனம் தள்ளவில்லை. கவலை கொள்ளவில்லை. தாயை எள்ளவில்லை, விள்ளவும் இல்லை. சிரித்த பங்கயம் ஒத்த அவன் திருமுகம் முன்னையிலும் அதிகம் ஒளிகாட்டி விளங்கலாயிற்று. உடனே கைகேயியின் அடிபணிந்து 'தந்தையே யன்றி நீரே ஏவினும் யான் மறுப்பதொன்று உண்டோ? என் தம்பி வேறு, நான் வேறா? அவனுக்குக் கிடைத்த அரசு எனக்குக் கிடைத்த மாதிரிதான். இப்பொழுதே காடு செல்கின்றேன். தாயே

விடை கொடுங்கள்' என்று இராமன் செலவு கொண்டான். அப்பாடல் வருமாறு:

" மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
என்இனி உறுதி யப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்ஒளி கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்.''

வையத்து மனிதனையும் வானுறையும் தெய்வமாக ஆக்கிவிடும் தேமதுரச் சொற்கள் இவை. 'மன்னவன் பணி என்று நீ சொல்வது போலன்று; ஆயினும் உன் பணி மறுப்பேனோ' என்று முதலடியில் தொனிப்பதைக் காணலாம். 'மின் ஒளி கானம்' என்பது மின்னல் போன்று வெயில் வீசுகின்ற கானம் என்றும், மின்னற்கொடி போல் வாளாகிய சீதை மறையும் காடு என்றும் பொருள்பட நிற்பதையும் காணலாம். தன் இயல்பான அன்பை விடுத்து இரக்கமற்ற கொடியவளாகக் கைகேயி மாறிவிட்டதை இராமன் உணராதவன் அல்லன். ஆயினும் அவள் தந்த இன்னலுக்கு இசைந்து நின்றான். அதுவே நம்மை இறும்பூது கொள்ளச் செய்கிறது. கைகேயி நஞ்சு பெய்வதைக் கண்டும் அதனை இராமன் உண்டு நாகரிகமாக நடந்து கொண்டான். அவன் நன்னயம் நம்மை விம்மிதம் அடையச் செய்கிறது

இடுக்கண் வந்துற்றபோது நகுவதோ டமையாது மகிழ்ச்சியுறுவது செயற்கருஞ் செயலேயாகும். இதனைச் 'செப்பருங் குணம்' என்கிறார் கம்பர். அத்துன்பத்தில் இராமன் முகம் பெற்றிருந்த விளக்கத்தை அப்பொழுது

கண்கூடாகக் கண்டவர்கள் சொல்ல வேண்டுமேயல்லாமல் இப்பொழுது நாம் எவ்வாறு சொல்லுதல் கூடும் என்று கைவிரித்த கம்பர் ஒருவாறு சொல்லிப்பார்க்க முற்படுகிறார்.

"இப்பொழுது எம்ம னோரால் இயம்புதற்கு எளிதே யாரும்
செப்பரும் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா!"

இச்செய்யுள் இன்சுவையே எழிலுருப் பெற்றது என்னலாம். 'இராமன் திருமுகச் செவ்வி முன்பு, அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை ஒப்பதே; அவ்வாசகம் உணரக்கேட்டபின் (அதனை) வென்றது அம்மா' எனக் கூட்டிப் படிக்கவேண்டும். வென்றது என்றால் ஒப்புமை இல்லை என்பது பெறப்படும். அங்ஙனமாயின் வேற்றுமை யாது என்பதை நாம் ஆராய்தல் வேண்டும். அந்த நேரத்தில் இராமன் முகநிலையை நேரிற்கண்டு அனுபவித்தவள் சீதை. அந்த முகத்தை அவளால் ஒருநாளும் மறக்கக்கூட வில்லை அசோகவனத்தில் வருந்தியிருந்து நினைக்கிறாள். அது எப்படிப்பட்ட முகம்?

"மெய்த்தி ருப்பதம் மேவு என்ற போதினும்
இத்தி ருத் துறந்து ஏகு என்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள்."

இதில் இராமன் முகம் ஒரு சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரைக்கு ஒப்பிடப்படுகிறது. சித்திரம் என்பதைப் படம் எனக்கொண்டு, படத்தில் வரைந்த தாமரைபோல் மாறுபடாது ஒரேபடித்தாய் இராமன் முகம் இருந்தது என்றுபொருள் கூறுவது உண்டு. இதைச் சிறிது சிந்திக்க வேண்டும். இராமன் முகம் ஒரேபடித்தாய் இருக்கவில்லை.

தனக்குப்பட்டம் என்ற போதைவிட, பரதனுக்கே பட்டம் என்றபோது மும்மடங்கு பொலிந்த முகம் அப்படியே யிருந்தது என்று சொல்ல முடியாது. அப்பொழுதே அலர்ந் திருக்கும் உண்மைத் தாமரையை வென்ற ஒரு முகம், கேவலம், ஒரு சித்திரத்தில் தீட்டிய பொய்த்தாமரையை ஒத்தி ருந்தது என்று கூறுவதில் யாதொரு பொருட்சிறப்பும் பயனும் இல்லை. பின், வேறு பொருள் யாது?

மனிதர் முகம் எப்பொழுதும் ஒரு நிலையில் மலர்ந்திருப்பது அரிது. காலையில் இருக்கிற முகம் உச்சியில் வேறாகி மாலையில் மாறிவிடும். இவ்வுண்மையை,

"காலையில்ஒன் றுவர் கடும்பகலில் ஒன்றுவர்
மாலையில்ஒன் றுவர் மனிதரெலாம்-சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்."

என்ற ஔவையார் பாடல் அறிவுறுத்துகிறது. காலை மாலை என்னும் இரண்டும் இன்பம் துன்பம் எனும் இவற்றைக் குறிப்பதாக நாம் கொள்ளலாம். தாமரை மலர் காலையில் சூரிய ஒளியில் மலரும், மாலையில் இருள்வரவே மூடிக் கொள்ளும். எனவே, தாமரை ஒருபோது மலரும், ஒரு போது கூம்பும். இருபோதும் மலராது. இது தாமரையின் இயற்கை. இருபோதும் மலரும் தாமரை ஒன்று உளதேல், அது புதுமையை விளக்கக் கூடியதாய் விசித்திரமாகவே இருக்கும். அத்தகைய அதிசயத் தாமரையை ஒத்திருந்தது இராமன் முகம் என்று கம்பர் வியந்து பாடுகிறார். சித்திரம் என்பதற்கு ஓவியம் என்பதோடு, புதுமை அல்லது அதிசயம் என்ற பொருளும் உண்டு. வேறு பாடல்களில் கம்பர் புதுமை என்ற பொருளில் சித்திரம் என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். இருபோதும் மலரும் தாமரை இராமன் முகத்துக்கு இல்பொருளுவமை. இராமன் முகம் இருபோதும்

மலர்ந்தது எங்ஙனம் என்னில், 'மெய்த்திருப்பதம் மேவி என்ற ஒருபோதும், 'இத்திருத் துறந்து ஏகு' என்ற ஒரு போதும், ஆக இருபோதும் செந்தாமரையின் செவ்வியே அழகை ஏந்திக் காட்டி மலர்ந்து, துன்பம் தோன்றுது இன்ப மயமாய் விளங்கிற்று. இராமனது முகத்தாமரை முடிசூடும் விழாவாகிய சூரிய வொளியிலும் மலர்ந்து நகை ததும்பி விளங்கிற்று; இரவின் இருளாகிய, முடியிழந்து பொடி சுடும் காட்டில் அடிசுடப் போய் அலையும் இன்னல் வந்த பொழுதும் தன் பொலிவை இழக்காது, வாடாது, மலர்ந்து, சோதி விரித்துச் சுந்தரமாய்த்திகழ்ந்தது. இம்முறையால், இராமன் திருமுகச் செவ்வி அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்று விட்டது. இது ஒரு புதுமையல்லவா? ஆகவே இராமன் முகம் ஒரு சித்திரத் தாமரைதான்.

# தன் நேர் இல்லாத் தம்பி

தனு என்னும் கந்தருவன் ஸ்ரீ என்பவனின் மகன். நல்ல அழகுள்ளவன். ஆயினும் பிறரைப் பயங்காட்டுவதற்காகக் கோரவடிவம் எடுப்பதில் அவனுக்கு ஓர் ஆசை. அவ்விதமே செய்தான். அதனால் அவனைக்கண்ட எல்லோரும் அஞ்சி ஓடுவர். ஒருநாள் ஸ்தூலசிரஸ் என்ற முனிவர் உணவுக்காக வைத்திருந்த காய்கனிகளைப் போய்க் கவர்ந்தான். அதனைக் கண்டு முனிவெய்தியே முனிவர், "இந்தக் கோரவடிவமே உனக்கு நிலைக்கக் கடவது!" என்று சபித்துவிட்டார். அதைக்கேட்டு நடுங்கிய தனு அவர் காலில் விழுந்து, தன்னை மன்னிக்கும்படி மன்றாடினான். சினம் தணிந்த முனிவர், "உன்னை இராமன் மலர்க்கை தீண்டும் பொழுது மீண்டும் நல்லுருவம் பெறுவாய்" என்று அருளினார்.

பின்னர் அவன் கடுந்தவம் புரிந்து, நான்முகனிடம் நீண்ட ஆயுளைப் பெற்றான். அதனால் செருக்கு தலைக்கு ஏறியது இந்திரனிடம் சென்று அவனை எதிர்த்துப் போர் புரிந்தான். இந்திரன் வச்சிரப்படையினால் ஓங்கி அடித்து, அவன் தலையை மார்புக்குள்ளும், தொடைகளை வயிற்றுக்குள்ளும் அழுத்திவிட்டான். இவ்வாறு கால்கள் இல்லாமையால் நொண்டியாகித் தலையில்லாமல் முண்டமாகித் தவித்த தனு, தான் உணவு அருந்தாமல் எப்படி வாழ்வது என்று

இந்திரன் காலில் விழுந்துவேண்டினான். அவன் நிலைகண்டு இரங்கிய இந்திரன் அவனுக்கு ஒரு காதம் அளவு நீளவல்ல கைகளைக் கொடுத்து, வயிற்றிலேயே வாயையும் திறந்து வைத்துப் போய்விட்டான்.

அவன் வயிற்றிலிருந்த வாய் யமபுரிக்குச் செல்லும் கோட்டைவாயிற்போல் காட்சியளித்தது. அதில் ஒரு நாக்கு தீக்கொழுந்துபோல் நீண்டு கிடந்தது. சந்திரனைப் பிளந்து வைத்தது போலப் பற்களும் தோன்றின. ஆலகாலம் போன்று கறுத்த அவனது திண்ணிய உடல் பஞ்சமாபாதகங்களால் ஆனதோ என்னும்படியாய் இருந்தது அவன் கொதிக்கும் கண்கள் இரண்டும் மார்பின் மேலிடத்தில் இரு சூரியரை மேருமலையிற் பதித்து வைத்தாற் போன்றிருந்தன. அவன் கைகள் இரண்டும் வாசுகி என்னும் பாம்பு போல் நீண்டுவலியனவாய் இருந்தன. கால்கள் சப்பையானதால், இருந்த இடத்தில் இருந்தபடியே இரு பக்கமும் கைகளை நீட்டிச் சுற்றி வளைத்து நெருக்கி, அவற்றினிடை அகப்பட்ட உயிர்களையெல்லாம் ஒருசேரத் திரட்டிக் கொண்டு வந்து, வாயில் தள்ளி வயிற்றில் போட்டுக்கொள்வான். மலை விழுங்கி மாடனுக்குக் கதவு எல்லாம் அப்பளம் என்பது போல் யானைமுதல் எறும்பு ஈறுக எல்லாம் அவனுக்கு இரையாயின, இக் கொடியவன் தலையில்லாது கவந்தமாய் இருந்ததால் கவந்தன் என்னப்பட்டான், தண்டகவனத்தில் அவன் இருந்த காடும் கவந்தவனம் என்னலாயிற்று. பிறர் பொருளை வஞ்சித்து எளிதில் விழுங்கி ஏப்பமிடும் கொடியவனைக் கவந்தன் என்று அழைக்கும் வழக்கம் இன்றும் உண்டு.

சீதையைத் தேடிக்கொண்டு அவ்வழியாய் வந்த இராமனும் இலக்குவனும் கவந்தன் கைகளுக்குள் தெரியாமல் மாட்டிக்கொண்டனர். அங்கு அப்பொழுது நடந்த

நிகழ்ச்சிகளை உள்ளத்தைத் தொட்டு உருக்கும் ஓர் உயரிய நாடகமாகக் கம்பர் சித்திரித்துள்ளார். கவந்தனைக் கண்டு இலக்குவன் பயந்து தான் சாகப்போவதால் இராமனை ஓடி விடும்படி வேண்டியதாக வான்மீகத்திற் கூறப்படுகிறது. ஆனால் கம்பர் காட்டும் இலக்குவன் அத்தகையவன் அல்லன் பொன்மானைக் கண்ட நாளிலிருந்தே இராமன் சற்று மயக்கம் கொண்டவனாகக் காணப்படுகிறான். அது பொய்மான் என்பதையும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது மாயமான் என்பதை மயக்கறக் கண்டவன் இலக்குவனே! அவனைத் "தெளிவுடைச் செம்மல்" என்று கம்பர் போற்றுகிறார், மாரீசனின் குரலைப் பொய்க்குரல் என்றும், அது தன் தமையனின் குரல் அன்று என்றும் இலக்குவன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், சீதை உண்மையை உணர மாட்டாமல் அவனைத் திட்டி விரட்டி விட்டாள்.

சீதையின் பிரிவால் இராமன் தன் நிலையிழந்து, மெய்மறந்து உன்மத்தனாகவே மாறிவிட்டான். அவன் மனம் பேதுற்றுக் கலங்கியது. சித்தப்பிரமை கொண்டு, 'சீதா! சீதா!' என்று கதறியழுது கண்ணீரை ஒழுக்கிக் கொண்டே காடெல்லாம் திரிந்தான். ஓர் இயந்திரப் பாவை போலவே இயங்கினான். அந்த நிலையில் அவன் உயிரைக் காத்து, ஆறுதல் மொழிகளைக் கூறி மனத்தைத் தேற்றித் துணையாக இருந்து உதவியவன் இலக்குவன் ஒருவனேயாகும். அண்ணன் இராமனுக்காகவே இலக்குவனும் உயிர் வாழ்ந்தான். தன் இன்பம், உடல், உயிர் யாவற்றையும் இராமனுக்காகவே உரிமையாக்கினான். அண்ணனுக்கு வேண்டிய கனி முதலிய உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டுவந்து, அவனை உண்பித்துத் தான் உண்ணாது, அவனை உறங்குவித்துத் தான் உறங்காது, வில்லை யூன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் இரவெல்லாம் கண்ணீர் பெருக்கிக் காவல் காத்துவந்தான். இவ்வாறு

எப்போதும் இராமனைப் பிரியாதிருந்ததால் இளையவன், இராமாநுசன் என்ற சொற்கள் இலக்குமணனையே குறித்து வழங்கலுற்று, அவனுக்குப் பெயராயின.

சென்ற இரவில் அண்ணனுக்காகத் தண்ணீர் கொண்டுவரச் சென்ற இலக்குவன், அயோமுகி என்னும் அரக்கி கையில் அகப்பட நேர்ந்தது. அவள் அவனை மயக்கித் தூக்கிக்கொண்டு ஓடினாள். அது தெரியாத இராமன், நெடுநேரமாகியும் தம்பி வராததால் மனம் மிக நொந்து வருந்தினான். சீதையைப் பிரிந்தாயினும் இருப்பான். இலக்குவனை அவனால் ஒருபொழுதும் பிரிந்து வாழ முடியாது. எனவே, "மறு பிறப்பில் நான் அவன் தம்பியாகப் பிறக்க" என்று கூறித் தன் உயிரைத் துறக்க முற்பட்டான். அதற்குள், நல்ல வேளையாக, இலக்குவன் மூர்ச்சை தெளிந்து, அயோமுகியின் மூக்கையும் காதையும் அறுத்து அவளைத் துரத்திவிட்டுத் திரும்பினான். (இராமன் இவ்வாறு எண்ணியமையால், அடுத்த அவதாரத்தில் இலக்குவன் பலராமனாகவும் இராமன் கண்ணனாகவும் பிறந்தனர் என்பர்.) இப்பொழுது கவந்தன் கையில் இருவரும் சிக்கிக் கொண்டனர்.

அக்கொடுங்கானில் உதவி புரிவோர் வேறு ஒருவரும் இல்லை. ஆதலால் அந்தப் பூதத்திற்கு இரையாகி இறந்து விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தான் ராமன். ஆனால் இலக்குவன் இறந்துவிடக் கூடாது. அவன் பிழைத்தாக வேண்டும். எனவே தம்பியைப் பார்த்து, "தம்பி! இனி நான் உயிர் வாழ்ந்து யாதொரு பயனும் இல்லை. சீதையும் போய்விட்டாள். அவளை மீட்க முயன்று சடாயுவும் இறந்துவிட்டான். என் மனைவியை இனிக் காண்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. நான் இருப்பதால் உனக்கும் தீராத தொல்லை. நீ என்னைச் சுகமாய் வைத்

திருக்கிறாய் என்பதற்காக நான் கவலையின்றி வாழ்வதா? நான் இந்தப் பூதத்திற்கு இரையாகப் போகிறேன், நீ உயிர் பிழைக்க வேண்டும். இதைவிட்டு உடனே ஓடிவிடு" என்று வற்புறுத்தினான் :—

"தோகையும் பிரிந்தனள், எந்தை துஞ்சினன்,
வேகவெம் பழிசுமந்து உழல வேண்டலேன்;
ஆகலின், யான்இனி இதனுக்கு ஆமிடம்;
ஏகுதி ஈண்டுநின்று, இளவலே! என்றான்."

(ஆமிடம்—உணவு)

இதனைக் கேட்டுத் திடுக்கிட்டான் இலக்குவன். "அண்ணா! இத் துன்பம் கண்டு தப்பி ஓடுவதற்காகவா நான் இதுவரை உன்னைத் தொடர்ந்து வந்தேன்? ஓர் இடுக்கண் வந்த காலத்துப் பின்வாங்காது முன்னின்று அதை வெல்லுவது அல்லவா ஆண்மை? கண்ணிமை கொட்டாது அண்ணனையும் அண்ணியையும் தம்பி காத்து நின்றான் என்று சொன்னவர்களே, அண்ணன் இல்லாது தம்பி தனியே திரும்பிவிட்டான் என்று சொல்லும்படி நடப்பதுதானா மேன்மை? உன் அண்ணன் ஏவியபடி நடந்து, அவனுக்கு ஒரு தீங்கு வந்தால் நீ முதலில் உயிரை விடு என்று சொன்ன என் தாயின் வாக்கு பொய்யாவதா? பேரூழிக் காலத்தில் எல்லாப் பொருளும் அழியும் பொழுதும், அழியாது மேலோங்கி நிற்கும் நீயா ஒரு பூதத்தால் கொல்லப்பட்டு, இறக்கப் போகிறாய்? இதை உலகம் நம்புமா? காணமற்போன மனைவியை மீட்கமாட்டாமல் போருக்கு அஞ்சி உயிரைவிட்டான் என்பதைப் போன்ற பழி வேறு உண்டா? இந்தப் பூதத்தைக் கொல்வது பெரிதா? இதோ பார்! என் வாளால் இதன் கைகளையும் வாயையும் வெட்டி வீழ்த்துகிறேன்" என்று சொல்லிக் கொண்டே பூதத்தின் முன்னே பாய்ந்தான் இலக்குவன்.

தம்பிக்கு முன்னே தமையன் ஓடினுன். அவனையும் தாண்டிக்கொண்டு தம்பி முடுகினுன். அவர்கள் இருவரை யும் தடுப்பதற்கு அங்கு வேறு யாரும் இல்லை. ஐயோ! அது எத்தகைய நெஞ்சையுருக்கும் காட்சியாக இருந்தது! அதைக் கண்டு தேவர்களும் என்ன ஆகுமோ என்று அஞ்சி அழுதார்கள். இதைக் கம்பர் எவ்வாறு பாடுகிருர் பாருங்கள் :—

" என்னு முன்னே செல்லும் இளங்கோ ; இளையோற்கு
முன்னே செல்லும் முன்னவன் ; அன்று னிதுமுந்தும்
தன்னே ரில்லாத் தம்பி ; தடுப்பார் பிறரில்லை ;
அன்னே ! கண்டார் உம்பரும், வெய்துற் றழுதாரால்."

இதுவே இப்பாடலின் உண்மையான திருந்திய பொருந்திய பாடம். சில நல்ல பழஞ் சுவடிகளின் துணை கொண்டு நமக்குக் கிடைத்தது. இதுவரை பாடம் தவறிப் பலபடியாக அச்சிடப்பட்டு வந்துள்ளது. முதல் வரியில் 'செல்லும்' என்பதைச் 'சொல்லும்' என்றும், 'இளை யோற்கு' என்பதை 'இறையோற்கு' என்றும், இரண்டா வது வரியில் 'செல்லும்' என்பதைச் 'செல்ல' என்றும், 'முந்தும்' என்பதை 'முந்த' என்றும், மூன்ருவது வரியில் 'தடுப்பார்' என்பதைத் 'தடுப்பான்' என்றும், நான்காவது வரியில் 'அன்னே கண்டார்' என்பதை 'அன்னுர்க் கண்ட' என்றும் பல ஏடுகளில் பிழைகள் பலபடியாக ஏறியுள்ளன அவற்ருல் உண்மைப் பொருள் கிடைக்காது போவதை அறிஞர்கள் ஒப்புநோக்கி உணரலாம்.

தக்க இடத்திலே கவிஞர் 'தன்நேர் இல்லாத் தம்பி' என்று இலக்குவனைச் சிறப்பித்துப் பாராட்டி யிருப்பது நோக்கத் தகும். இராமன் கூற்றுக்களால் அவன் மனநிலை எவ்வாறு குழம்பி அவலமுற்றிருந்தது என்பதைத்

தெரியலாம். இந்த இடத்தில் உறுதி கொண்டவனும் இலக்குவன் ஊக்கத்துடனே கிளம்பி எழுந்து இடரினைக் களையமுற்படுவதும், அண்ணனைத் திருத்தித் தளர்ச்சியைப் போக்குவதும், உகந்த மொழிகளை உடனுக்குடன் உதவுவதும், தன் உயிரையும் மதியாது அண்ணன் உயிரைக் காப்பதும், தொலைந்தோம் என்று கலங்கிப்போன அண்ணன் மனத்தைத் தெளிவுப்படுத்தித் தெம்பு ஊட்டுவதும், எதற்கும் அஞ்சாது வீரம் காட்டுவதும், தோல்வி மனப்பான்மையைத் தொலைத்து ஓட்டுவதும், வெற்றியை நிலைநாட்டுவதும் ஈடும் இணையும் அற்ற அரும்பெருஞ் செயல்களாகும். வேறு எந்தத் தம்பிதான் இவ்வாறு செய்யவல்லான்? எனவே, இலக்குவன் 'தன் நேர் இல்லாத் தம்பி' எனப்பட்டான். அண்ணன் அறிவுநிலை தளரும்பொழுது, அதை ஈடுசெய்வதற்குத் தம்பியின் அறிவுநிலை வளர்கிறது. கதாநாயகனும இராமனே சுத்த வீரன். அவனும் சோர்ந்து மனம் தள்ளாடிய அந்த நிலையிலும், அவனைத் தளரவிடாது தாங்கிப் பிடித்து, இதமொழி கூறி ஏற்றது புரியும் ஆற்றல் இலக்குவன் ஒருவனுக்கே இயைந்திருந்தது.

இராமன் என்ன பதில் கூறுவான் என்பதற்கும் காத்து நில்லாமல் இலக்குவன் கவந்தனை நோக்கிப் பாய்ந்தான். அதைக் கண்ட இராமன் தான் உயிர்விட நினைத்ததையும் மறந்தான். 'ஐயோ! தம்பிக்கு ஆபத்து வந்துவிட்டதே!' என்று அடித்து மோதிக்கொண்டு தம்பிக்கு முன் ஓடினான். தனக்கு முன்னே ஓடி இராமன் பூதத்தின் வாயில் விழுந்துவிடக் கூடாதே என்று அஞ்சி இலக்குவன் அண்ணனுக்கும் முந்தியடித்துக்கொண்டு கடுகினான். இவ்வாறு 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டியிட்டுக் கொண்டு ஒருவரையொருவர் முந்தினர். இவர்கள் இருவர் போக்கையும் கண்ட தேவர்கள், "அந்தோ! இவர்களைக்

கவந்தன் என்ன செய்வானோ தெரியவில்லையே!'' என்று அழத் தொடங்கிவிட்டார்கள். கம்பருக்குக்கூட என்ன செய்வதென்று தெரியவில்லை. இந்த நிலையில், இவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டால் நல்லதுபோலத் தோன்றியது 'ஆனால் தடுத்து நிறுத்த அங்கு யாருமே இல்லையே!' என்று உருகிவிடுகிறார். அதை 'அன்னோ' என்னும் ஒரு சொல்லாலே அறிகிறோம்.

இவ்வாறு பல உள்ளங்களில் எழுகின்ற பல்வேறு உணர்ச்சிகளையும் ஒரு பாடலில் சுவைபெறப் பின்னிப் பிணைத்து வைக்கும் திறன் கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கே எளிதாகின்றது. இப்பாடலைப் படிக்கும் நாமும் இரங்குகிறோம்.

ஆனால் அரக்கனுக்கு இரக்கம் ஏது? நல்ல பசிவேளையில் தனக்கு வேண்டிய உணவு போட்டி போட்டுக் கொண்டு ஓடிவருவதைக் கண்டு கவந்தன் சிரித்தான். "வீரர்களே! விழுங்குவேன்" என்று முழங்கினான். துளங்காத இலக்குவனே துள்ளியெழுந்து அவனது இடது தோளை வெட்டித் தள்ளினான். அதற்குள் இராமன் அவனது வலது தோளை வெட்டி விட்டான். கவந்தன் உடலிலிருந்து குருதியாறு கொப்பளித்துப் பாய்ந்தது. அவன் சாபமும் தீர்ந்தது. முன்னைய ஒளிவடிவான கந்தருவன் உருவெடுத்து வானிலே, தனுவான அவன் தோன்றி இராமனைத் தொழுதான். தன் வரலாற்றைக் கூறினான். மற்றும் பல வாழ்த்துக்களைச் சொல்லி விடை பெற்றுக் கொண்டான். தன் நேர் இல்லாத் தம்பி இலக்குவன் இருக்கும்வரை இராமனுக்கு என்ன குறை?

# அங்கதனின் அங்கதம்

ஆங்கிலத்தில் Satire, Sarcasm, Sneer, Irony, Invective என்பவை தமிழில் அங்கதம் என்னப்படும். கேலி அல்லது பரிகாசம்தான் அங்கதம். ஒருவனுடைய குறையை அல்லது ஒரு கூட்டத்தாரின் குறையை அன்னுர் மனத்தில் படும்படியாக எடுத்துக் கூறுவதே அங்கதம். அது வெளிப்படையாகவோ அலலது குறிப்பாக மறைத்தோ நகைச்சுவைதோன்ற அமையும். இதைத் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகிறது:—

" வசையொடும் நகையொடும் புணர்ந்தன் ருயின்
அங்கதச் செய்யுள் என்மனுர் புலவர்"

" அங்கதம் தானே அரில்தபந் தெரியின்
செம்பொருள் கரந்தது எனஇரு வகைத்தே"

" செம்பொருள் ஆயின வசையெனப் படுமே"

" மொழிகரந்து சொல்லின் அது பழிகரப்பு ஆகும்"

மறையாது வெளிப்படையாகக் கூறும் வசையைச் செம்பொருள் அங்கதம் என்பர். உ குறிப்புப் பொருளில் உய்த்துணரவைக்கும் வசையைப் பழிகரப்பு அங்கதம் என்பர். அங்கதத்தில் வசையோடு கூட நகையும், அதாவது நகை அல்லது கேலியும் கலந்தே இருக்கும்.

" செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்."

என்ற திருக்குறளில் செம்பொருள் அங்கதம் செறிந்திருக்கிறது.

" தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"

என்ற திருக்குறளில் பழிகரப்பங்கதம் பதுங்கியிருக்கிறது.

அங்கதம் என்பதற்குத் தோள்வளை என்றும் ஒரு பொருள் உண்டு. அது தோளில் அணியப்படும் ஓர் அழகிய அணிகலன். ஒளிபொருந்திய அங்கதமாகிய தோள்வளையை அணிந்திருந்ததால் வாலியின் மகன் அங்கதன் என்னும் பெயர்பெற்றான். அந்த அங்கதன் அங்கதம் தோன்றப் பேசுவதிலும் வல்லவனாகக் காணப்படுகிறான். அங்கதன் தூதுப் படலத்தை நகைச்சுவை தோன்றக் கம்பர் சித்திரித்து இருக்கும் முறை வியக்கற்பாலது. கடலைக் கடந்து இராமன் இலங்கைக்குட் புகுந்து விட்டான். அடுத்து இராவணனோடு போர் தொடங்க வேண்டியதுதான். அதற்குமுன் மீண்டும் ஒருமுறை தூது அனுப்பி அரக்கன் மனத்தைத் திருத்திப் போரைத் தவிர்க்கலாகாதா என்று இராமன் முயல்கிறான். அதற்கு யாரை அனுப்புவது? திரும்பவும் அநுமனையே அனுப்பினால் வேறு ஆள் இல்லைபோலும் என்று அரக்கர்கள் நினைக்கக் கூடும். ஆகவே, அநுமனுக்கு அடுத்த படியாக ஆற்றல் பெற்றவன் அங்கதனே என மதித்து அவனையே இராமன் அனுப்புகிறான். அதைக் கேட்ட அங்கதனுக்குப் பெருமகிழ்ச்சி பிறந்தது. "மாருதி யல்லனுகில் நீயெனும் மாற்றம் பெற்றேன் யாரினி யென்னோடொப்பார்?" என்று கூத்தாடினான். குதித்தெழுந்தான். இராமன் வில்லுதைத்த கணைபோல் விரைந்து பாய்ந்தான் அங்கதன் அரக்கனது இருக்கை நோக்கி.

இராவணன் அப்பொழுது தன் அத்தாணி மண்டபத்தில் கொலு வீற்றிருந்தான். படைவீரர்களான போரரக்கர்கள் பலர் அங்குக் கூடியிருந்து இராமனுடன் எப்படிப் போர் நடத்துவது என்று கலந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர். கடுவேகத்தில் பாய்ந்து வந்த அங்கதன் அவையின் நடுவில் துடுமெனக் குதித்தான். அங்கதனைக் கண்ட அரக்கர்கள் ஆவென்று அலறினர். அநுமன் என்று அஞ்சினர். அரக்கன் இராவணனை அணுகிச் சூழ்ந்து கொண்டு அபயம் வேண்டினர். அழுத கண்ணராய்த் தொழுது நின்றனர். அங்கதனை நோக்கி அழுதனர். இராவணனை நோக்கி இரங்கினர். குரங்கை நோக்கிக் கும்பிட்டனர். அரக்கனை நோக்கி அஞ்சலித்தனர். "அழுகின்ற கண்ணராகி அநுமன்கொல் என்ன அஞ்சித், தொழுகின்ற சுற்றம் சுற்ற" என்பதைப் படிக்கும் பொழுதே நமக்குச் சிரிப்பு உண்டாகிறது. அநுமன் வந்த நாளன்று அரக்கர்கள் அவன் காலிலும் வாலிலும் சிக்கி என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதை அங்கதன் அங்கவர்கொண்ட அவலநிலை கண்டு நன்கு தெரிந்து கொள்கிறான். அங்குள்ள அரக்கர்நிலை அவ்வாறு இருக்கவும், அதனை மறைத்து இராவணன், "நீயார்? எங்கு வந்தாய்? உன்னை இவர்கள் கொன்று தின்பதற்குமுன் சொல்லிவிடு" என்று பேசுவதைக்கேட்டு நாம் மேலும் சிரிக்க வேண்டியவர்களாகிறோம். அங்கதனைக் கண்டவுடனேயே அழுதுகொண்டு அகல்கின்ற அரக்கர், எங்ஙனம் அவனைக் கொன்று தின்ன வல்லவர் என்பது நமக்குப் புரியவில்லை. அது இராவணனுடைய வெத்து வெட்டு என்றுதான் நாம் சிரிக்கிறோம். அரக்கன் கேட்ட கேள்விகளுக்கு அங்கதன், தான் உலக நாதனான இராமன் விடுத்த தூதன் என்கிறான். இராமன் உலகநாதன்என்பதை ஏற்க மனமில்லாத இராவணன் அவனை ஏளனம் செய்து ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறான்:

" அரன்கொலாம் அரிகொ லாம்மற் றயன்கொலாம் என்பார் அன்றிக்
குரங்கெலாம் கூட்டி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவா னுகில் இன்னம் அறிதியென் றுன்னை யேவும்
நரன்கொலாம் உலக நாதன் என்றுகொண் டரக்கன் நக்கான்."

உலகநாதன் என்ற பட்டத்தை மும்மூர்த்திகளில் ஒருவருக்கும் கொடுக்க மனம் இல்லாது தனக்கே உரிமை கொண்டாடும் இராவணன், ஒரு மனிதன் உலக நாதன் என்று கூறப்பொறுப்பானு? கடல் என்று பெயர்கொண்ட ஒரு சிறு குட்டத்தைக் கடக்கவும் வலியில்லாமல், அதன் மேல் அணைகட்டிக் குரங்குப் படையைக் கூட்டிவந்து, இன்னும் போர்புரிய மாட்டாமல் தூது பேசிக்கொண்டு நிற்கும் ஒரு மனிதனையா உலகநாதன் என்பது? என்று கேலி பண்ணிச் சிரிக்கிறுன். இராவணன், இவ்வாறு சிரித்த வண்ணம் அங்கதனை நோக்கி, "நீ யார்?" என்று கேட்கிறுன். இந்த இடத்தில் அரக்கனைக் குத்திவாங்க அங்கதனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. சிரியாமலே கூறுகிறுன்:

" இந்திரன் செம்மல் பண்டுஓர் இராவணன் என்கின் றுனைச்
சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினுன் மைந்தன் என்றுன்."

இங்கு, 'உன்னை' என்று அங்கதன் கூறுமல், 'பண்டு ஓர் இராவணன் என்கின்றுனை' என்று எடுத்த எடுப்பு அற்புதமானது இது எதிரியின் பழியை மிக நாகரிகமாகக் கரந்து கூறும் முறை. அங்கதனின் தந்தையான வாலி முன்னொருநாள் கடற்கரையில் நீராடிவிட்டுப் பூசை செய்து கொண்டிருந்தான். அவனது வால் பின்னல் நீண்டு

கிடந்தது. அவ்வழியே வந்த இராவணன் அவன் வாலைப் பிடித்திழுத்துக் கொன்று விடலாம் என்று நினைத்தான். உடனே அவன் வாலைப் பிடிக்கவும், வால் அவனைப் பிடித்துக் கொண்டது. வால் வேண்டாம் என்று இராவணன் கையை உதறி உதறிப் பார்த்தான். ஆனால் வால் அவனை விடுவதாயில்லை. அது சுற்றி வளைத்துப் பற்றிப் பிடித்து நன்றாக அவன் இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும் பின்னிக் கொண்டது. அதனைக் கவனியாது பூசையை முடித்துக்கொண்ட வாலி கிளம்பி எழுந்தான். மலைக்கு மலை தாவினான். அரக்கன் ஏங்கி இரங்கிக் கூவினான் கண் விழிகள் பிதுங்க வாலிற் கிடந்து ஊசலாடினான். வீடு திரும்பிய வாலி தொட்டிலிற் கிடந்த குழந்தை அங்கதனைக் கண்டான். இராவணனை எடுத்துப் பத்துத் தலைப் பூச்சி என்று மகனுக்கு விளையாட்டுக் காட்டினான். அதனால் இராவணனிடத்தில் அங்கதனுக்கு இம்மியும் பயம் கிடையாது. அவன் தந்தையின் வாலிற் கிடந்து அரக்கன் என்ன பாடுபட்டான் என்பதை அங்கதன் நேரில் அறிவான். வாலியின் நிறையடிக்கோலவாலை நினைத்தாலும்இராவணன் இதையம் பறைகொட்டும். இந்த இராவணன் வேறு. அந்த இராவணன் வேறு என்பதுபோல் வைத்துப் பேசித் தன்னை அங்கதன் அறிமுகம் செய்துகொள்ளும் நேர்த்தி மிகவும் பாராட்டத்தக்கது. இதைக் கேட்டதும் இராவணனுக்கு உயிரே போனமாதிரி ஆகிவிட்டது. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சமாளிக்கிறான். வாலியின் வாலால் கட்டப்பட்ட இராவணனைத் தெரியாததுபோல நடிக்கிறான். வாலி தனக்குச் சிறந்த நண்பனாய் இருந்தது போல் பாசாங்கு பண்ணுகிறான். பெற்ற தந்தையினும் பன்மடங்கு பரிவுகாட்டி, அங்கதன்மேற் பேரன்பு கொண்டவன்போல் பேசுகிறான். "மகனே! உன் தந்தை எனக்குப் பெருந்துணைவனாய் இருந்தான். அவனைக் கொன்றவனுக்கு

தீ தூதுவனுவது பெரும்பழி. நல்ல வேளையாக என்னிடம் வந்து விட்டாய். நான் உன்னைக் குரங்குகளுக்கெல்லாம் அரசனுக முடிசூட்டுவேன். சீதை எனக்கு மனைவியாக வாய்த்தாள். நீ எனக்கு மகனுகக் கிடைத்தாய். என் பாக்கியமே பாக்கியம்! அந்த மனிதர்கள் இன்று அல்லது நாளை அழிவது திண்ணம்." என்று கூறினன். இராவணன் எவ்வளவு கெட்டவன், கோழை, சூழ்ச்சிக்காரன், வஞ்சகன், அறிவிலி என்பது அவன் கூற்றுக்களால் நன்கு புலனுகும்: அவன் சாம பேத தான தண்டங்களால் அங்கதனைத் தன் பக்கம் இழுக்கப் பார்ப்பதும், வானர அரசாட்சியைக் கேளாமலே வலிய அவனுக்குக் கொடுக்க முற்படுவதும், சீதையைத் தான் அடைந்து விட்டதாகக் கூறுவதும், வாலியைத் தன் துணைவன் என்பதும், அங்கதனை மைந்தன் என்பதும் அவனுடைய பொய்ம்மை உள்ளத்தையும் புன்மைப் பண்பையும் தெற்றெனை எடுத்துக் காட்டுவன வாகும்.

இராவணன் கூறுவனவற்றைக் கேட்டதும் அங்கத னுக்குச் சிரிப்புப் பொங்கியெழுந்தது. கைகளைத் தட்டி ஆர்ப்பரித்துத் தன் மார்பும் தோள்களும் குலுங்க, இலங்கை முழுதும் நடுநடுங்க, விழுந்து விழுந்து சிரித்தான். சிரித்துக் கொண்டே இடித்துக் கூறினன்:

"அங்கதன் அதனைக் கேளா அங்கையோ டங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்
இங்குநின் ருர்கட் கெல்லாம் இறுதியே என்ப துன்னி
உங்கள்பால் நின்றும் எம்பாற் போந்தனன் உம்பி
என்ருன்."

அங்கதனுக்கு ஆத்திரம் அளவுகடந்து பொங்குகிறது. "ஏ பேதாய்! அந்த மனிதர்களையா அழிவார்கள் என்று சொன்

ஞய்? நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் அழிவது உறுதி என்றுதானே உன் தம்பியான வீடணன் உன்னை விடுத்து அந்த மனிதர் பக்கம் வந்து சேர்ந்திருக்கிறன்?'' என்று கூறுகிருன். இது அரக்கனுடைய உயிரையே ஒரு கலக்குக் கலக்குகிறது மேலும் அங்கம் குலுங்க அங்கதக் குரிசில் சிங்கக் குருளைபோல் சிரித்துக்கொண்டே அங்கதம் திகழப் பங்கப்படுத்துகிருன் பாதகன் இராவணனை! "ஏ இராவணு! வாய்க்கு வந்தபடியெல்லாம் நீ பேசத் துணிந்து விட்டாயா? என்னை உன்பக்கம் இழுப்பதற்காகக் கெடு புத்தி உரைக்கின்ருயா? தூதனுக வந்த யான் அரசனுக ஆள்வதா? அதுவும் நீ கொடுக்க நான் பெறுவதா? மிகவும் நன்ருயிருக்கிறது! நாய் கொடுக்கச் சிங்கம் வாங்குமா?'' என்று சொல்லிச் சிரித்தான்:

"வாய்தரத் தக்க சொல்லி யென்னையுன் வசஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந் தரச தாள்கை
நீதரக் கொள்வேன் யானே யிதற்கினி நிகர்வே றெண்ணில்
நாய்தரக் கொள்ளும் சீயம் நல்லர சென்று நக்கான்.''

இதைக்கேட்டு, "உன்னைக் கொல்லுவேன்'' என்று சீறியெழுந்த இராவணன், ஒரு குரங்கைக் கொல்வதற்காக வாளை நான் தொடுவது இழுக்கல்லவா!'' என்று கூறிக் கொண்டே பம்முகிருன். அவன் கோழைத்தனம் நமக்கு மேலும் சிரிப்பை உண்டாக்குகிறது. அதன்பின், வெளியில் வந்து போர்புரியாது ஊரினுள் அடங்கி ஒளிந்திருப்பது ஆண்மை யாகாது என்று அரக்கனை இடித்துக் கூறி, இராமன் உரைத்த பல செய்திகளையும் தெரிவித்து வீட்டு அங்கதன் மீள்கிருன். இதனையடுத்து இராம ராவணப் போராட்டத்தில் முதற்போர் தொடங்குகிறது. இவ்வாறு ஒரு பயங்கரப் போருக்குமுன் ஒருநகையமுத விருந்தளித்து நம்மையெல்லாம் மகிழ்வூட்டும் கம்பனின் கவித்திறமை நம்மாற் கணித்தற்கரியதாகும்.

இதனோடு, கம்பனில் இல்லாத இன்னொரு செய்தியும் இங்குக் குறித்தல் நலமாகும். அங்கதன் இலங்கையிலிருந்து திரும்பும்பொழுது சில அரக்கர்கள் அநுமனைப் பற்றிக் கேட்டார்களாம். அவர்களுக்கு அங்கதன் கூறிய விடை வேடிக்கையானது. "அன்று இலங்கையை வந்து எரித்த குரங்கு எங்கே?" என்று கேட்டார்களாம். "இராவணன் மகன் இந்திரசித்தால் கட்டப்பட்டுப் பின் விடுவித்துக் கொண்டு வந்த அந்தக் குரங்கை இராமனின் அடித் தொண்டர்களான சில குரங்குகள் ஏளனம் செய்து அடித்த அடியில் அந்தக் குரங்கு அஞ்சி நடுங்கி ஓடிப் போய் ஒளிந்து கொண்டது. அது ஒளிந்து கிடக்கும் இடம் எனக்குத் தெரியாது" என்றானும். இது பெருங் கேலி தானே!

"அன்றிலங்கை யெரித்தகுரங் கெங்கென
இராவணன்பே ரவையோர் கேட்ப
நன்றியில் இந்திரசித்து என்பவனால்
பிணிப்புண்டு நண்ணி னனிங்கு
என்றிறைவன் அடிபரவும் வானரர்கள்
அவனைநனி இகழ்ந்து மோத
ஒன்றியஅச் சத்தின் இரிந்தொளித்த இடம்
அங்கதன்யான் உணரேன் என்றான்."

# துன்பத்தும் துணையாம் தூயவள்

மழையென்பதே அறியாத காடு. அதன் பக்க மலைகள் எல்லாம் வெம்பி உலர்ந்து தழல் வீசிக் கொண்டிருந்தன. கதிரவன் கனல்மாரியிற் கானம் கரிந்து தீய்ந்தது. நீரற்ற அந்நீண்ட சுரத்தில் வாழும் மான்கள் பசும்புல், தழை முதலியவற்றைக் கண்டும் அறியா. வாடி வெம்பிய மரலைக் கறித்தே உயிர் வாழ்வன வாயின. ஆனால் அந் நிழலற்ற வனத்தில் ஆறலைக்கும் கள்வருக்குக் குறை வில்லை. அவர்கள் வில்லும் அம்பும் கொண்டு பதுங்கி யிருப்பார். அச்சுரத்தைக் கடக்கும் வழிப்போக்கர் யாராவது காணப்பட்டால் கணைமாரி பொழிந்து அவரை வீழ்த்துவர். தண்ணீர், தண்ணீர் என்று தவித்துவருவோர் அக் கொடியவரது அம்பால் ஏறுண்டு விழுந்தழுந்தும் காட்சி மனத்தைக் குழையச் செய்வதாகும். வெய்யலின் கொடுமையால் வாடி, நீர்வேட்கையால் நாக்கை வெளியே தொங்கவிட்டு அவர் உடல் வேதனையால் வருந்தும்பொழுது கண்ணிலிருந்து வீழும் கண்ணீரே அவர் நாக்கை நனைக்க வேண்டும். இவ்வளவு தடுமாற்றங்கள் நிறைந்த அவ வெய்ய சுரத்தை நினைக்கும் மனமும் கொதிக்கும் அல்லவா?

ஒரு காதலன் அக்கொடிய வனத்தைக் கடந்து சென்று பொருளீட்டிவர நினைந்தான். தன் காதலியை விட்டுப் பிரியக் கருதி அவளிடம் விடை கேட்டு நின்றான். அவனை

என்றும் பிரிந்தறியாத அம் மடக் கொடி தானும் கூட வருவதாகத் தெரிவித்தாள். அப்பொழுது அவன் தான் செல்லும் வழியின் கொடுமையை அவளுக்கு விளக்கி, அவள் தன்னுடன் வருதல் அரிது என்பதைத் தெளிவித்தான். அக்காட்டின் கொடிய துன்பத்தை அம் மெல்லியலாள் தாங்கவியலாது என்பதே அவன் கருத்து. அவள் மேல் அவன் கொண்டுள்ள பேரன்பினாலேயே அத்துன்பத்தை அவள் அடையாது நீரும் நிழலும் நிறைந்த இல்லத்தின் கண்ணே அவள் இனிதமர்ந்திருக்க வேண்டும் என்று அவன் எண்ணினான். ஆனால் அவள் எண்ணியது என்ன ?

வாழ்விலும் தாழ்விலும் தன் கணவனோடு உடன் உறைவதையே தன் இன்பமாகக் கொண்ட அவ்வணங்கன்னாளுக்குப் பிரிவென்னும் சொல் உள்ளத்தை வருத்தி வெதுப்பியது. அவனது இன்பத்திற்குத் துணையாய் இல்லிற்கூடி வதிந்தவள்; அவன் பிரிந்து தழற்கானில் தனியே செல்லும்பொழுது, அக்கானின் வழியே தான் செல்லுவது அரிதென்று தனியே விட்டுப் பிரிவாளா? தன் நாயகன் வாழ்க்கையை நலனுறச் செய்து அவனுக்கு இடையறா இன்பம் ஊட்டுவதற்கென்றேதான் அவனைக் கூடினவள். அவன் இன்புற்றிருந்த காலத்தில் அவனை மகிழ்விப்பது மிகவும் எளிது. அவன் இன்பத்தின் நீங்கித் துயருறும் காலத்தில் துணையாயிருந்து அவனுக்கு இன்பம் அளிப்பதன்றோ அரிது. அவ்வரிய காரியத்தை ஆற்ற வல்லவள் மனைவியே ஆகும். அதனாலன்றோ அவள் வாழ்க்கைத் துணை என்னப்பட்டாள். உலக வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் விரவி வருதல் இயல்பு. அதில், இன்பத்திற்குத் துணையாய் யாவரும் கூடி மகிழ வருவர். துன்பம் என்றால் தொலைவில் நிற்பர். அதனால் அல்லவா, துன்பத்திற்கியாரே துணையாவார்,'' என்றும் "கெட்டார்க்கு

நட்டாரே இல்" என்றும் வாய்மொழிகள் எழுந்துள்ளன. ஆனால் வாழ்க்கைத் துணை என்னப்படும் தலைவி தன் தலைவனின் இன்பத்திற்கு மட்டும் துணையாய் இருப்பதன்றி அவன் துன்பத்திற்கும் உற்ற துணையாய், அவன் துன்பத்தைத் தானும் தாங்கிநின்று, அதனை இன்பமயமாக்க வல்லவள். இவ்வுலகில் இப்பெருமை வாய்ந்த உரிமை மனைவி ஒருத்திக்கே உண்டு. இதுவே கணவன் காரியம் யாவினும் கைகொடுத்து உதவுவதாகும்.

இராமன் காடு செல்லலுற்ற காலத்தில் தான் கல்லிலும் முள்ளிலும் நடக்க முடியாதென்று சீதை அயோத்தியிலேயே இருந்திருந்தால் அவளைப் போற்றுவார் யார்? இராமன் மேலுள்ள அன்பினால், அவன் எவ்வளவு மறுத்தபோதிலும், 'நின்பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்று அவன்பின் தொடர்ந்தாள். அவள் பிறந்தகத்தில் பெருஞ் செலவத்தினிடையே அருமை பெருமையுடன் வாழ்ந்தவள். தன் துணைச்சேடியர் இனிய வார்த்தைகளைக் கூறி, பரிவுடன் முன்னே மலர்களை விரிக்க அதில் தன் மெல்லிய பாதங்கள் வருந்த நடந்து வளர்ந்த செல்வி என்பதைப் பின்வரும் பாடலிற் காணலாம் :

" தன்னேர் இல்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே ஆரமிர் தேயென் றடி போற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவின் ஒதுங்கிப் பொலிகின்றாள்."

அவ்வித மெல்லிய பாதங்கள் இராமன் வறுமையுற்று வனம் போகலுற்றபொழுது வன்மையுடன் அவனைத் தொடரலாயின. அதற்குக் காரணம் சீதை இராமனிடம் கொண்ட அன்பேயாகும். "இத்தூய அன்பைவிடச் சிறந்த பொருள் ஒன்று இவ்வுலகில் உண்டோ?" என்று விம்மிதமெய்திக்

கம்பர் நெஞ்சம் குழைந்து உருகிப் பாடுவது படித்து மகிழ்தற் பாலது.

"சிறுவிலை மருங்குல் கொங்கை
ஏந்திய செல்வம் என்னும்
நெறியிரும் கூந்தல் நங்கை
சீறடி நீர்க்கொப் பூழின்
நறியன தொடர்ந்து சென்று
நடந்தனள் நவையி னீங்கும்
உறுவலி யன்பி னூங்கொன்
றுண்டென நுவல்வ துண்டோ."

மெல்லிய காற்று சற்றே அசைந்தால் நீர்க்குமிழ் உடனே உடைந்து விடும்படியான அவ்வளவு மிருதுவானது. அதைவிட மிருதுவான அடிகளை உடையவள் சீதை. அவள் அன்பே அவள் பாதங்களுக்கு வலிமை அளித்தது. தளரா மனத்தளாய் இராமன் தளர்வைத் தானும் தாங்கி நின்று, அவன் தனிமையை அகற்றி, அவன் மனத்துயரை மாற்றிச் சென்றாள். உலகம் உள்ளளவும் அவள் புகழ் நிலவுவதாயது.

ஒரு கணவன் தான் துன்பங்களை அடைந்து வருந்தும் காலத்திலும், இணைபிரியாது நின்று தன் மனைவி அத் துன் பங்களை அகற்றும் துணைக் கருவியாய் விளங்குவதைக் கண்டால் பெருமகிழ்வெய்தி உள்ளம் பூரிப்பான். "கேட்டினும் உண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டி அளப்ப தோர் கோல்" என்பது பொய்யாமொழி யன்றோ? கணவன் துன்பத்திற்கு மனைவி கைகொடுத்துதவி ஆறுதல் அளிக்கும் காலத்தில்தான் அவள் அவன்மேற் கொண்டுள்ள அன்பு பொலிந்து நன்கு வெளிப்படுவதாகும். இவ்விதமான அன்பின் செயலைக் காணக்காண. ஆடவன் மனமும் என்று மில்லாத ஓர் உரம்பெற்று வீறு பெறும். எவ்விதமான

இடுக்கண் நேர்ந்தபோதிலும், அதனை வென்று களையும் திறம் பெறுவான். அவனது துன்பம் நீங்கி இன்பமாகவும் முடியும். மனையாளும், தான் உறுதுணையாய் இருந்து தன் கொழுநனுக்கு வந்த துயரத்தை நீக்கி மகிழ்வூட்டும் பேறு கிடைத்ததே என்று அகமகிழ்வாள். அவனை நீத்துத் தனித்திருப்பதே அவளது துன்பம். அவன் துயர் களைந்து அவனைக் கூடியிருப்பதே அவளது இன்பம். அவனோடு உடன் உறைந்து அதனால், தான் அடையும் துயர மெல்லாம் அவளுக்கு இன்பமே. இதுவே பெண்ணின் சக்தி! பெண்ணின் பெருமை! பெண்ணின் வெற்றி! இதுவே பெண் கடவுளாம் பெற்றி!

இவ்வித எண்ணங்கள் எல்லாம் தலைவியின் நெஞ்சினுள்ளே கனன்று பொங்கின. தன்னையின்றித் தலைவன் போகலுற்றானே என்று துடிதுடித்தாள். தலைவனை நோக்கி, "நீர் என் மனப்பான்மையை நன்கு அறிந்திருந்தும், அறியாதவர் போல என்னை இங்கு நீத்துத் தனித்துச் செல்வது தகுமா? இதுவோ நும் அன்பின் செயல்! நீர் செல்லும் வழியே உமக்கு நேரும் துன்பத்திற்குத் துணையாக யானும் உடன் வந்து அத்துன்பத்தைக் களைவதன்றோ எனக்கு இன்பமாவது. என் இன்பத்தைக் கருதி என்னைவிட்டுச் செல்வதாகக் கூறுகின்றீர். உம்மை விட்டுப் பிரிந்திருக்கும் துன்பத்தைவிட அக்காடு கொடிதாகாது. உம்மையின்றி யானெய்தும் இன்பமெல்லாம் எனக்குத் துன்பமே. உம் துயரைக் களையத் துணையாய் வருவதே என் இன்பம். தண்ணீர் இன்றியேனும் வாழ்வேன்; நும்மையின்றி வாழலேன். ஆகையால் என்னையும் கூட அழைத்துச் செல்ல வேண்டும்," என்று தன் துயர் காணாத் தகைசால் நன்கொடியான அந்நங்கை தன் கணவனைத் தொழுது மன்றாடினாள். இதனால் குலப் பெண்ணானவள் தன் கணவனை விட்டுப் பிரியாள் என்

பதும், அவன் துயர் களைவதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருப்பாள் என்பதும், அவனை யின்றித் தனக்கென ஓரின்பமும் அறியாள் என்பதும் தேற்றமாகும். இக் கருத்தமைந்த பாடல் வருமாறு :—

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங்கு அருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெருஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடென்றால்
என்னீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்னீர வல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு."

இவ்வருமைப் பாடலைச் செய்தவர் பெருங்கடுங்கோ என்னும் சேரவரசர். பிரிவின்கண் வைத்தே காதலர் களுடைய காதலின் தூய்மையையும் சிறப்பையும் நன்கு அறியலாம் என்பதைத் தெரிந்தவர். அதனால் அவர் பாடிய பாடல்கள் எல்லாம் பிரிவு நிகழ்வதாகிய பாலைத்திணையி லேயே அமைந்துள்ளன. குறுந்தொகையில் 231-வது பாடல் ஒன்றை மட்டும் அவர் மருதத்திணையில் பாடி யுள்ளார். அவரது ஏனைய 67 பாடல்களும் பாலைத்திணை யிலேயே பாடப்பட்டுள்ளன. பாலையைக் குறித்துப் பாடு வதில் பெருங்கடுங்கோ சிறந்து விளங்குகிறார் என்பதற்கு மேல் வந்துள்ள பாடலொன்றே போதிய சான்றாகும். அதனால் அவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று சிறப்பிக்கப்பட்டார்.

# திருவடியின் பெருவடிவம்

'தம் புகழ் கேட்டால் தலை சாய்ப்பர் சான்றோர்கள்' என்னும் உண்மைக்கிணங்க, மாலைப்பொழுதில் மகேந்திர மலையின் அடிவாரத்தில் வானரக்கூட்டத்தின் நடுவில் அனுமான் தலை சாய்த்து வெள்கி நிற்கிறான். அவனுடைய வீர தீரச்செயல்களை எடுத்து ஜாம்பவான் விவரித்துப் பேசுகிறான். முடிவில் அனுமான், கலைக்கடலையேயன்றி அலை கடலையுந் தாண்டும் வல்லமையுள்ளவனென்று உறுதிப் படுத்துகிறான். அனுமான் இயற்கையிலேயே வெகு பராக்கிரமசாலி. ஆனால் தன்வலியைத் தானுணராத் தகைசால் பெருந்தகை. தாமரை மலரினிடையே ஆம்பல் மலர்ந்தாற் போல் அவன் முகத்தில் நகை பிறந்தது. தன் குழாத்திற்கு வணக்கஞ்செய்து சொல்கிறான்: "மகா வல்லமையுடையவர்களாகிய நீங்கள் சிறியவனான என்னை ஏவி விளையாட்டுக் காண எண்ணினீர்கள் போலும், ஆயினும் என் ஆண்மையை இப்பொழுதே காண்பீர். இலங்கையை இடந்து வருவேன்; கடலைக் கடந்து வருவேன. அரக்கருயிர் குடித்துப் பிராட்டியை மீட்டு வருவேன். தங்களுடைய கிருபையும் இராமபிரானது ஆசீர்வாதமும் எனது இரண்டு சிறகுகளாக இதோ பறந்து செல்கிறேன்" என்று சொல்லி, அதிக உற்சாகமும் ஊக்கமுங்கொண்டு மகேந்திரத்தின் உச்சியில் நின்றான் அனுமான்.

காற்றின் மைந்தன் கடிதிற் பேருருவத்தை எடுத்து விண்ணும் மண்ணும் ஒன்ருக நின்ருன். அவ்விசுவ ரூபத்தின் தன்மையை அளவிடக் கம்பர் தம்மாலும் ஆகாதென்றே கருதுகிருர். ஏனெனில், இமையாத் தன்மை படைத்த தேவர்கள் கட்புலத் தெல்லையையுந்தாவி விட்டது அவனுருவம். மின்னற் கொடியேந்தி விசும்பின திரும் மேகங்களும் அவன் பாத தாமரைக்கு அணியும் வீரக்கழல் போற்ருேன்றின. அனுமான் எடுத்த பெருவடிவத்தால் முன் பெரிதாகத் தோன்றிய மகேந்திரமலேயும் வடிவிற் சிறுந்து, ஒரு பெரிய தூணினடியிலிடும் கற்போலக் காணப்பட்டது. அனுமான் இந்த அண்டத்தை எல்லாம் தாங்கும் தம்பம் போல் ஓங்கி நின்ருன்.

> "மின்னெடுங் கொண்ட ருளின் வீக்கிய கழலி ஞர்ப்பத்
> தன்னெடுந் தோற்றம் வானேர் கட்புலத் தெல்லே தாவ
> வன்னெடுஞ் சிகர கோடி மகேந்திர மண்டந் தாங்கும்
> பொன்னெடுந் தூணின் பாத சிலேயெனப் பொலிந்து
> நின்ருன்."

பல சிகரங்களேயுடைய மகேந்திரகிரியே ஒரு தூணின் பாதசிலேயாக வேண்டுமாளுல், அப்பாதசிலே மேனிற்கும் தூணுக உவமிக்கப்பட்ட அஞ்சனே குமரனின் அகன்ற உருவம் எவ்வளவு பெருகி நீண்டிருக்க வேண்டும்! மகேந்திர மலேமேல் மந்தர மலேயை நாட்டியது போல் நின்ருன். இவ் விசுவரூப மெடுத்து நின்ற அனுமானது உருவமே இத் தகையதாளுல் உலகரக்ஷகனுகிய திருமால் மண்ணளந்து மாவலியைப் பாதலத்துப் படுத்த பொழுது வெளிப்படுத்திய விசுவரூபத்தின் பெருமை அளவிடற் கொன்ருமோ? கம்பர் அவ்விரு வடிவங்களுக்கும் உள்ள வேற்றுமையை வெகு திறமையாகக் கணித்துக் கூறுகின்ருர். அஃதாவது, அனுமான், பின் தனக்கு இராவண யுத்தத்தில் கிடைக்கும்

'திருவடி' என்னும் பட்டத்தை உவமையாலும் விளக்கிக் காட்டினுன் என்ருர்.

" பொருவரு வேலை தாவும் புந்தியான் புவனந் தாய
பெருவடி வுயர்ந்த மாயோன் மேக்குறப் பெயர்ந்த தாள்போ
லுருவறி வடிவி னும்ப ரோங்கின னுவமை யாலுந்
திருவடி யென்னுந் தன்மை யாவர்க்குந் தெரிய நின்ருன்"

திரிவிக்கிரமன் மேலே உயர்த்துத் தூக்கிய திருத்தாள் ஒன்று எவ்வளவு பெரிதாக விருந்ததோ அவ்வளவு உயரமாகப் பெரிய வடிவு கொண்டு நின்ருன் அனுமான். பின் நடந்த யுத்தத்தில் தன் திருத்தோளின்மேல் இராமனைச் சுமந்து சென்ற புண்ணிய சேவையால் திருவடி என்னுந் திருநாமத்தைத் தரிக்கலானுன். அச்செய்கையால் அப் பெயர்க்கு உரிமையெய்திய தன்றியும், தன் திருவுருவத்தின் உயரளவாலும் அப்பெருமானது திருவடியை ஒத்திருந்ததனுல், உவமையாலுந் திருவடியானுன் என்று கம்பர் குறிப்பிட்டது கவிச்சுவை நிறைந்து அறிவுக்கு உவட்டா விருந்தாய் இன்பம் விளைக்கிறது.

இவ்விதம் மாலைப்பொழுதில் அனுமான் மகேந்திரத்தின்மேல் வடிவானும் அறிவானும் வளர்ந்தோங்கி நின்ருன். அனுமானது உருவம் மட்டுமேயன்றி அவனது ஆடையணிகளும் வளர்ந்து அவனது பேருருவத்தைப் பொருந்தி அமைந்தன. உருவத்தோடு சேர்ந்துவளர்ந்த அவன் கழுத்திலணிந்திருந்த மாலையின் ஒளியானது இந்த உலகமுற்றிலும் பரந்து வீசியது. அவ்வொளியின் துணைகொண்டு கம்பர், அனுமான் தன் காரியம் முடிக்கவேண்டி நின்ற அவசரத்தையுங் கவனியாது, இலங்கையை ஒரு குறும்பார்வை பார்க்கிருர். அங்கு அவர் கண்டதென்ன? இலங்கையில் எங்கும் இருள் கவிந்திருந்தது. சூரிய குலதிலகனுகிய

இராமன் இராவணனை எதிர்த்துப் போர் தொடங்கு முன்னதாகவே அப்போர் நிழல் இலங்கையைச் சூழ்ந்து கவிந்து கொண்டது. இப்போர் நிழலை ஆங்கிலத்தில் 'War Clouds' என்று சொல்வார்கள். இப்பொருள் பொதிந்த கம்பர் செய்யுள் வருமாறு:

"பார்நிழல் பரப்பும் பொற்றேர் வெயிற்கதிர்ப் பரிதி மைந்தன்
போர்நிழல் பரப்பு மேலோர் புகழென வுலகம் புக்குத்
தார்நிழல் பரப்புந் தோளான் றடங் கட ருவாமுன்ன
நீர்நிழ லுவரி தாவி யிலங்கைமேற் செல்ல நின்றான்."

திடீரென்று இப்போர் நிழலைக் கம்பர் நமக்குக் காட்டுதற்குக் காரணமென்ன? அப்போர் நிழலாகிய இருளை இலங்கையில் பரப்பினவன் யார்? அதற்குக் காரணமும், காரண கர்த்தாவும் அனுமானேயாவான். நடுவிடத்ததாகிய மகேந்திர மலைமேல் அனுமான் விசுவரூபமெடுத்து சூரியனை இலங்கையினின்றும் மறைத்து விட்டான். மேற்கில சூரியனும், கிழக்கில் இலங்கையுமாக அனுமானுடைய நிழல் கீழ்த்திசையை நோக்கிச்சென்று இலங்கைமேல் வீசியது. கற்பனையிற் கைவல்ல கம்பநாடர் இவ்வரிய செய்தியை, திறமும் நயமும் வாய்ப்ப, அனுமான் கடலைத் தாவு முன்னேயே அவனுடைய நிழல் கடலைத்தாவி இலங்கையிற் சென்று பரந்தது என்று வெகு அழகாகக் கூறுகிறார் கம்பருடைய கவிதா சக்தி அனுமானுடைய கவிதா சக்தியையும் மிஞ்சி, அவ்வனுமானுக்கு முன்னேயே கடலைத்தாவி இலங்கையை அடைந்துவிட்டது என்று நாம் கொள்ளுவது பொருத்தமே யாகும்.

அனுமானுடைய கீர்த்தியையே பேசி வருங் கம்பருக்கு இங்குச் சிறிது ஆராய்ச்சியும் ஏற்படுகிறது. இலங்கையை விழுங்கி நின்ற அனுமானது நிழலைக் கம்பர் இராகவனுடைய போர்நிழலாகக் கொண்டார். அப்போர் நிழல் இலங்

கையை முற்றுங்கவிந்து கொண்ட வளவிலே அஃது இலங்கையின் வீழ்ச்சியைக் குறிக்கும் ஓர் முன்னறி குறியாகவே கொள்கிறார். ஆகவே அதைப் போர் நிழல் என்று குறிப்பிட்டு அதைப் பரப்பி இலங்கையின் வீழ்ச்சியைக் குறித்துக் காட்டிய பெருமை திருவடியின் பெருவடிவத்திற் குரித்து என்று முடிக்கும் கம்பருடைய இவ்வழகிய பாட்டின் கவினையும் அருமை பெருமையையும் அறிஞர் பருகி இன்புறுவர் என்பதில் ஐயமில்லை.

# காந்தமாமணி

பருந்தைப் பார்க்க ஆகாயத்தைப் பார்ப்பார்கள். ஆனால், பகலவனையும் இயற்கையையும் நோக்குவாரில்லையே என்று ஒரு புலவன் கூறினான். அப்படி இயற்கையைப் பார்த்தாலும் அவர்கள் கருத்துப்படி அது அவர்களுக்குத் தோன்றுகிறது. கஞ்சி வரதப்பா என்று ஒரு கடவுளை ஒருவன் வேண்ட பட்டினி கிடப்பவன் கஞ்சியை எண்ணிக் கொண்டு எங்கு வருகிறதப்பா என்று கேட்டான். இது எண்ணத்திற்கேற்ற கருத்து. மாடு பறிகொடுத்தவனுக்கு மரமெல்லாம் கண் என்பதும் இதையே குறிக்கிறது. நாம் வானத்தைப் பார்ப்பது மழை வந்து விடுமோ, விழாச் சிறப்பைக் கெடுத்து விடுமோ என்ற எண்ணத்தோடு. மழை பெய்வதைக் கண்டார் ஒரு பெரியவர். மகிழ்ச்சி கொண்டார். மழையே பொழி எனக் கூறவில்லை அவர். 'இறைவனருளாகப் பொழி என்று கூறினார்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவிநந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னியவ ளமக்குமுன் சுரக்குமின் னருளே
யென்னப் பொழியாய் மழையே லோரெம்பாவாய்

என்று திருவெம்பாவையில் மாணிக்க வாசகர் கூறினர். அவர் சிறந்த புலவர், பின்னர்தான் பக்தர்.

வாலிவதைக்குப் பின் ராமன் பஞ்சவடியில் சீதையைப் பிரிந்து வாடுகிறுன். கார்காலம் வந்துவிட்டது. மேகங்கள் கூட்டமாக வந்து வானத்தைக் கவ்விக்கொண்டன. மின்னி, இடிஇடித்து மழை பொழிகிறது, ராமன் விண்ணை நோக்கினுன். மின்னற் கொடியில் மங்கை சீதையின் இடையைக் கண்டான். மேகங்கள் முழங்கின. "சீதை இங்கே உள்ளாள்" என்பதுபோல் இருந்தது அது. மின்னல் மின்னி மறைகிறது. மேகங்கள் அதைக் காட்டிக் காட்டி மறைக்கின்றன. குழந்தைகள் விரும்பும் பொருளை நாம் கையில் வைத்துக் கொண்டு கையைத் திறந்து அதைக் காட்டி பின் மூடி, குழந்தைகளை ஏமாற்றுவதுபோல இருந்தது அக்காட்சி.

அப்பொழுது ராமனுடைய மனம் என்னமாதிரி இருந்தது என்பதைக் கம்பன் கூறியிருக்கிறுன். கதாபாத்திரங்களாக இருந்தே பாடுகிறுன். மேகங்கள் எல்லாம் அரக்கர்கள் போல் தோன்றுகிறது. அரக்கரை விட கொடியை போலும் என மேகத்தைக் கோபிக்கிறுர். மேகத்தையும் மின்னலையும் கண்டால் கம்பனுக்கு இராமன் சீதை நினைப்பு வந்து விடுகிறது. இராமன் சீதை இருவரையும் கண்டால் மேகமும் மின்னலுமாகத் தோன்றுகிறது அவனுக்கு.

ராமன் சீதை இலக்குவன் மூவரும் காட்டில் சென்று கொண்டிருக்கிறுர்கள். மேகம் மின்னலை வாக்கிங் ஸ்டிக் (Walking stick) பிடித்துக்கொண்டு போவது போல் இருந்தது ராமன் சீதையை அழைத்துச் சென்ற விதம்.

"மேகந்தனி வருகின்றது மின்னேடென"

என்று கூறுகிறார். இங்கும் மேகத்தையும் மின்னலையும் கண்டோம்.

கம்பன் ராமாயணம் எழுதியதன் நோக்கம் என்ன? ராமாயணம் படித்தவுடன் வைகுந்தம் செல்லலாம் என்பதற்காக என்றால், எனக்கு அதில் நம்பிக்கையில்லை. நம் நாட்டு மக்கள் ராமனாகவும், சீதையாகவும் இருக்க வேண்டும் என்று கருதி கம்பன் பாடினான். நம் நாட்டு ஆண்கள் ஒவ்வொருவரும் ராமனாகவும், பெண்கள் சீதையாகவும் இருந்து கம்பராமாயணத்தை நடத்திக் காட்ட வேண்டும். ஆனால் அதற்காக இராவணன் இருக்க வேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை! சீதை தெய்வப் பெண்ணல்ல. அப்படி வைத்துப் பேசவில்லை கம்பன். மனிதராக வைத்துப் பேசுகிறான் அவர்களை. ராமன் தேவனாயிருக்கலாம் மண்ணுலகுக்கு வந்தால் மனிதன் தானே. ராமனை இந்நாட்டு இளைஞனாக வர்ணிக்கிறான்.

ஆனால் இன்றைய மாணவர்களை ஆஸ்பத்திரியில் பார்த்தேன். டாக்டர் மாணவன் உடலைப் பரிசோதித்து சர்டிபிகேட் கொடுக்கவேண்டும், அவர்களை பரீக்ஷை எழுத அனுமதிப்பதற்கு. வழக்கம்போல மாணவனை 'வாயைத் திற' என்கிறார். மாணவன் வாயை இறுக மூடிக்கொள்கிறான். ஏன்? அப்பொழுதுதான் 'smoke' பண்ணிவிட்டு வந்திருக்கிறான். பின்னர் "சிகரெட் பிடிப்பீர்களோ" என்று கூறிக்கொண்டே நாக்கை நீட்டு என்கிறார். மாணவன் நாக்கை உள்ளே இழுக்கிறான். ஏன்? சாந்து பூசப்பட்டதுபோல் அரை அங்குல கனத்திற்கு வெத்திலைக் காறை நாக்கிலும் பற்களிலும் படிந்திருக்கிறது. இனி 'மார்பைக் காட்டு' என்கிறார். பட்டனைக் கழற்ற வெட்கப் படுகிறான். ஏன்? கூடு விழுந்த மார்பைக் காட்ட வெட்கம். இங்ஙனம் மாணவர்கள் டாக்டர்களை ஏமாற்று

கிறார்கள்—ஏமாற்றுவதாகக் கருதுகிறார்கள். இந்த மாணவர்கள் மணமக்கள் மார்க்கெட்டில் விலை குறிக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராகியுள்ள விலைப்பொருள்கள்!

இது மாதிரியான மணமகனா ராமன்? மிதிலையின் வீதி வழியாகச் சென்றுகொண்டிருக்கிறான் ராமன். அவன் வில்லும் அம்புராத்தூணியும் தோளில் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறான். அவனுடைய தோள்கள் உருண்டு திரண்டு இருந்தன. அவன் மார்பு அகன்று பரந்திருந்தது. அவன் அதை மறைக்கவில்லை, மாணவன் கூடான மார்பை மறைத்ததைப் போல! அவனைச் சீதை பார்க்கிறாள். அவன் கம்பீரமாக நடந்து சென்ற காட்சி அவன் வெகு தூரம் சென்று மறைந்ததும் அவள் மனக் கண்ணிலிருந்து மறையவில்லை. அக்காட்சியைத் தோழியிடம் சொல்லுகிறாள் சீதை. சீதையா பேசுகிறாள். நம் நாட்டுப் பெண்மை பேசுகிறது.

நாண்உ லாவு வில்லி னோடு பூண்உலாவு பாணியும்,
தூண்உ லாவு தோளும், வாளியோடுலாவு தூணியும்,
வாள்நி லாவின் நூல்உலாவு மாலை மார்பும் மீளவும்
காணலாகும் ஆகின், ஆவி, காணலாகும் ஆகுமே.

ஆஸ்பத்திரியில் மாணவர்களைக் கண்ட எனக்கு 41ம் ஆண்டில் அமராவதிபுதூர் மகளிர் இல்லத்தில் மாணாக்கியர் பாடிய இப்பாடல் நினைவுக்கு வந்தது. ராமனுடைய தோளும் புயமும் சீதையைக் கவர்ந்தன. சீதையை மட்டுமா கவர்ந்தன? சூர்ப்பநகை ராமனைக் கண்டாள். அவனுடைய தோளையும் மார்பையும் கண்டாள் ஆகாயத்திலிருந்தே. 'தோள் கண்டார் தோளேகண்டார்' என்று முன் கூறினாரே அதே கருத்துத்தான். அவள் அதில் ஈடுபட்டுவிட்டாள்.

அவன் தோள் அழகாயிருந்ததால் இவளுக்கென்ன? இவள் ஏன் புழுங்க வேண்டும்? அதுதான் காந்த சக்தி. மணலில் கால் பதிவது போல அவனுடைய தோள் வன்மையும் வனப்பும் அவள் மனத்தில் பதிந்துவிட்டது. அது அவளை எப்படி மாற்றிவிட்டது பாருங்கள்.

மூக்கறுபட்டு ராவணனிடம் ஓடுகிருள். சீதையின் வனப்பைப் பற்றி அவனிடம் கூறுகிருள். அவனுக்கோ காணும் இடமெல்லாம் சீதையாகத் தோன்றுகிறது. காண்பதையும் கேட்பதையும் ஒப்பிட்டுணர தங்கையைக் கேட்கின்ருன். "தங்காய்! அதோ தெரிகிறதே! அவள் தான் சீதையா?" என்று. ஆனல் சூர்ப்பநகைக்கோ காணும் இடமெல்லாம் ராமனுகத் தோன்றுகிறது. ஆம்! அவன்தான் ராமன் என்று கூறிவிடுகிருள்.

செந்தா மரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயினெடுஞ்
சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைகளோடும்
அந்தாரகலத்தொடு மஞ்சனக் குன்ற மென்ன
வந்தா னிவனுகு மவ் வல்விலிராம னென்ருள்.

"அக்கிரமம் செய்தானின் அங்கத்தை வர்ணிக்கிருேமே, இதைக் கேட்கும் அண்ணன் என்ன செய்வான்" என்ற பய உணர்ச்சியையும் மீறச் செய்துவிட்டது, ராமனுடைய தோள் வனப்பு.

வடமொழியில் சிவரகஸ்யம் என்று ஒரு நூல் உள்ளது. அதைப்பற்றி மிக ரகசியமாகக் கொஞ்சம் சொல்லுகிறேன். இராவணன் கைலை மலையைப் பெயர்க்க முயன்ருன். கைலைமலை ஆடியது. அதன்மேல் அமர்ந்திருந்த சக்திக்குப் பயம்உண்டாகி அருகே இருந்த சிவனைத் தழுவினுள். அவரும் தழுவி மகிழ்ந்தார். சக்தி கேட்டாள் "பயத்தை நீக்குவீர் என்று நான் தழுவ, நீர் இன்பம்

காணத் தழுவுகிறீரே'' என்று. சிவன் "பெண்ணே! மாலை நேரம் அவ்வித எண்ணத்தை எழுப்பக் கூடியது. இதை நான் இராமவாதார காலத்து உணர்த்துவேன்'' என்று கூறினார். அதன்படி சிவன் சீதையாகப் பிறந்தார் என்று கதையைத் தொடங்குகிறார் அந்த ஆசிரியர். சிவன் கொடுத்த வாக்கு நிறைவேறும் கட்டத்தை அவர் எழுதிய இராமாயணத்தில் ஒரு காட்சியாகத் தருகிறார்.

காமிகாவனத்தில் சீதை ராமனை போர்க்களத்தில் காணுகிறாள். ஓடிவந்து தழுவுகிறாள். போர் முடிந்த சமயம் அது. அவளை இறுகத் தழுவிக் கொள்கிறார் ராமர். அப்பொழுதுதான் போரின் கொடுமையால் ராமனுக்கு ஏற்பட்ட வெம்மை தொலைந்ததாம்.

இந்த வடமொழி நூலைக் கம்பன் படித்தானோ என்னமோ எனக்குத் தெரியாது. இதுபோன்ற நிகழ்ச்சியைச் சித்தரிக்கிறான் கம்பன்.

பஞ்சவடியில் ராமன் தனியாக இருக்கும்பொழுது சூர்ப்பநகை சென்று அவனோடு பேசி மயக்கப் பார்க்கிறாள். இதைக் கண்ட சீதை வேகமாக வந்து ராமனை நெருங்குகிறாள்.

அஞ்சினள் வஞ்சியன்ன மின்னிடை யலச வோடிப்
பஞ்சின்மெல் லடிகணோவப் பதைத்தனள் பருவக்கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின்
வல்லியென்னகி
குஞ்சர மனைய வீரன் குவவுத்தோள் தழுவிக்கொண்டாள்

சூர்ப்பநகைக்குக் கோபம் வந்துவிட்டது. ''எங்கு வந்தாய்'' என்று ஒரு சத்தம் போட்டாள். அது மேகங்களினுடைய இடிபோன்று இருந்ததாம். உடனே ராமன், அஞ்சி ஓடி

வந்த சீதையை அணைத்துக்கொண்டான். அது மேகம் மின்னலை அணைத்து எடுத்துச் செல்வதுபோல இருந்தது. ராமன் சீதை இருவரையும் கண்ட கம்பனுக்கு மேகமும் மின்னலும் நினைவுக்கு வந்துவிட்டதல்லவா! சிவரகஸ்ய நூல் கூறிய காட்சிபோல் தானே இதுவும் உள்ளது, எனவே ராமாயணம் வைணவர்களுக்கு மட்டும் உரியதில்லை. சைவர்களும் கம்ப ராமாயணத்தைப் படிக்கலாம். ஏனென்றால் ராமன் விஷ்ணுவானாலும் சீதை சிவனல்லவா?

அனுமான் அசோகவனம் சென்று தேடினார். யாரைக் கண்டார்? மின்னலைக் கண்டார். மின்னலுக்கும் காந்தத்திற்கும் ரொம்பச் சம்பந்தம் உண்டு. நவகாளி, திபேரா, பாஞ்சாலம் போன்ற இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் இடையே சுதந்திர ஒளி, டில்லியில் தெரிவது போல அரக்கியர் கூட்டத்தினிடையிலே சீதை யெனும் மின்னொளியைக் கண்டான்.

சீதை அசோக வனத்தில் எப்படி இருந்தாள் என்பதை அனுமான் கூறுகிறார்.

தொடற்கரு மரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடி சீதையா மாதரே கொலாங்
கடற்றுணை நெடியதன் கண்ணினீர் பெருந்
தடத்திடை யிருந்ததோ ரன்னத் தன்மையாள்.

கண்கள் சிந்திய நீர் குளமாகி, அதில் மிதக்கும் அன்னம் போல் இருந்தாள் சீதை. ராகவனின் புயம்தான் சீதையின் கற்பைக் காப்பாற்றியது. ஆடவர்க்கும் கற்பு வேண்டும், இன்றேல் சாந்தில்லா சுவரொக்கும். அனுமான் கூறுகிறார் :

புனைகழ லிராகவன் புயத்தை யேபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ

வனைகழல ரசரின் வண்மை வீக்கிடுஞ்
சனகர் தங் குலத்தையோ யாதைச் சாற்றுவேன்.

சீதையினுடைய கற்பின் உறுதியை இப்படியெல்லாம் சிறப்பித்துக் கூறுகிறார்.

இனத நிறத்தற்ற எனது காந்தத்தை-எனது அன்பை-பக்தியைக் கண்டேன்-காந்தமாமணி சீதையைக் கண்டேன் என்கிறான்.

சீதையைக் காந்தமாமணி என்று தசரதன் வாயிலாகக் கபடன் கூறுகிறான். எப்பொழுது? 14 ஆண்டுகள் கடந்து நாடு திரும்புகிறான் ராமன். அவ்வமயம் தசரதன் தேவலோகத்திலிருந்து பூமிக்குவந்து இராமனைக்கண்டு அவனுடைய கடமையைத் திறமையாகச் செய்ததைப் பாராட்டிக் கூறுகிறான்:

அன்று கேகயன் மகள்கொண்ட வரமெனு மயில்வேல்
இன்றுகாறுமென் னிதயத்தினிடை நின்ற தென்னைக்
கொன்று நீக்கலதிப் பொழுதகன்ற துன் குலப்பூண்
மன்றலாகமாங் காந்தமா மணியின்று வாங்க

"அன்று கைகேசி கேட்ட வரம் என்னும் அம்பு என் மார்பில் பாய்ந்தது. அது இன்று காந்தத்தால் வெளியே எடுக்கப்பட்டு என் மனப் புண் ஆற்றப்பட்டது" என்று தசரதன் மகனிடம் கூறுகிறான். இங்கே சீதையைத்தான் காந்தமாமணி என்று கூறாமற் கூறுகிறார் கம்பர். ராமனிடம் இந்தக் காந்தமாமணி வரக்காரணமாயிருந்தது அவனுடைய திண் தோள்கள் அல்லவா?

# சூர்ப்பநகையின் சூழ்ச்சி

இராவணனுடைய தங்கை சூர்ப்பநகை முறம் போன்ற நகங்களைக் கொண்டிருந்தமையால் சூர்ப்பநகை என்னப் பட்டாள். அவள் தன் கணவனையும் மகனையும் இழந்து, பஞ்சவடிக் காட்டில் தனியே வாழ்ந்து வந்தாள். அப்பொழுதுதான் இராமன் சீதையுடனும் தன் தம்பியுடனும் அங்குவந்து தங்கலானான். ஒரு நாள் அவள் இராமனைப் பார்த்து விட்டாள். இராமனுடைய அழகு அரக்கியின் உள்ளத்தைக் கவர்ந்தது. எப்படியாவது அவனை அடைய எண்ணினாள். சூர்ப்பநகைக்கு வேண்டும் உருவம் எடுக்கத் தெரியும். அவ்வளவு வரபலம் பெற்றவள். இலக்குமியை நினைந்து ஒரு மந்திரம் ஓதினாள். அரக்கியின் உருவம் நீங்கி, ஓர் அழகிய சுந்தரியாக மாறி அவன் முன் வந்தாள்.

அவளைக் கண்டு ஐயுற்ற இராமன் அவள் வரலாற்றை வினவினான். பிரம்மாவின் பெயரனை விச்சிரவசுவின் மகள் என்றும், இராவணனுக்கும் குபேரனுக்கும் தங்கை என்றும், மணமாகாத கன்னி என்றும், தன் பெயர் காமவல்லி என்றும் அவள் தன்னை அறிமுகப் படுத்தினாள். அவள் ஒரு பழிகாரி, அரக்கி என்பதை உணர்ந்த இராமன் தான் அவளை ஏற்க மறுத்து, விளையாட்டாகவே பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது சாலையினுள்ளிருந்த சீதை இராமனை நோக்கி வரலானாள். அவளைக் கண்ட சூர்ப்பநகை

திணறிப்போனாள். திடீரென அங்கு வந்தவள் யார் என்று சூர்ப்பநகையால் தெரிந்துகொள்ள முடியவில்லை. தவக் கோலத்தில் இருக்கும் இராமனுடன் அவள் வந்திருக்க முடியாது. தான் அறிய அவ்வளவு அழகுள்ள பெண் வேறு யாரும் அங்கில்லை என்று திகைத்து நின்றாள் சூர்ப்பநகை. "இவளுடைய அழகு முழுவதையும் என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. என் கண்பார்வை ஓர் எல்லைக்கு உட்பட்ட சிறுமையை உடையது. இவளுடைய அழகோ எல்லையில்லாத பெருமையை உடையது. என் கண்ணையும் மனத்தையும் பிறபொருள்களிற் செல்லாதபடி இவள் அழகு தடுத்து நிறுத்துகின்றது. பெண்ணாய்ப் பிறந்த என்னையே இவள் அழகு இவ்விதம் கவருமானால், ஆண்களைப் பற்றி என்னவென்று சொல்வது?" என்று ஏங்கினாள்:

"பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை யில்லையாம் என்று நின்றாள்;
கண்பிற பொருளிற் செல்லா, கருத்தெனின் அஃதே; கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால், என்படும் பிறருக் கென்றாள்."

சீதையும் தன்னைப்போல், தனக்குப் போட்டியாக இடையே வந்த ஓர் அயலாள் என நினைத்துவிட்ட சூர்ப்பநகை, இராமனிடம், "இதோ வருகின்றவள் ஒரு வஞ்சனை அரக்கி. மாயங்கள் செய்ய வல்லவள். இவளை நம்பக் கூடாது. வீரா! அவளை விரட்டிவிடு." என்று பசப்பினாள். வஞ்சகத்தை நன்கு தெரிந்த இராமன், "ஆம் இவள் வல்லரக்கிதான்!" என்று சிரித்தான். தன் வார்த்தைகளை நம்பிவிட்டதாக எண்ணிய அரக்கி சீதையைப் பார்த்து, "அடி அரக்கி! நீ எப்படி இங்கு இடையில் வந்து புகுந்தாய்?" என்று மிரட்டவும், சீதை நடுநடுங்கி ஓடிச்சென்று இராமனைத் தோளுறக் கட்டிக் கொண்டாள். இராமனும்,

அரக்கியை அகலுமாறு பணித்து, மனைவியைத் தழுவிய வண்ணம் சாலைக்குட் சென்று விட்டான்.

தன் ஆசைக்கு இணங்காது, சீதையிடத்து ஆசை காட்டியவனாய் இராமன் சென்று மறையவும், சூர்ப்ப நகைக்கு அறிவு கலங்கியது. அவள் மனம் அவள் வயமாய் நிற்கவில்லை. கோபமும் வஞ்சனையும் கொதித்து எழுந்தன இராமனைத் தழுவும் பாக்கியம் தனக்கு எப்பொழுது கிட்டும் என்று ஏங்கினாள். சீதையிடம் இராமன் கொண்டிருக்கும் காதலைக் கண்டு கறுவினாள். தன்னுடைய செந் நிறக் கூந்தலுக்கு மாறான மைபோன்று கரிய கூந்தலையுடையவள் சீதையாதலால், அவளிடம் அசையாத திண்ணிய அன்பு கொண்டுள்ளான் இராமன் என்பதையும் எண்ணினாள்:

“ புக்கபின் போய தென்னும் உணர்வினள், பொறையி னீங்கி
உக்கதாம் உயிரள். ஒன்றும் உயிர்த்திலள். ஒடுங்கி நின்றாள்,
தக்கிலள், மனத்துள் யாதும் தழுவிலள், சலமுங் கொண்டாள்
‘மைக்கருங் குழலி னாள்மாட் டன்பினில் வலியன்’ என்பாள்.”

அரக்கியின் விரகதாபம் கொடுமையாகவே இருந்தது. காமனும் கணைகளால் அவளை வாட்டினான். அரக்கியின் உடல் வெதும்பியது. பனிக்கட்டிகளை அள்ளி மார்பில் அப்பினாள். அவை வெயில் எறிந்த பாறையில் வெண்ணெய்போல் உருகி ஓடின. மலைக் குகையினுள் ஓடி மறைந்து பார்த்தாள். கரிய மேகங்களைக் கண்டு இராமனைக் கருதித் தழுவினாள். அவையும் வெந்து போயின தளிர்களிலும் மலர்களிலும் அவள் புரள, அவை கரிந்து தீய்ந்தன. இராமனின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு

அணைய ஓடினாள். அது மறையக் கண்டு மையலுழந்தாள். "சீதையோ பேரழகி. அவளுடைய எழிலமைந்த கண்கள் குவளை மலரோ, கயல் மீனோ என்னும்படியா யிருந்தன. அவள் திருமகளைக் காட்டிலும் கட்டழகு வாய்ந்தவள். அவளை விடுத்து என்னைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டான்," என எண்ணி உயிர் தேயினும் ஆசை தேயாது வருந்தினாள் :

" காவி யோகய லோவெனுங் கண்ணினைத்
தேவி யோதிரு மங்கையிற் செவ்வியாள்;
பாவி யேனையும் பார்க்குங்கொ லோவெனும்,
ஆவி யோயினும் ஆசையின் ஓய்விலள்."

"கற்பிலும் கவினிலும் கமலத் தணங்கை வென்ற வளாய் இலங்குகிறாள் அவன் காதலிக்கும் அந்தப் பெண். அவளைப் போன்ற வடிவழகை என் வர பலத்தால் நான் வேண்டிப் பெற்றாலன்றி அவ் ஆணழகனின் திருமேனியைத் தீண்டுதல் இயலாது" என்று சிந்தித்தாள்:

" மாண்ட கற்புடை யாள்மலர் மாமகள்
ஈண்டி ருக்குநல் லாள்மகள் என்னுமால்;
வேண்ட கிற்பினல் லான்வர மெய்யிடைத்
தீண்ட கிற்பதன் றோதெறுங் காமமே."

(இதில், பின்னிரண்டு அடிகளை, மெய்யிடை வரம் வேண்ட கிற்பின் அன்றோ நல்லான் தீண்ட கிற்பது? காமம் தெறுமே, என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.)

இவ்வாறு சூர்ப்பநகை வருந்தி வாடிக்கொண்டிருக் கையில், பொழுது புலர்ந்தது. மேல் நடக்க வேண்டியவை களைத் தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

இராமன் நீர்த்துறைக்குச் சென்றிருந்தான். சீதை தனியே சாலையினுள் இருந்தாள். புறத்தே அயலில் இலக்குவன் காவல் இருந்ததை அரக்கி கண்டாள் இல்லை. தன் எண்ணத்தை முடிக்க அதுவே தக்கசமயம் என்று அறிந்து, மடமடவென்று சாலைக்குட் சென்றாள். அவளைக் கண்ட இலக்குவன் 'நில்லடீ!' என்று தொடர்ந்து வந்தான். சீதை பஞ்சரக்கிளிபோல் அஞ்சிக் குலைந்தாள். எதிர்பாராது வந்த இலக்குவனை எரிந்து நோக்கிய அரக்கியின் கூந்தலைத் திருகிப் பிடித்துக் கீழே தள்ளி வயிற்றில் உதைத்தான். விழுந்தவள் எழுந்து அவனை வானிலே தூக்கிச் செல்ல முயன்றபோது, இலக்குவன் கத்தியை எடுத்து அவள் காதையும், மூக்கையும், முலைக் காம்புகளையும் அறுத்தெறிந்தான், குருதி ஆறாகப் பெருகியது. துடிதுடித்த அரக்கி பலபடியாகக் கதறினாள். அவ்வழி வந்த இராமன் வினவவும், இலக்குவன், "அண்ணா! இவள் என்ன எண்ணத்துடன் இங்கு வந்தாள் என்று தெரியவில்லை. பிடித்துத் தின்ன வந்தாளோ? அல்லது அரக்கர் கூட்டம் வெளியே நின்றுகொண்டு இவளை முதலில் இங்கு அனுப்பினார்களோ! இவள் சீதைமேற் பாய்ந்ததும் நான் இவ்வாறு தண்டித்தேன்" என்று கூறினான்.

உண்மையில் சூர்ப்பநகையின் நோக்கம் என்ன? அவள் நினைந்து வந்தது யாது? அவள் போட்ட திட்டம் என்ன? இதைக் கம்பர் ஒரு பாடலில் அழகுறக் கூறியுள்ளார்:

“ விடியல் காண்டலின்
ஈண்டுதன் னுயிர்கண்ட வெய்யாள்
‘ படியி லாள்மருங் குள்ளள
வெனையவன் பாரான்;

கடிதி னோடினெ னெடுத்
தொல்லைக் கரந்தவள் காதல்
வடிவி னுனுடன் வாழ்வதே
வாழ்வு' என மதியா."

கம்ப சூத்திரத்திற்கு இப்பாடல் ஓர் எடுத்துக்காட்டு இதனை நாம் சிறிது ஊன்றிக் கவனித்தல் வேண்டும். எந்த விதமாகமாவது குறி தப்பாமல் தன் கொள்கையில் வெற்றி காணத் திட்டமிட்டு வந்தவள் சூர்ப்பநகை. அவள் யாதொரு தீங்கும் புரியாதிருக்கும் பொழுதே இராமன் அவளை விரும்பவில்லை. வெறுக்கிறான். சீதையின் அழகைக் காதலித்து அதில் மயங்கிக் கிடக்கிறான். ஆதலால் சூர்ப்ப நகை கொண்டிருந்த உருவழகு இராமனின் மனதைக் கவரத் தவறி விட்டது. இப்பொழுது சீதைக்கும் அவள் ஒரு கொடுமையை இழைத்து அவளைப் பிரித்து மறைத்து விட்டால், இராமன் காமவல்லியான அரக்கியை மேலும் அதிகமாய் வெறுத்துப் பகை கொள்வானேயன்றி, அவளை ஒருநாளும் விரும்ப மாட்டான். அவள் நோக்கமோ எப்படி யாவது அவன் விருப்பத்தைப் பெற்று அவனுடன் காதல் வாழ்க்கை நடத்தவேண்டும் என்பது. இதையெல்லாம் நன்கு துருவி ஆராயவல்ல அறிவாற்றல் பெற்றவளாகவே சூர்ப்பநகை நமக்குக் காட்சியளிக்கிறாள். இரவெல்லாம் நன்கு தீர ஆலோசித்து ஒரு முடிவுடனேயே அவள் காலை யில் வந்திருக்கிறாள்.

அவள் கருத்தைக் களங்கமற எடுத்துக் கூறுவதே இப் பாடல். இதில் 'அவள் காதல் வடிவினுனுடன் வாழ்வதே வாழ்வு' என்ற தொடர், மிக நயமான பொருட்செறிவுள் ளதுப், இதுவரை நம்மை யெல்லாம் ஏமாற்றி வந்த பகுதியு மாகும். இதற்கு 'அவளது (சீதையது) ஆசை வடிவமான அவனுடனே (இராமனுடனே) கூடி வாழ்வதே சிறந்த

வாழ்க்கையாம்' என்ற பொருள் கொள்வது பொருத்த மாயில்லை. அவள் காதல் வடிவினன் எனப் பிரித்து, சீதை யாற் காதலிக்கப்பட்ட வடிவழ குடையான் என்று கூறு தலும் சிறக்காது. இராமனுடைய வடிவத்தைச் சீதை மட்டும் தானா காதலித்தாள்? கண்டவர்கள் யாவருமே காதலித் தார்கள்.

இராமனிடத்துச் சூர்ப்பநகையின் காதலோ கரையில் லாததாய் இருந்தது. அவ்வாறு இருக்கவும், சீதை காதலிக் கும்படியான உருவினனாகிய இராமன் என்று இங்கே வேண்டா விதமாய் அரக்கி கூறியதாகக் கம்பர் பாடியிருக்க மாட்டார். சீதை இராமன்மேல் கொண்டிருக்கும் காதலைப் பற்றிச் சூர்ப்பநகைக்குக் கவலையில்லை. அவள் கவலையெல் லாம் இராமன் சீதையைக் காதலிப்பதைப் பற்றியதேயா கும். சீதையின் வடிவம் இராமனின் காதல் வடிவமாய் இருப்பதை நன்கு அறிந்துகொண்டவள் சூர்ப்பநகை. சீதை மாட்டு அவன் அன்பினில் வலியனாதற்குக் காரணம் அவள் காதல் வடிவமே. சீதையின் காதல் வடிவத்தைக் கண்ட கண்களால் பாவியான தன்னையும் பார்க்குங்கொலோ என்று அவள் முன் ஏங்கியதைப் பார்த்தோம். சீதையின் காதல் வடிவத்தைத் தன் மெய்யிடை வரத்தால் வேண்டிப் பெற்றாலன்றி அவன் தீண்டவும் மாட்டான் என்று முன் னரே கூறியதையும் நாம் கண்டிருக்கிறோம். இவ்வாறு படிப் படியாக ஒரே கொடிய எண்ணம் அவள் உருவத்தில் உரு வாகிக்கொண்டு வந்திருக்கிறது. இதுவரை அது குழப்ப மாய் இருந்து வந்தது. இப்பாடலில் அது நன்கு தெளிவா கின்றது. இப்பொழுது அவள் கூறுவதை மீண்டும் ஒரு முறை படிப்போம். படியிலாள் (ஒப்பில்லாதவளாகிய சீதை) மருங்கு (பக்கத்தில்) உள்ளளவு எனை அவன் பாரான்: கடிதின் (விரைவில்) ஓடினென் எடுத்து ஒல்லை

(சீக்கிரமே) கரந்து (ஒளித்துவிட்டு), அவள் காதல் வடிவில் நான் உடன் வாழ்வதே வாழ்வு என எண்ணினுள்.

சூர்ப்பநகைக்கு வேண்டும் உருவம் எடுக்கத் தெரியுமே! இராமன் சீதையின் வடிவைக் காதலித்தான். காமவல்லி வடிவைக் காதலிக்கவில்லை. தான் எப்படியும் அவன் காதலைப் பெறவேண்டும். அதற்குவழி, தான் சீதையின் காதல் வடிவைப் பெறவேண்டும் என்று நினைத்தாள் அரக்கி. சீதையை எடுத்து மறைத்துவிட்டு, தான் சீதையின் வடிவுகொண்டு சீதைபோல் நடித்து, இராமனை ஏமாற்றி அவனுடன் வாழ்வதே தனக்கு இனி வாழ்வு என்று உறுதியான முடிவு கொண்டாள் அரக்கி. நல்ல வேளையாக அம்முடிவுக்கு ஒரு முடிவுகட்டினுன் இலக்குவன். 'காதல் வடிவில் நான்' என்னும் தொடர் 'காதல் வடிவினுன்' என்று நின்று, இதுவரை நம்மைத் திகைக்க வைத்தது வியப்பேயாகும்.

# கம்ப ராமாயணப் பதிப்பு

இராமாவதாரத்தைப் பாடுவதற் கென்றே கவிச்சக்கர வர்த்தி கம்பன் அவதரித்தான். 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற சொல்வழக்கு கம்பராமாயணம் தோன்றிய காலத்தி லேயே தோன்றிவிட்டது. அது என்றும் நிலவி நிற்கும். ஒரு பெரிய அறிஞன் நாட்டிலே தோன்றினல், அந்த நாடும் அறிவிற் சிறந்து பெருமை யடையும். கம்பன் கவிதை தோன்றிய நாள்முதல், அதனைப் பலரும், பல இடங்களி லும் படிக்கத் தொடங்கித் தமது கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ளலாயினர். கம்பன் கல்வியிற் பெரியனுதலால், தமிழ்நாடும் கல்வியிற்சிறந்து விளங்குவ தாயிற்று. அதைத் தான் கவி பாரதியார், "கல்வி சிறந்த தமிழ் நாடு-உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்று காரண காரிய முறை யில் வைத்து விளக்கிப் பாடினுர். திருவள்ளுவரைப்போல் கம்பனும் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு அளவிட முடியாதது. தமிழுக்குக் கதியாவார் கம்பனும் திருவள்ளு வரும் என்று கூறுவது வெறும் வார்த்தையன்று.

கம்பன் உலகப் பெருங் கவிஞர்களுக்குள்ளே மிகவும் தலைசிறந்தவன். கம்பராமாயணம் வான்மீகத்தின் மொழி பெயர்ப்புத்தானே என்று எளிதாய் நினைத்துவிடக்கூடாது. பெரிய காப்பியம் எழுதிய எந்தப் புலவனும் தன் சொந்த மாக எதையும் எழுதிவிட வில்லை. ஹோமர், வர்ஜில்,

ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவர்களும் பிறமொழிகளில் அல்லது உலக வழக்கில் பயின்றுவந்த கதைகளைக் கொண்டே தம் காவியங்களை அழகுறப் பாடினார்கள். சிலம்புச் செல்வம் ஒன்றுதான் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகாது தமிழ் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் உரியதோர் ஒப்பற்ற நூலாய் மிளிர்கிறது. கம்பனுடைய வீறு கொண்ட புலமைத்திறனுக்கும், பரந்த கற்பனைக்கும், கடவுளுணர்ச்சிக்கும், கவியின் ஆற்றலுக்கும் ஏற்றதாகக் கிடைத்தது வான்மீகி இராமாயணம். அதனைக் கண்டவுடன் கம்பனின் உள்ளம் துள்ளிப் பாய்ந்தது; அதிலே ஈடுபட்டது. அத்தகைய அழகிய கதை தமிழில் இல்லையே என்று எண்ணினான். தமிழில் அதைவிடவும் சிறப்பாக, அழகாகத் தானே பாடலாம் என்ற துணிவு பிறந்தது; ஆசை வளர்ந்தது. தமிழ் நாட்டவர்மேல் அன்பு ஊறியது. தனது திறமையைக் காட்ட ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்ததே எனும் எக்களிப்பு ஏற்பட்டது. கவி வெறிகொண்டான். வடமொழி இராமாயணத்தைத் தமிழாகத் தனதாகப் பாடினான். ஓர் இரசவாதியின் கைப்பட்டதும் இரும்பு பொன்னாவது போன்ற இந்திரசாலம், அதிசய மாற்றம், அற்புதத் தோற்றம் நிகழ்ந்தது. கம்பராமாயணம் பிறந்தது. அதில் வரும் கதாபாத்திரங்கள் எல்லாரும் தமிழ் நாட்டவராகித் தமிழரின் மேன்மைக் குணங்களையும், பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு, தமிழெழிலில் விளங்கக் காட்சியளிக்கின்றனர். கோசலநாடே தமிழ் நாடாக, ஏன் சோழநாடாக மாறி விடுகிறது.

தமிழ் மொழியிடத்தும் தமிழ் நாட்டிடத்தும் உண்மைப் பற்றுக்கொண்ட எவரும் கம்பனைப் போற்றாமல் இருக்க முடியாது. கம்பராமாயணத்தில் தமிழ்மொழி பன்மடங்கு உயர்வும், பெருமையும், மேன்மையும், இனிமையும், செழுமையும் அடைந்திருக்கிறது. கம்பனுக்

குத் தமிழ் மொழியினிடத்தே மட்டற்ற மதிப்பும், அன்பும், பற்றுதலும் உண்டு. என்றுமுள தென்றமிழை இயம்பி யிசை கொள்ளவே பிறந்தவன் கம்பன். உலகிற் சிறந்த மொழிகள் எல்லாவற்றினுள்ளும் மிகச் சிறந்ததோர் மொழியாகத் தமிழைச் சிவபெருமானே படைத்தார் என்று கம்பன் பாடியுள்ளான். அவனுடைய சிவபக்தியின் சீலம் அவன் காவியத்தில் நூற்றுக்கணக்கான இடங்களில் வெளிப்படுகிறது. தமிழ் நாட்டிடத்தே பற்றுக்கொள் வதில் கம்பன் எந்தத் தமிழனுக்கும் பின்வாங்கியவனில்லை.

> " அத்தி ருத்தகு நாட்டினை யண்டர் நா(டு)
> ஒத்தி ருக்கும் என்றால், உரை ஒக்குமோ?
> எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
> முத்தும் முத்தமி ழும்தந்து முற்றுமோ."

என்று தன் இராமாயண நூலகத்துக் கம்பன் பாடியுள் ளான். வேறு எந்தத் தமிழன் இவ்வாறு பாடினான்?

ஆனால், உண்மையான கம்பனைத் தமிழுலகம் இன்னும் காணவில்லை. கம்பனுடைய உருவச்சிலை விகாரமடைந்து, பாசிபிடித்துத் தூசிகுவிந்து, மாசுபடிந்து, துருஏறிச் சிதை வுற்றுக் கிடக்கிறது. இந்த நிலையிலே குன்றிக்கிடக்கும் கம் பனின் உருவமே இவ்வளவு சிறப்புடன் இலங்கி நம் உள்ளத்தைக் கவருவதாயிருக்கு மானால், அவன் படிவம் தூய்மை செய்யப் பெற்றுத் தன் இயல்பான எழிலோடும் ஒளியோடும் விளங்கும்பொழுது, இன்னும் ஆயிரம் மடங்கு ஏற்றம் பெற்று விளங்கும் அல்லவா? இத்தகைய புனித மான திருப்பணியிலே இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை முனைந்திருக்கிறது.

ஒரு திருத்தமான கம்பராமாயணப் பதிப்பு வெளி வரும் பொழுதுதான் தமிழுலகமும், வெளியுலகமும் கம்பனை

நன்றாக அறிந்து சுவைக்க முடியும். அப்பதிப்பு வேலையை எவ்வாறு செய்ய வேண்டுமெனின், கிடைக்கக்கூடிய கம்ப ராமாயண ஏட்டுச்சுவடிகள் அனைத்தையும் திரட்டிவைத்துக் கொண்டு, ஒவ்வொரு பாட்டாக, விடாமல் அனைத்தையும் நன்கு படித்துப் பாட பேதங்களைக் குறிக்க வேண்டும். இவ்வாறு ஏடுபடிக்கும் பொழுது, ஒவ்வொரு பகுதிக்கு, ஒவ்வோர் ஊருக்கு, ஒவ்வோர் பிராந்தியத்திற்கு ஓர் ஏடு, அல்லது இரண்டு ஏடு பார்த்தால் போதும் என்று மற்ற ஏடுகளைப் புறக்கணித்துவிடக் கூடாது. திருத்தமாகத் தெரியக் கூடிய ஏட்டில் பல பாடல்கள் உள்ளே பிழைபட்டுக் கிடக்கக்கூடும். பிழைபட்டதாகத் தெரியக் கூடிய ஓர் ஏட்டில் திருத்தமான பல பாடல்கள் கிடைக்கக் கூடும். ஓர் ஏடு மற்றோர் ஏட்டின் பிரதியாக முதலில் தோன்றக் கூடும். ஆதலால் அதைப்படிக்க வேண்டாம் என்று விட்டு விடக் கூடாது. அது போகப்போக மாறுபட்டு வேறொரு விதமாகத் திரும்பக்கூடும். எனவே, ஒன்றையும் ஒதுக்கி விடாது எல்லா ஏடுகளையும் படித்துப் பாடம் எடுத்து ஆகவேண்டும். ஒரு சுவடியில் பதினாயிரம் பாடல்களைப் படித்துப் பார்த்ததில் ஒரே ஒரு திருத்தமான பாடம் கிடைத்தது. ஆனால் அந்த ஒரு பாடமும் ஒரு கோடி பொன் கிடைத்தது போன்ற மகிழ்ச்சியை உண்டாக்கியது. இந்த ஒரு பாடம் கிடைப்பதற்காக நாலைந்து மாதங்களாய் ஒரு சுவடியைப் படித்துக் காலத்தை வீணாக்குவதா என்று விட்டிருந்தால், வேறு எந்த ஏட்டிலும் கிடைக்கக் கூடாத அந்த ஒரு பாடம் நமக்குக் கிடையாமலே தொலைந்திருக்கும்.

ஆகவே, கம்பராமாயணப் பதிப்பு வேலைக்கு, ஏடு படித்து ஒப்புமை நோக்கிப் பாட வேறுபாடுகளைக் குறிப்பதுதான் முதன்மையான அடிப்படை வேலை. இவ் வேலையை யாரும் எவரும் செய்துவிடலாம் என்று விட்டுவிடுவதும், எளிதென்று கருதுவதும் பெரும் பிழையாகும். ஒரு

மாளிகை கட்டுவதற்கு அதன் அடிவாரத்து வேலை எவ்வளவு முக்கியமோ, அதுபோன்று திருத்தமான கம்ப ராமாயணப் பதிப்பு வெளிவருவதற்கும் ஏடு படிக்கும் வேலை மிக முக்கியம். தமிழ்க் கல்வியிற் சிறந்து இவ் வேலையிற் பழகிய தக்கோர்களே இவ்வேலையைக் கைக் கொள்ள வேண்டும். பயிற்சி இல்லாத மாணாக்கர்களையும், கூலி வேலைக் குமாஸ்தாக்களையும் கொண்டு இவ்வேலையை நடத்திவிடுதல் கூடாது. டாக்டர் சுவாமிநாத ஐயர் அவர் கள் என்ன பாடு பட்டாவது தாமே ஏடுகளைப் பரிசீலனை செய்வது என்ற நியதியைக் கையாண்டதாலேதான், பல நல்ல நூல்களைத் தமிழுலகிற்கு அளிக்க முடிந்தது. ஏடு படிப்பவர்கள் தமிழ் மொழியிடத்துப் பற்றுடையவர் களாய்க் கம்பராமாயணத்திற்கு நல்ல முறையில் ஒரு பதிப்பு வெளிவர வேண்டுமே என்ற ஆத்திரத் துடிப்பு உடையவர்களாய்க் கடமையுணர்ச்சி பெற்றவர்களாய் அமைய வேண்டும். எப்படியாவது வயிற்றுப் பிழைப்பை நடத்தினாற் போதும் என்ற எண்ணம் உள்ளவர்களை இவ்வேலையில் விட்டால், நமக்கு நல்ல திருந்திய பாடங்கள் கிடைக்காமல் தொலைந்தே போய்விடும். பழைய ஏடுகளில் றகர ரகரங்கள், லகர வகரங்கள், ழகர ளகரங்கள், புள்ளி யில்லாத ஒற்றுக்கள், கால்கள் எல்லாம் குழம்பிக் கிடக்கும். நெட்டெழுத்துக்குப் பதில் குற்றெழுத்துக்களே எழுதப்பட்டிருக்கும். எழுத்துக்களின் தலையில் எழுத் தாணியால் ஒரு புள்ளி இலேசாக இடப்பட்டு அடித்தல் கள் நடந்திருக்கும். பூச்சிகள் துளைத்த துளைகளாலும் புள்ளிகள் போன்று அரித்தல்கள் நடந்திருக்கும். நாம் முன்னால் மனனம் பண்ணின பாடங்கள் வந்து ஏட்டுப் பாடங்களை மறைத்து ஏமாற்றிவிடக் கூடும். முக்குண வசத்தான், மனிதனின் மனநிலை மாறி மயக்கமுறும் நேரங் களும் உள. இடையே மெய்மறந்த தூக்க நிலையும்

ஏற்படக் கூடும். விரைவில் வேலையை, முடிக்க வேண்டும் என்ற நிலையில் உணர்ந்து கொள்ளாமலே பல பாடங்கள் தள்ளப்பட்டுவிடும். பொருளுணர்ச்சியில்லாமல் ஒரு பாடலையும் கடக்கக் கூடாது என்ற உறுதிப்பாடு வேண்டும். சில இடங்களில் எழுத்துக்கள் தெரியாமல் திரிந்து கிடக்கும் அல்லது மங்கிக் கிடக்கும். அவற்றைச் சிரமம் எடுத்துத் தெளிய வேண்டும். தெரியாதவற்றை அருகிலுள்ள அறிஞர்களிடம் காட்டித் தெரிந்து கொள்ள வேண்டும். சிரமம் எடுக்கச் சோம்பியும், கேட்டுத் தெரிய நாணியும், பல பாடங்கள் பாழாய்ப் போய்விடக் கூடும். இவை நிகழாதவாறு பார்த்துப் பாடங்களைக் குறிக்க வேண்டும். பாடங்களைக் குறிக்கும்பொழுது ஏற்படக் கூடிய தவறுகள் மிகப் பலவாகும். அவற்றை ஒரு முறைக்கிரு முறை திருப்பிப் படித்தும், பிறரைக் கொண்டு பார்க்கச் செய்தும் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். பின்னும் பலமுறை அதே ஏட்டைப் புரட்டிப் பார்க்கும் படியும் நேரலாம். அதற்குச் சோம்பி வாளா இருந்து விடக் கூடாது. இவ்வாறு அரிதிற் சேர்த்த பாடங்களைக் கொண்டு பின் திருத்தமான பாடத்தைக் காண முயல வேண்டும்.

இப்பொழுது அச்சாகி வந்திருக்கும் புத்தகப் பாடங்களையும், அவற்றுக்கு எழுதப்பட்டிருக்கும் உரைகளையும் சீர் தூக்கி, ஒவ்வாதனவற்றை யெல்லாம் தனியே எடுத்துத் தொகுக்க வேண்டும். அவற்றை ஏனைய ஏட்டுப் பாடங்கள் எந்த விதத்தில் திருத்த முடியும், அத்திருத்தத்தால் பாடல் எவ்வாறு விளக்கம் பெறுகிறது, எதுகை மோனை சீர் தளைகள் எவ்வாறு இயைந்து பொருத்தம் காண்பிக்கின்றன, அவற்றிற்கு முன் பின் பகுதிகளில் ஒப்புமை ஆதரவுகள் இருக்கின்றனவா, பிற நூல்களிலிருந்து ஏதேனும் விளக்கம் கிடைக்குமா, கம்பன் அவ்வாறு பாடி

யிருக்க முடியுமா என்பனவற்றையெல்லாம் நிதானமாகவும், காய்தல் உவத்தல் இன்றியும், சுவையுணர்ச்சியுடனும் சிந்தனை செய்து, பலரோடும் விவாதித்துத் தடை விடைகளான் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். பெரும்பாலும், கம்பனுடைய உண்மைப் பாடம் நமக்குக் கிடைத்துவிட்டால் போலிகள் எல்லாம் புறக்கென்று மங்கி விடும். இருந்தாலும் பல இடங்களில், பாட பேதங்களின் குவியலுக்குள்ளே உண்மைப் பாடத்தைக் கண்டுபிடிப்பது, இந்திரப் பிரத்தத்தில் பாண்டவர் நிருமித்த பளிக்கு மாளிகையினுள் துரியோதனன் பட்ட பாடாகவே இருக்கும்.

"கம்பராமாயணம்தான் பலராலும் உரையெழுதப் பட்டுப் பல பதிப்புக்களாக அச்சாகி வெளிவந்துள்ளதே, இன்னும் என்ன என்ன திருத்தம் அடைய வேண்டியிருக்கிறது?'' என்று சிலர் எண்ணக் கூடும். நூற்றுக்கு எழுபத்தைந்துக்கு மேலான பாடல்களும் உரைகளும் இன்னும் திருத்தம் பெற வேண்டிய நிலையில் உள்ளன என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்குக் காரணம் நல்ல பாடங்கள் கிடையாமையும், கிடைத்த பாடங்களுக்குத் தக்கவாறு ஏதாவது உரை எழுதினால் போதும் என்ற எண்ணமுமேயாகும். எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை இங்குக் காண்போம். சுந்தர காண்டம் கடல்தாவு படலத்தில், 78-ஆம் பாடல் வருமாறு :

"துண்டப் பிறைத்துணை யெனச்சுடர் எயிற்றுள்
கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா
முண்டத் துரித்தவுரி யாண்முளரி வந்தான்
அண்டத் தினுக்குறை யமைத்தபில வாயாள்."

இப் பாடலின் நடுவிரண்டு அடிகளுக்கு, "கழுத்தில் விஷக் கறையை உடைய பரமசிவன்போல், துதிக்கை

யுடைய யானையினது உடலினின்று உரித்தெடுத்த தோலைப் போர்த்துக் கொண்டிருப்பவனும்" என்று உரையெழுதப் பட்டிருக்கிறது. பிறரெவராலும் செய்தற்கரிய செயலைச் செய்பவன் சிவபெருமான் என்று காட்டவே, சிவன் யானைத் தோலைப் போர்த்துக் கொண்டிருக்கிறான் என்பது கூறப்பட்டது. 'யானையின் பசுந்தோல் பிறநுடம்பிற் பட்டால் கொல்லுமென்றுணர்க" என்று நச்சினார்க்கினியரும், சீவக சிந்தாமணி, 2787-ஆம் பாடலின் உரையில் எழுதி யுள்ளார். அத்தகைய அரிய செயலை அங்கார தாரை என்ற அரக்கியும் செய்தாள் என்று கூறுவதானால், அங்கார தாரை சிவபெருமானை ஒத்த ஆற்றலையுடையவள் என்றாகி விடும். கம்பன் இவ்வாறு புராண அறிவுக்கு இழுக்கு உண்டாகும் வண்ணம் பாடியிருப்பானா? மாட்டான். பின் இப்பிழை எவ்வாறு நேர்ந்தது? நாம் பல ஏட்டுப் பிரதி களையும் பார்க்கும்பொழுது, சில ஏடுகளில் மூன்றாவது வரியில், உரியான் என்ற பாடமும் வருகிறது. உரியால் என்பதிலுள்ள லகர ஒற்று, முளரி என்ற வருமொழிக்கு முன், இலக்கண விதிப்படி, னகரவொற்றாக மாறியுள்ளது. கண்டத்திடைக் கறையுடைக் கடவுளாகிய சிவன், யானையை உரித்தெடுத்த தோலைக்கொண்டு, முளரிவந்தா னாகிய பிரமன், இவ்வண்ட கோளத்தினுக்கு ஓர் உறை அமைத்தது போன்றிருந்தது அங்கார தாரையின் வாய் என்று அவ்வரக்கியின் வாயின் பெருமையை எடுத்துப் பேசுகின்றான் கம்பன். யானையின் தோலை உரிப்பது வேறு எவருக்கும் ஆகாது ஆகையால், சிவன் உரித்த தோலைப் பிரமன் கொண்டு உறை அமைத்தது போன்றிருந்தது என்று கவி பாடினான் என்க. எனவே, 'உரியால்' என்ற பாடமே பொருந்துவதாகும். அதுவே திருந்திய பாடம். 'உரியால்' என்பது 'உரியான்' என்று ஆகிப் பின், ஏடு படிப்போர்களும் எழுதுவோர்களும் பொருளை உணர

மாட்டாத நிலையில், உரியான் என்பது ஆண்பால் எனக் கொண்டு, இங்குப் பேசப்படும் அங்காரதாரை பெண்பால் ஆகையால், அப் பெண்பாலுக்குரிய உரியாள் என்று திருத்த, இலக்கணப் புணர்ச்சி விதிப்படி ளகரவொற்று ணகர வொற்றாக மாறி, ஏடுகளிற் பாடமாக ஏறிவிட்டது. அப்பாடத்திற் கியைய உரையும் எழுதப்பட்டு விட்டது.

அடுத்தபடியாக ஊர்தேடு படலத்தில் 11-ஆம் பாடலைப் பார்ப்போம்:

" போரியைந்தன தோற்றவென் றிகழ்தலிற் புறம்போய்
நேரியன்றவன் றிசைதொறு நின்றமா நிற்க
ஆரியந்தனி யைங்கரக் களிறுமோ ராழிச்
சூரியன்றனித் தேருமே யிந்நகர் தொகாத."

இலங்கையிலுள்ள யானைப்படை தேர்ப்படைகளின் மிகுதியைக் கூற எழுந்தது இப்பாடல். இதில், 'ஆரியந் தனி யைங்கரக் களிறும்' என்பதற்கு மேன்மையான ஒப் பற்ற ஐந்து கரங்களையுடைய விநாயகக் கடவுளாகிய யானையும்" என்று உரை கூறப்பட்டுள்ளது. இவ்வுரையை இதுவரை தவறென்று கூறுவார் எவரும் இல்லை. பதிப்புக் களும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பலமுறை அச்சாகியும் எதுவும் திருத்தப்படவில்லை. விநாயகக் கடவுள் யானைமுகக் கடவுளே. ஆனால் அவர் யானையாக மாட்டார். வாகனமும் ஆகமாட்டார். விநாயகரையும் திக்கு யானை களோடு சேர்த்தெண்ணி, இலங்கை யானைகளுடன் வந்து சேராதவை இவையே என்று கம்பன் பாடுவானா என்பதை நாம் சிந்தனை செய்யவேண்டும். ஆயின், இதற்குத் திருந்திய பாடம் எதுவென ஆராயின், 'ஆரியன் தனித் தெய்வமாக் களிறப்' என்று ஒரு பாடம் கிடைத்திருக்கிறது. அதற்குப் பொருள் ஐயனுருடைய தெய்வத்தன்மை பொருந்திய பெரிய

வாகனமாகிய யானையும் என்பதாகும். இப்பாடமும் இப் பொருளுமே ஏற்புடையன என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

மற்றொரு பாடலை நோக்குவோம். நிந்தனைப் படலத்தில் 8-ஆம் பாடலின் முன்னிரண்டடிகள் வருமாறு:—

" சன்ன வீரத்த கோவை வெண்டாள முழியி னிறுதியிற் றனித்த
பொன்னெடு வரையிற் றோற்றிய கோளுநாளு மொத் திடையிடை பொலிய."

இதில், இராவணன் மார்பில் அணிந்திருந்த பொன்னு ரத்தில் பதிக்கப் பெற்ற முத்துக்கள் எவ்வாறு காட்சி அளித்தன என்பது கூறப்படுகிறது. அவை ஊழியினிறு தியில் மேருமலையிற் காணப்பட்ட கிரகங்களையும் நட்சத் திரங்களையும் ஒத்திருந்தனவாம். இரண்டாவது வரியில் 'பொன்னெடு வரையில் தோற்றிய' என்று பாடம் வந்துள் ளது. எல்லா அச்சுப் பிரதிகளிலும் இந்தப் பாடமே காணப்படுகிறது. ஆனால் வானத்திலுள்ள நாள்களும் கோள்களும் மேருமலைமேற் கொள்ளப்படுவானேன்?. அதற்குத் 'தோற்றிய' என்ற சொல் விளக்கம் தரவில்லை ஏடுகளில் 'தொத்திய' என்ற பாடமும் வருகிறது. வான் கெட்டு மாருதமும் மாய்கின்ற ஊழிக்காலத்தில் சலியாது கடைசியில் நின்ற மேருமலையைப் பற்றுக் கோடாக எண்ணி நாள்களும் கோள்களும் தொத்திக்கொண்டு தப்ப வழி தேடுமாம். ஆகலின் 'தோற்றிய' என்ற பாடத்தைவிட 'தொத்திய' என்ற பாடமே சிறக்கும். இதுவே திருந்திய பாடம் என்பதை வலியுறுத்துவதற்கு யுத்த காண்டத்துச் செய்யுள் ஒன்றையும் நாம் நோக்கி ஒப்புமை காணுதல் வேண்டும். யுத்த காண்டத்துப் பிரமாத்திரப் படலத்து 117-ஆம் செய்யுளில்,—

" ஒத்தக்கடை யுகமுற்றுழி யுறுகால் பொரவுடுமீன்
தொத்தப் பொலி கனகக்கிரி."

என்று கம்பன் பாடிச் செல்வது எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது பாருங்கள்! இங்குத் 'தொத்த' என்பது எது கையிலே கிடக்கிறது. பல ஏடுகளில் 'தொத்த' என்பது 'தொற்ற' என்றே எழுதப்பட்டிருக்கும். தகரத்திற்குப் பதில் றகரத்தை எழுதுதல் ஒரு வழக்கம். அதனைக் கூர்ந்து நுனித்தறிதல் வேண்டும்.

ஆரணிய காண்டம், சூர்ப்பநகைப் படலம், 90-ஆம் பாடல் வருமாறு:—

" விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்ட வெய்யாள்
படியி லாண்மருங் குள்ளன வெனையவன் பாரான்
கடிதி னோடினெ னெடுத்தொல்லைக் கரந்தவள் காதல்
வடிவி னானுடன் வாழ்வதே வாழ்வென மதியா."

இப்பாடலின் பின்னிரண்டடிகளுக்கு, "விரைவாக ஓடிச் சென்று சீதையை எடுத்துக் கொண்டுபோய் விரைவிலே மறைத்துவைத்துவிட்டு அவளது ஆசை வடிவமான அவனுடனே (அல்லது சீதையாற் காதலிக்கப்பட்ட வடிவழகுடையானாகிய இராமனுடனே) கூடி வாழ்வதே சிறந்த வாழ்க்கையாம் என்று எண்ணி"(னாள் சூர்ப்பநகை) என்று கூறப்படுகிறது. சூர்ப்பநகை சீதையின் வடிவழகிலே இராமன் முற்றிலும் ஈடுபட்டிருக்கிறான் என்பதை நன்கு உணர்ந்து கொண்டாள். தன் வடிவை அவன் விரும்பவில்லை என்பதும் தெளிவு. எப்படியாவது இராமனை அடையவேண்டும் என்பது சூர்ப்பநகையின் குறிக்கோள் அவளுக்கோ வேண்டும் உருவம் எடுக்கத் தெரியும். இந்த நிலையில், சீதை காதலிக்கும் கட்டழகுடையான் இராமன் என்ற பொருள்பட 'அவள் காதல் வடிவினானுடன்' என்று

அரக்கி கூறியிருப்பாளா? என்பது சிந்திக்க வேண்டிய தொன்று. இராமன் காதலிக்கும்படியான பேரழகுடைய வள் சீதையென்பதே அரக்கியின் எண்ணமேயொழிய, சீதை காதலிக்கும் அழகுடையவன் இராமன் என்பதன்று. இந்த நிலையில் சில ஏடுகளில், ஈற்றடியில் "வடிவினுடன் வாழ்வதே" என்ற பாடம் கிடைக்கிறது. இராமனால் காதலிக்கப்பட்ட அந்தச் சீதையின் வடிவத்துடனே, என் பது இதன் பொருள். எந்த விதத்திலும் இராமனையடைந்து விட முற்பட்ட சூர்ப்பநகை சீதையை மறைத்துவிட்டு, அவள் வடிவத்தைத் தானடைந்து, சீதைபோலவே நடித்து, இராமனுடன் வாழவேண்டும் என்று திட்டமிட்டாள். அவள் மிகவும் பொல்லாதவள். நல்லகாலமாக இலக்குவன் இடைமறித்து அவள் சதித் திட்டத்தைச் சிதறவடித்து விட்டான். இப்புதிய கருத்து இப்புதிய பாடத்தால் இப் பொழுது நமக்குக் கிடைக்கிறது. இதுவரை இது கிடைத்த தில்லை. அச்சிலுள்ள பாடம் பொருத்தமுடையதாயில்லை. பொருளும் சிறக்கவில்லை. இதுபோன்று நூற்றுக்கணக் கான திருந்திய பாடல்கள் இதுவரை நமக்குக் கிடைத் துள்ளன. இன்னும் ஆயிரக்கணக்கானவை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இதற்குத் தமிழ்ப் பெரு மக்களுடைய ஆதரவும் அன்பும் பெரிதும் வேண்டும்.

# கம்ப ராமாயணத்தில் பாட வேறுபாடுகள்

இராமன் வரலாற்றைக் கம்பன் காவியமாகப் பாடினன். அக்காவியத்தை நாம் கம்பராமாயணம் என்று வழங்குகிறோம். ஆனால் கம்பன் தனது நூலுக்கு என்ன பெயர் கொடுத்தான் என்பது பற்றித் திட்டமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. இராம கதை, இராம காதை, மாக் கதை, இராமாவதாரம் என்று பலவாறாகச் சொல்லுவர். ஆராய்ந்து பார்க்கில், இராமாவதாரம் என்பதே வலியுறும். எனவே, இந்நூலின் பெயர் குறித்தே எத்தனையோ வேறு பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறே காண்டங்களின் பெயர் பற்றியும், படலங்களின் பெயர் பற்றியும் எண்ணிக்கை பற்றியும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. பாடல்களை எடுத்துக்கொண்டால், பல பாடல் கள், இவை கம்பன் பாடியவையா அல்லது இடைச் செருகலா என்ற ஐயத்தை எழுப்பி நிற்கும். இவற்றையும் தாண்டிச் சென்றால், ஒவ்வொரு பாட்டிலும், ஒவ்வொரு வரியிலும், ஒவ்வொரு சீரிலும் பலவான வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில பாடல்களில் பாட்டு முழுதுமே உருமாறிக் கிடக்கும். முதலெழுத்துத் தவிர மற்றைய வெல்லாம் வேறுபட்டுக் காணப்படும் பாடல்களும் சில ஏட்டுச் சுவடிகளில் நான் பார்த்து வியப்படைந்திருக்

கிறேன். ஒரு போலிப் புலவர் கம்பன் பாடற் கருத்துக்களை வைத்துக்கொண்டு, தாமாகவே எல்லாப் பாடல்களையும் தெளிவாக, எளிதாகப் பாடி முடித்துவிட்டார் என்று தெரிய வந்தது. அவ்வேட்டில் இராமாயணக் கதை இருக்கும்; ஆனால் கம்பன் கவிச் சுவை இருக்காது. அதைக் கம்ப ராமாயணம் என்று சொல்ல முடியாது. வம்ப ராமாயணம் என்றுதான் சொல்ல வேண்டும். இது போன்ற ஏடுகளையும் போலிப் பாடங்களையும் கண்டு மக்கள் ஏமாந்துவிடலாகாது. தமிழ் மொழியில் வேறு எந்த நூலிலும், இராமாவதார நூலைப்போல் பாட வேறு பாடுகள் காணப்படவில்லை. இவ்வாறு வேறுபாடுகள் தோன்றக் காரணம் என்ன ?

கம்பன் காவியம் பாடிய நாள் முதலே அந்நூலை யாவரும் விரும்பிக் கற்கத் தொடங்கினர். அந்நூல் சுரக்கும் இராமனது பரக்கும் தொல்புகழ் அமுதினை யாவரும் பருகுவாராயினர். கம்பனின் செஞ்சொற் கவியின்பம் யாவர் உள்ளத்தையும் கவர்ந்தது. சமயத் துறையிலுள்ளோரும் இராமாயணத்தை விரும்பிக் கற்றனர்; இலக்கியச் சுவையில் ஈடுபட்டோரும் அந்நூலை விரும்பிக் கற்றனர். சாதி சமய இன வேறுபாடின்றித் தமிழர் அனைவரும், முதியரும் இளையரும், பண்டிதரும் பாமரரும் படித்தனர். தாமாகவும் படித்தனர், கற்றுச் சொல்லவும் கேட்டனர். சைவரும் கற்றனர், வைணவரும் கற்றனர், பிற சமயத்தோரும் கற்றனர். ஊர்தோறும் இராக் காலங்களில் பௌராணிகர்களைக் கொண்டு கம்ப ராமாயணத்தைப் பாடிப் பொருள் நயங்களை விளக்கச் செய்தனர். இது நாவலர் பாவலர்களுக்கு நல்ல பொருள் வருவாயையும் அளித்தது. அதனால் தமிழ் நாட்டில் பல புலவர்கள் சுவடி பாராமல் ஒப்பிக்கும் அளவுக்குக் கம்பன் நூலை மனப்பாடம் செய்து வைத்திருந்தனர். குமர

குருபரர் போன்ருேர் வட நாட்டுக்கும் சென்று கம்ப ராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி மக்களைக் களிப் பூட்டியதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு கம்ப ராமா யணம் முழுதையும் மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டு ஊர்தோறும் சென்று பிறருக்கு எடுத்து உரைத்துப் பொருளும் புகழும் ஈட்டி வந்த பௌராணிகர்கள் கற்றுச் சிறந்த புலமை மிக்கோராயும் இருந்தார்கள். அவர்கள் பல பாடல்களைக் கம்ப சூத்திரங்கள் என்று தங்கள் அறிவுத் திறமை கொண்டு விளக்கம் காட்டி வியப்பூட்டி மக்களை மகிழச் செய்தனர். அவ்வாறு செய்யும்பொழுது இடையிடையே தங்கள் சொந்தச் சரக்குகளையும் கம்பன் காவியத்தில் கலப்பாராயினர். இவ்வாறு புலவர்களுக்குள் ஒருவரையொருவர் மிஞ்சக் கருதி ஏற்பட்ட போட்டியால் மூலபாடம் உருமாறிக் கொண்டே வரலாயிற்று.

இப்புலவர்கள், நினைவிலிருந்து சொல்லி வந்த மூல பாடத்தை அவர்களைச் சூழ்ந்திருந்த கற்றுச் சொல்லிகள் ஏட்டுச் சுவடிகளில் எழுதி எழுதிப் படிகள் எடுத்து வந்தனர். அவற்றில் மறதியாலும், அறியாமையாலும், அகந்தையாலும் பல தவறுகள் ஏற்படலாயின. பாட வேறுபாடுகள் பல்கின. தம்மால் ஏற்படும் பிழையை ஒத்துக்கொள்ள மனமில்லாதோர், அப்பிழைக்கு ஏற்ப மற்றும் சில நல்ல உண்மைப் பாடங்களை வேண்டுமென்றே திருத்தி எதிரிகளை ஏமாற்றித் தமது அறிவின்ஆற்றலை நிலை காட்டத் தலைப்பட்டனர். படித்தவன் பாட்டைக் கெடுத் தான்; எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்ற நிலை ஏற்பட்டது.

அச்சுயந்திரம் வருமுன் நூல்கள் ஓலைச் சுவடியில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டன. அப்படி எழுதும் போது ஒற்றெழுத்துக்களுக்குத் தலையில் புள்ளியிடுவதும்,

எகர ஏகார, ஒகர ஓகார உயிர்களுக்கும் உயிர்மெய் களுக்கும் வேற்றுமை தெரியும்படி வரிவடிவு அமைப்பதும், கா, சா—முதலிய உயிர்மெய்களில் நெடில் என்று காட்டும் குறியீடாகிய (ா) காலுக்கும் இடையின ரகரத்திற்கும் வேறுபாடு தோன்றும்படி எழுதுவதும் இல்லை. மற்றும், பக்கம் என்பது பக்கம எனவும், கோல் என்பது கொல எனவும், தரம் என்பது தாம எனவும் எழுதப்பட் டிருக்கும்.

பெரும்பாலும் ஒத்த ஒலியுடைய ல, ழ, ள என்ற எழுத்துக்களும், ந, ன என்பனவும், ர, ற என்பனவும் ஒன்றிருக்க வேண்டிய இடத்தே மற்றொன்று இருக்கு மாறும் எழுதப்பட்டிருக்கும். அன்றியும், பெரும்பாலும் ஒத்த வடிவுடைய எழுத்துக்களாகிய க, ச, த என்னும் எழுத்துக்களை முன்னே யுடைய சொற்கள், கலம்-சலம் என்றும் தலம் என்றும் படிக்கப்பட்டும், கரம்-சரம் என்றும் தரம் என்றும் படிக்கப்பட்டும், தலை-கலை என்று படிக்கப்பட்டும் பிழைபட எழுதப்படுவதுண்டு. பழம்-பளம் எனவும், வாழை-வாளை எனவும், சிறப்பும் பொதுவு மாகிய வேற்றுமை தெரியாதாராலும், வேற்றுமை தெரி யாதார் படிக்கக் கேட்டவராலும் எழுதப்பட்டுப் பிழை படுவதும் உண்டு. போற்றினான்-போத்தினான் எனவும், சாற்றினான்-சாத்தினான் எனவும், ஏற்றினான்-ஏத்தினான் எனவும் தம்முள் மாற்றி எழுதப்பட்டிருக்கும். நன்கு கற்றவர்களே யன்றிச் சிறிது பயின்ற அளவில் நன்கு எழுதப் பழகிக் கொண்டவர்களும் நூல்களைக் கூலிக்கு எழுதுவாராயினர். சிறிது பயின்றவர்கள் எழுதும் பொழுது தாமே மூலநூற் சுவடிகளைப் பார்த்து எழுது வதும், பிறர் படிக்கக் கேட்டு எழுதுவதும் உண்டு. இவ்வாறு பிழைகள் ஓலைச் சுவடிகளிற் புக இடம் உண்டு இனிப் பாட மாற்றம் வந்தவாறு கவனிப்போம்.

ஒற்றெழுத்துக்களுக்குத் தலையிற் புள்ளி வைப்பதில்லை என்றோம் அல்லவா? கா கோ முதலிய நெட்டெழுத்தின் குறியீடாக (ா) காலுக்கும் ரகரத்துக்கும் வேற்றுமை தோன்ற எழுதுவதில்லை. அந்த முறையில் ஒரு பாட வேறு பாடு வருமாறு; பேர்வான் என்பது ஏட்டில் **பொவான** என்று எழுதப்பட்டிருக்கும். இதனை, **போவான்** எனவும் பேர்வரன் எனவும் பேர்வான் எனவும் படிக்கலாம். ஆயி னும் இடத்திற்கு ஏற்றவாறு பொருள் அமையும்படி படிக்கவேண்டும். எடுத்துக்காட்டாகக் கம்பனிலிருந்து ஒன்று காட்டுவோம். யுத்தகாண்டம் இரணியன் வதைப் படலம் 129-ஆம் செய்யுளில், "பேரடா நின்ற தாளோடு உலகெலாம் பெயரப் போவான்" என்று அச்சுப் புத்தகங் களில் உள்ளது. இவ்வடிவின் ஈற்றிலுள்ள போவான் என் பது, ஒருவாறு பொருளியைபு உடையது போற் காணப்படி னும், அச்சொல்லை, பேர்வான் என்றும் ஏட்டெழுத்து முறையிற் படிக்கலாமன்றோ? அவ்வாறு கொண்டு, "பேரடா நின்ற தாளோடு உலகெலாம் பெயரப்பேர்வான்" என்று படிக்குங்கால், மோனைநயமும் பொருட்சிறப்பும் எத்துணை மிகுகின்றன என்பது சொல்ல வேண்டுவதன்று. மேலும் பேர் என்ற மூலம் ஒன்றையே கொண்டு, பெயரப் பேர்வான் என எச்சமும் முற்றும் தோன்ற அமைத்த நய மும் நோக்குங்கால், போவான் என்பது பேர்வான் என்றே படிக்கப்பட வேண்டும் என்பது புலப்படும்.

இனி, போவான்—போனான், செல்வான்—சென்றான், சொல்வான்—சொன்னான் என்பன போல்வன, சீர் முறை யில் ஒத்த அளவுடையன. ஆதலின், நினைவுகொண்டு எழு துங்கால், போவான்—போனான் எனவும், செல்வான்— சென்றான் எனவும் சொல்வான்—சொன்னான் எனவும் மாறி வருதலும் உண்டு. இது போன்று ஒத்த ஓசையுடைய சொற்களாலும், ஒத்த ஓசையுடைய வேற்றுமை உருபு

களாலும், அரச, நிருப போன்ற ஓத்த ஓசையுடைய பரியா யச் சொற்களாலும், பொருள் தெரியாமையால் பொருள் தெரியும்படி நேடும்—தேடும் என்பன போன்று மாற்றி யமைப்பதாலும், மலை, கிரி, வரை போன்ற ஒத்த சீருடைய பரியாயச் சொற்களாலும் பாட பேதங்கள் ஏற்படுவதும் உண்டு.

இனி வேண்டுமென்றே மாற்றிய பாட வேறுபாடுகளை நோக்குவோம். பாலகாண்டம், திருவவதாரப் படலத்திற் கண்ட ஒரு வேறுபாடு நோக்கத் தக்கது. அரக்கர் கொடு மைக்கு ஆற்ருத அமரர்கள் முதலில் சிவனிடம் சென்று முறையிட்டனர் என்பதைக் குறித்த பாடல் வருமாறு:

“ சுடுதொழி லரக்கராற் றுலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் யாமினி
அடுவதில் லெனமறுத் தவரொ டேகினுன்”

இப்பாடல் பல ஏட்டுச் சுவடிகளிலும் அச்சுப் புத்தகங்களி லும் இவ்வாறே காணப்படுகிறது. தேவர்கள் முதலில் சிவ னிடம் சென்று முறையிடுதற்குரிய காரணத்தை, “கடுவமர் களன்” என்ற சொற்களால் கம்பன் நன்கு புலப்படுத்து கிருன். திருமால், பிரமன், இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் தோற்ருேடும்படி உலகையே வாரி விழுங்கிய ஆலகால நஞ்சினைச் சிவன் வாரி விழுங்கித் தேவர்களையும் யாவர்களையும் காத்தருளினுன் அல்லவா? அந்த ஆற்றலை யும் முதன்மையையும் உதவியையும் எண்ணி நன்றியறித லோடு, தேவர்கள் சிவன் திருவடியை வணங்கி முறையிட் டனராம். “படுபொருள் உணர்ந்த அப்பரமன்” என்று சிவ னைக் கம்பன் சிறப்பிக்கிருன், ஆனுல் ஈற்றடி, ‘அடுவதில் லெனமறுத் தவரொ டேகினுன்’ என்று இருக்கிறது எங்கே ஏகினுன் என்று இடத்தைச் சுட்டாமல், வெறு

மனே ஏகினன் என்று கம்பன் பாடுவானா? ஏகின இடத்தை அடுத்த பாடல் நிகழ்ச்சி கொண்டு குறிப்பிற் பொருளுணர வைப்பது முறையா? அடுத்த பாடலில் சிவன் சென்று பிரமன் காலில் விழுந்து முறையிட்டான் என்று வந்துள்ளது. அவரோடேகிய சிவன் மட்டும் தான் பிரமன் காலில் விழுந்தானா? அவர் என்ற தேவர்கள் என்ன ஆனார்கள்? அவர்கள் பிரமன் காலில் விழவில்லையா? சிவன் சென்று அவ்வாறு முறையிடக் காரணமே இல்லை. இராவணனுக்கு நாளும் வாளும் கொடுத்து ஊற்றம் பெறச் செய்தவன் சிவன். இராவணன் ஒரு சிறந்த சிவபக்தன். அவனால் சிவனுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படவில்லை. சிவன் அவ்வாறு முறையிட்டிருக்க முடியாது. கம்பன் இப்படிப் பாடமாட்டான். இங்குக் கிடைக்கக் கூடிய பாடவேறு பாடுகளையும் அச்சுப் புத்தகங்கள் காட்டவில்லை. ஆனால் இரண்டு பழைமையான நல்ல நம்பத் தகுந்த ஏடுகளில் ஈற்றடி வேறு பாடம் கொண்டு திகழ்கிறது. "அடுகில மாயனோடுறைதி ரென்னவே" என்பது அந்தப் பாடம். 'திருமாலினிடம் சென்று கூறுங்கள்' என்று மேல்நடக்க விருப்பவற்றையறிந்த சிவன் கூறினான் என்பது மிகப் பொருந்துவதாகும். இதனை யடுத்து ஒரு பாடல் அந்த இரண்டு சுவடிகளிலும் காணப்படுகிறது:

"கறைமிடற் றிறைசொலக் கடவு ளோர்களும்
மறைதெரி முனிவரும் வச்சி ராயுதத்
திறைவனும் வணங்கிநின் றெழுந்து போந்துயர்
நிறைமல ரவனிட நண்ணன் மேயினர்."

இது கதைத் தொடர்ச்சிக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. ஆனால் சிலர் இப்பாட்டை வேண்டுமென்றே மறைத்துவிட்டு 'அவரோடேகினன்' என்று முன் பாட்டைத் திருத்தினார்கள். சிவனையும் தேவர்களோடு இழுத்துச் செல்லக் கருதிய பின்வந்தோர் இம்மாற்றத்

தைச் செய்தனர். பின்வரும் பாடல்களில் இந்திரனைப் பற்றிய குறிப்பையெல்லாம் சிவமயமாக்கினர். பின்னர், திருமாலின் முன்னர் தேவர்கள் தாம் பிறக்கப் போகும் முறையைக் கூற வந்த இடத்து, வாயு அநுமனாகப் பிறப்பேன் என்றான். பிறப்பேயில்லாத சிவனையும் திருமால் முன்கொண்டு நிறுத்திய இடைச் செருகற்காரர்களுக்குச் சிவனை என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் அவனைச் சும்மா விடலாமா? அவனையும் வாயு புகுந்த அநுமானுக்குள்ளேயே வைத்து அமுக்கி விட்டார்கள். அச்சுப் புத்தகங்களில் அப்பாடல் வருமாறு:

"வாயுமற் றெனதுகூறு மாருதி யெனலு மற்றோர்
காயுமர்க் கடங்க ளாகிக் காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தோ மென்றார் புராரிமற் றியானே வாத
சேயெனப் புகன்றான் மற்றைத் திசையுளோர்க் கவதி
யுண்டோ."

ஒருவனுக்குள்ளே இருவர் புகுந்தார் என்பது எங்கும் இல்லாத ஆச்சரியம் அல்லவா? இதனால் கம்பன் பாடலுக்குள்ளே ஒரு கொம்பனும் புகுந்திருக்கிறான் என்பது தெரியவரும். இப்பாடலின் உண்மையான பாடம் அவ்விரண்டு சுவடிகளிலும் வருமாறு:—

"வாயுமற் றெனது கூறு மாருதி யெனலு மற்றோர்
காயுமற் கடங்க ளாகிக் காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தோ மென்றார் புயல்வண்ண னாதி
வானோர்
மேயின ரென்னி லிந்த மேதினிக் கவதி யுண்டோ."

இங்கே சிவன் தேவர்களோடு பிரமனிடத்தும் திருமாலினிடத்தும் சென்றானா? இல்லையா? என்பது கேள்வி. "அடுகில மாயனோடு அறைதிர் என்னவே" என்பது ஒரு பாடம். அடுகிலம் என மறுத்து அவரொடு ஏகினான்"

என்பது ஒரு பாடம். இவற்றுக் கேற்பப் பின்னுள்ள இருபது பாடல்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றுள் எது உண்மையான பாடம்? கம்பன் எவ்வாறு பாடியிருப்பான்? என்பதை நாம் கூர்ந்து ஆராயவேண்டும். இரண்டு ஏடுகளில் மட்டுமே சிவன் ஏகவில்லை என்று காணப்படுகிறது. மற்ற எல்லா ஏடுகளிலும் சிவன் ஏகினுன் என்றே உள்ளது. இது சில ஏடு எழுதுவோர் செய்த மாற்றமேயாகும். அதற்கேற்ற பாடங்கள் சிவனைத் திருமாலின் முன் விழுந்து பணிந்து எழுந்துநின்று குறைபடும்படியாகச் செய்து, அம்முறையால் திருமாலுக்கு ஓர் ஏற்றம் கற்பிப்பதற்காகப் புகுத்தப்பட்டவையாகும் சைவ மக்களின் மனங்களைப் புண்படுத்துபவையாகவும் தெரிகின்றன. இது கம்பனுடைய கொள்கைக்கு ஒவ்வாத தொன்று. திருமாலுக்கு இயல்பாகவே உள்ள சிறப்பு என்றும் அழியாதது. அதற்காக இத்தகைய வேண்டாத வழிகளை ஒரு சிலர் கையாண்டிருப்பது வருந்தத்தக்கது. சிவபெருமானைக் குறைப்படுத்தித்தான் திருமாலுக்கு ஏற்றம் ஊட்டவேண்டும் என்பதில்லை.

இத்தகைய கட்டங்களில் நாம் காய்தல் உவத்தல் இன்றி உண்மையைக் காணவேண்டும். கம்பனுடைய கருத்தையும் போக்கையும் நாம் காவியம் முழுவதிலும் தொடர்ந்து சென்று காணும்போது, எந்தச் சமயத்தையும், எந்தக் கடவுளையும் எவ்விதத்திலும் இழிவுபடுத்த வேண்டும் என்பது அவன் எண்ணமாகத் தோன்றவில்லை. பல சமயங்களுடைய பொதுமையையும் ஒருமையையும் அவன் ஆங்காங்கு எடுத்துக் கூறத் தயங்கியதில்லை. "அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்குப், பரகதி சென்றடைவரிய பரிசேபோல்" என்று கிட்கிந்தா காண்டம், நாடவிட்ட படலத்தில் சிறப்பாகப் பாடிய கவிஞன், இவ்வாறு சிவனைக் குறைவுறப்

புகுத்திப் பாடியிருக்கமாட்டான் என்பது திண்ணம். மேலும், இராமனைத் திருமாலின் அவதாரம் என்று கொள்ளாமல், "சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து தொல்லை ஆலமு மலமும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்" என்று மூவரின் அவதாரமாகவே முழங்கி மகிழ்கின்றான். மற்றும், கம்பன் சிவனிடத்தில் அதிகப் பற்றும் மதிப்பும் கொண்டவன் என்பதற்கும், சிவனுடைய இயல்புகளை நன்கு விரிவாக உணர்ந்திருந்தான் என்பதற்கும் சான்றாக நூற்றுக்கணக்கான குறிப்புகளை இராமாவதார நூலிற் காணலாம். மேலும், அஞ்சிலே யொன்று பெற்றானாகிய அநுமனை வாதசேய், காற்றின் மைந்தன் என்று கூறுவதுபோல், சிவன்சேய் என்றோ, சிவன் அம்சம என்றோ, சிவன்கூறு என்றோ, நூலில் வேறு எங்கும் கூறப்படவில்லை. இதிலிருந்தே மேலே குறித்த மாற்றங்கள் அதிகமான ஏடுகளிற் காணப்பட்டாலும், அவை இடைச்செருகல் என்பது நன்கு தெரியவரும். வான்மீகத்திலும் இதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. அங்கு ஏகாதசருத்திரரைக் குறித்துள்ளாரே தவிர, சிவன் திருமாலிடம் சென்றதாகவாவது, குறையிரந்ததாகவாவது, அநுமனாகப் பிறந்ததாகவாவது யாதொரு குறிப்பும் கிடையாது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட இராமாவதாரப் பதிப்பில்தான் இவ்வுண்மைகள் முதன் முதலாகக் கண்டு உலகிற்கு வெளியிடப்பட்டன. இவைபோல் ஆயிரக்கணக்கான திருந்திய நல்ல உண்மையான கம்பன் பாடங்கள் இன்னும் நமக்குக் கிடைக்கவிருக்கின்றன.

MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL ... TANJORE